விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே



# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com
சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2046 மார்கழி 13 செவ்வாய்க்கிழமை (29.12.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 010

# தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க அரசு முயற்சி!

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு



(கொழும்பு)
போர்க்குற்ற விசாரணை மாத்திரமே தமிழ் மக்களின் பிரச்சினை என்றால் அதற்குத் தீர்வு பெற்றுக்கொடுப்பது கடினமான ஒன்றல்ல. ஆனால் அதையும் தாண்டி தமிழ் மக்களின் உரிமைகளை வென்று கொடுக்க வேண்டும் என்றே அரசாங்கம் முயற்சிக்கிறது என அமைச்சரவை பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்தன தெரிவித்தார். (23ஆம் பக்கம் பார்க்க)

## 2020இல் மைத்திரிபால பிரதமர் பதவிக்கு போட்டி



(கொழும்பு)
2020ஆம் ஆண்டில் தாம் பிரதம மந்திரி பதவிக்கு போட்டியிடலாம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சூசகமாக தெரிவித்துள்ளார்.
அரசியல்வாதிகளுக்கு சமூக இணைப்பில் இருந்து விடுபட முடியாது.
எனவே தாம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை நீக்கப்பட்டாலும் அரசியலில் இருந்து ஒதுங்கியிருக்கப் போவதில்லை என்று மைத்திரிபால சிங்கள ஊடகம் ஒன் 23ஆம் பக்கம் பார்க்க....

## புதிய கட்சி உருவாகுவதை யாராலும் தடுக்க முடியாது

### முன்னாள் ஜனாதிபதி மகிந்த உறுதி



(கொழும்பு)
கட்சிகளில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களை விரட்டினால், அவர்களை இணைத்து புதிய அரசியல் கட்சியை உருவாக்குவதை எவராலும் தடுக்க முடியாது போகும் என நாடாளுமன்ற உறுப்பினரான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
ஊருபொக்க, ஹெரகஸ் மண்டிய பிரதேசத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அலுவலகம் ஒன்றை திறந்து வைத்த பின்னர், ஊடகவியலாளர்கள் 23ஆம் பக்கம் பார்க்க....

## 24 எம்.பிக்கள் வெளியேறத்தடை

(கொழும்பு)
நல்லாட்சி அரசாங்கம், தான் உட்பட 24 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாட்டில் இருந்து வெளியேற தடைவிதித்துள்ளதாக என நாடாளுமன்ற உறுப்பினரான முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
மாத்தறை, மாவரல ஸ்ரீ முத்துமாரிஅம்மன் ஆலயத்தில் நடைபெற்ற பூஜையில் கலந்து கொண்டு பேசும் போதே அவர 23ஆம் பக்கம் பார்க்க....

## வித்தியா கொலை வழக்கு சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)
புங்குடுதீவு பாடசாலை மாணவி வித்தியா படுகொலைச் சந்தேக நபர்களான 5ஆம், 6ஆம், 10 ஆம் சந்தேக நபர்களை கொழும்பு மகசின் சிறைச்சாலைக்கு மாற்றி விசாரணை மேற்கொள்ளுமாறு உத்தரவிடப்பட்டுள்ளதுடன்.
சந்தேக நபர்கள் 10 பேரையும் எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதவான் எஸ்.லெனின்குமார் உத்தரவிட்டார். 23ஆம் பக்கம் பார்க்க....


## மகிந்த கால ஆட்சிவரை மகாவம்சத்தில் இணைப்பு?

(கொழும்பு)
முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர்.ஜெயவர்த்தன காலம் முதல் மகிந்த ராஜபக்ஷவின் காலம் வரையான பகுதிகள் மகாவம்சத்தில் மேலதிக இணைப்பாக இணைத்துக் கொள்ளப்பட்டு அச்சிடப்படவுள்ளன.
இதற்கான முயற்சிகள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தன.
இதன்படி 1978ஆம் ஆண்டு முதல 2010ஆம் ஆண்டு வரை ஜனாதிபதிகளாக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ஆர்.பிரேம 23ஆம் பக்கம் பார்க்க....

## கடலில் படகு கவிழ்ந்து மீனவர் உயிரிழப்பு

### ஒருவரைக் காணவில்லை





(பருத்தித்துறை)
பருத்தித்துறை, முனைக்கடலில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை படகு மூழ்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், ஒருவர் காணாமற்போயுள்ளதாக பருத்தித்துறை முனை மீனவர் சங்கம் தெரிவித்தது.
முனைப் பகுதியைச் சேர்ந்த அந்தோனிப் 23ஆம் பக்கம் பார்க்க....

## முகமூடிக் கொள்ளையர்களால் 129 பவுண் நகை கொள்ளை

### வடமராட்சியில் துணிகரம்

(கரணவாய்)
வடமராட்சி வதிரிப் பகுதியில் உள்ள இரண்டு வீடுகளுக்குள் புகுந்த நான்கு பேர் அடங்கிய முகமூடி அணிந்த கொள்ளையர் கூட்டம் அங்கிருந்த சுமார் 129 பவுண் பெறுமதியான தங்க நகைகளை எடுத்துச் சென்றுள்ளது.
இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக நெல்லியடி பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.
சம்பவம் தொடர்பாகதெரியவருவதாவது, 24ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கில் பல இடங்களில் இன்றும் மழை பெய்யும்

(யாழ்ப்பாணம்)
வடக்கில் இன்றும் ஆங்காங்கே தொடர்ச்சியாக மழை பெய்யும் என திருநெல்வேலி வானிலை அவதானிப்பு நிலைய பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,
யாழ் மாவட்டத்தில் நேற்றைய தினம் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை 15.0 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.
நேற்றைய தினம் மாலை 5 மணிக்கு பின்னர் ஆங்காங்கே கடும் மழை 24ஆம் பக்கம் பார்க்க....

## இராணுவ தலைமை பதவிக்கு மூவரிடையே போட்டி

(கொழும்பு)
படைத்தரப்பின் தலைமை அதிகாரி பதவியை பெற்றுக் கொள்வதில படைத்தரப்பின் மூத்த அதிகாரிகளுக்கு இடையில் பலத்த போட்டி ஆரம்பித்துள்ளது.
படைத்தரப்பின் தலைமை அதிகாரியாகப் பணியாற்றிய மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் கடந்த வெளிக்கிழமை ஓய்வு பெற்றதை அடுத்து, இந்தப் பதவி வெற்றிடமாகவுள்ளது.
இந்தப் பதவிக்கு தெரிவு செய்யப்படக் கூடியவர்களில் கவசப் படைப்பிரிவைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் மிலிந்த பீரிஸ் முன்னணியில் இருக்கின்ற 24ஆம் பக்கம் பார்க்க....

## அன்டனோவ் மீது தாக்குதல் விசாரணை ஜனவரியில்

(கொழும்பு)
விடுதலைப் புலிகளால் அன்டனோவ் விமானம் ஒன்று ஏவுகணை தாக்குதலில் வீழ்த்தப்பட்ட சம்பவம் குறித்த வழக்கு விசாரணைகள் எதிர்வரும் ஜனவரி மாதம் 12-ம் திகதி முதல் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.
15 வருடங்களுக்கு முன்னர் படையினரை 23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ராஜீவ் கொலை வழக்கு கைதிகளை விடுதலை செய்ய வேண்டும்!

## ராமதாஸ் கோரிக்கை

(சென்னை)

ராஜிவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் 7 பேரையும் தமிழக அரசு 161 ஆவது சட்டப் பிரிவின் படி விடுதலை செய்ய வேண்டுமென பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 161 ஆவது பிரிவின் கீழ் எந்த ஒரு வழக்கின் கீழும் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனையை குறைப்பதற்கு, இடைநிறுத்துவதற்கு அல்லது ரத்து செய்வதற்கு ஆளுநருக்கு விரிவான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுனர் எஸ். ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

தமிழக மாநில அமைச்சரவையின் பரிந்துரையின் அடிப்படையிலேயே ஆளுநர் இந்த அதிகாரத்தை செயற்படுத்த முடியுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ராஜிவ் காந்தி கொலை வழக்கில் சாந்தன், முருகன்,பேரறிவாளன், நளினி ரவிச்சந்திரன், ஜெயகுமார், ராபர்ட் பயாஸ் ஆகிய எழுவர் ஆயுள்தண்டனை அனுபவித்து வருகின்றனர்.

இந்திய குற்றவியல் சட்டத்தின் 432 ஆவது பிரிவின் பிரகாரம் முருகன், சாந்தன், பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரையும் விடுதலை செய்ய தமிழக அரசுக்கு அதிகாரமில்லையென உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள நிலையில் அவர்களை விடுவிக்க 161 சட்டப் பிரிவை தமிழக அரசு பயன்படுத்த வேண்டும் என ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

எனவே தமிழக அரசு, பிறக்கவிருக்கும் புத்தாண்டில் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வரும் 7 பேரையும் விடுதலை செய்ய நடவடிக்கையெடுக்க வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## பயங்கரவாத சட்டத்தை நீக்குவது குறித்து ஆராய்வு

(கொழும்பு)

பயங்கரவாத தடைச் சட்டம் ரத்து செய்வது குறித்து ஆராயப்பட்டு வருவதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். எதிர்வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளுக்கு நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து தெளிவுபடுத்தப்பட உள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ரத்து செய்து வேறும் ஓர் சட்டத்தை எவ்வாறு அறிமுகம் செய்வது என்பது குறித்து ஆராயப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். இதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு பதலீடான சட்டமொன்றை அறிமுகம் செய்வது குறித்து சட்ட ஆணைக்குழுவினதும் கருத்தும் கோரப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும் அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டம் ரத்து செய்யப்படக்கூடிய சாத்தியம் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

# வறுமையை ஒழிப்பதே அடுத்த வருடத்தின் சவால்!

## ஜனாதிபதி உரை



(கொழும்பு)

நாட்டில் வறுமையை ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போது இதனைத் தெரிவித்துள்ளார்.

2016ஆம் ஆண்டில் வறுமையை ஒழிப்பதே பிரதான சவாலாகும்.

ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து ஓராண்டு கடக்க உள்ள நிலையில், இந்த காலப்பகுதியில் ஆற்றிய மக்கள் சேவை திருப்தி அளிக்கின்றதா என யாரேனும் கேட்டால் நான் ஆம் என்றே கூறுவேன். எனது சேவை மகிழ்ச்சி அளிக்கின்றது என்றே நான் கூறு வேன்.

நாட்டின் அடிப்படை பொருளாதார நிலைமைகள் மோசமாகவே காணப்படுகின்றன.

நீண்ட காலமாக எடுக்கப்பட்டு வந்த பிழையான பொருளாதார தீர்மானங்களே இதற்கான காரணமாகும். வறுமை ஒழிப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்தி என்பதே அடுத்த ஆண்டின் எமது பிரதான இலக்காகும்.

இலவசக் கல்வி மற்றும் சுகாதார சேவைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இளைஞர் சமூகத்திற்கு நல்லதொரு நாட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.(எ-11)

# விஜேயதாச ராஜபக்ஷவை அமைச்சரவையிலிருந்து நீக்க திட்டம்

(கொழும்பு)

அமைச்சரவையில் இருந்து விஜேயதாச ராஜபக்ஷ நீக்கப்படவுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

அமைச்சரவை எதிர்வரும் ஜனவரி மாத பிற்பகுதியில் மாற்றி அமைக்கப்படும் போது விஜேயதாச ராஜபக்ஷ அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்டு, நிதி அமைச்சராக கபீர் காசிம் நியமிக்கப்படவுள்ளதாக இவ்வூடகம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், தற்போதைய நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க வர்த்தக அமைச்சராக அல்லது நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சராக நியமிக்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை, இந்த அமைச்சரவை மாற்றத்தின் போது 10 அமைச்சர்களின் அமைச்சுக்களில் மாற்றம் செய்யப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (எ-11)

# அளவெட்டியில் ஆயுதக்குழு ஞாயிறன்று அட்டகாசம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி பகுதியீல் உள்ள வீடொன்றினுள் நேற்றுமுன்தினம் துப்பாக்கி சகிதம் உள்நுழைந்த ஆயுதக்குழு பெரும் அட்டகாசம் புரிந்து விட்டு தப்பி சென்றுள்ளது.

அளவெட்டி ஜெயா பிறஸ் சந்திக்கு அருகில் உள்ள வீடொன்றுக்கு ஞாயிறு இரவு 7.30 மணியளவில் துப்பாக்கி, வாள், இரும்பு கம்பிகள் , பொல்லுகளுடன் நான்கு மோட்டார் சைக்கிளில் வந்த குழுவினர் யன்னல் கண்ணாடிகள், வீட்டில் இருந்த பொருட்கள் மற்றும் வீட்டினுள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டி ஆகியவற்றை அடித்து நொருக்கியுள்ளது.

அதனால் அச்சமடைந்த வீட்டில் இருந்தவர்கள் அவல குரல் எழுப்பினர். அதையடுத்து அயலவர்கள் ஒன்று கூட ஆயுதகுழுவினர் தப்பிச்சென்றுள்ளனர். சம்பவம் குறித்து சுன்னாகம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.(எ-11)

## 24 பேர் கொண்ட குழு நியமனம்

(கொழும்பு)

அரசியல் அமைப்பு மறுசீரமைப்பு தொடர்பில் பொது மக்களின் கருத்தினை பெற்றுக கொள்வதற்காக 24 பேர் கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகளை உள்ளடக்கிய தான இந்த குழுவை பிரதமர் நியமித்துள்ளார்.

இந்த குழுவின் தலைவராக சட்டத்தரணி லால் விஜயநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதமர் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் இது குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-11)

டயானா பிளாஸ்டிக் மீள்சுழற்சி
பழைய பொலித்தீன் மற்றும் பழைய பிளாஸ்டிக் விலைக்கு வாங்கப்படும்.
TP: 021 222 8680,
077 592 5088
(சி-3042)

## ரயில் முன் பாய்ந்து இளைஞன் உயிரிழப்பு

(கொழும்பு)

கொழும்பிலிருந்து பதுளை நோக்கி பயணித்த புகையிரதத்தின் முன் பாய்ந்து இளைஞர் ஒருவர் பலியாகியுள்ளார்.

இந்த விபத்து நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் நாவலப்பிட்டி கலபொட புகையிரத நிலையத்திற்கும் தெஹிந்த புகையிரத நிலையத்திற்கும் இடையில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து பதுளை நோக்கி குறித்த புகையிரதம் சென்று கொண்டிருந்த வேளை தெஹிந்த புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் குறித்த இளைஞர் புகையிரதத்தின் முன் பாய்ந்துள்ளார்.

இதனால் உடல் நசுங்கி குறித்த இளைஞர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் ஹட்டன் புகையிரத நிலைய உத்தியோகத்தரிடம் அவரது சடலம் கையளிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை அறிந்த ஹட்டன் பொலிஸார் இளைஞரின் சடலத்தினை பொறுப்பேற்று மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எனினும் இவ்வாறு உயிரிழந்தவர் இன்னும் அடையாளம் காணப்படவில்லை என தெரிவிக்கும் பொலிஸார் இவர் 25 வயது மதிக்கத்தக்கவர் எனவும் தெரிவித்தனர். (எ-11)


## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

**சந்தைகள், இறைச்சிக் கடைகளுக்கான 01.01.2016 - 31.12.2016 வரையுள்ள காலப்பகுதிக்கான பகிரங்க ஏலக் கேள்வி அறிவித்தல்**

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச நிர்வாக எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தைகள் இறைச்சிக்கடைகள் என்பவற்றை 01-01-2016 தொடக்கம் 31-12-2016 வரை குத்தகைக்கு வழங்குவதற்காக பகிரங்க ஏலத்தில் விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏலம் 31-12-2015 காலை 10.30 மணிக்கு நடைபெறும்.
ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் தலைமை அலுவலகத்தில் கேள்வி வைப்புப் பணத்தினை செலுத்திப் பற்றுச்சீட்டினை 29-12-2015 தொடக்கம் 31-12-2015 வரை முற்பகல்10.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல | குத்தகை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | மாத வாடகை (வரிகள் நீங்கலாக) |
|---|---|---|---|
| | நெல்லியடி உப அலுவலகம் | | |
| 1 | கொட்டடிச்சந்தை | 500.00 | 100.00 |
| 2 | கோயிற்சந்தை மாட்டிறைச்சிக் கடை | 4000.00 | 100.00 |
| 3 | நெல்லியடி மாட்டிறைச்சிக் கடை | 7200.00 | 100.00 |
| 4 | கோயிற்சந்தை கோழியிறைச்சிக் கடை | 2300.00 | 100.00 |
| 5 | நெல்லியடிச் சந்தை கோழிக் கடை | 4850.00 | 100.00 |
| 6 | நெல்லியடி மீன் சந்தை | 6500.00 | |
| | உடுப்பிட்டி உப அலுவலகம் | | |
| 7 | அந்திரான் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 7400.00 | 100.00 |
| 8 | சாண்டா சந்தை கோழிக் கடை | 1000.00 | 100.00 |
| | கட்டைவேலி உப அலுவலகம் | | |
| 9 | துன்னாலை வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | 1000.00 | 100.00 |

இதற்கான ஏலக் கேள்வியில் கலந்து கொள்பவர்கள் கேள்வி வைப்பு பணத்தினை 31.12.2015 ம் திகதி காலை 10.00 மணிக்கு முன் செலுத்துவதுடன் , சித்திகரக் கேள்விக்காரர் உடனடியாக ஏலத் தொகையின் 1/3 பங்கு பாதுகாப்பு வைப்புப் பணம் , VAT, NBT ஆகியவற்றைச் செலுத்தி ஒப்பந்தம் செய்ய வேண்டும். பாதுகாப்பு வைப்புப் பணம் உடனடியாக செலுத்தத் தவறும் பட்சத்தில் அடுத்த கேள்விக்காரருக்கு குத்தகை வழங்கப்படும்.

**க.கனகதுரை**
**செயலாளர்,**
**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,**
**கரவெட்டி.**
**28-12-2015**

(C-3236)

# மக்களின் இதயத் துடிப்பினை இனம் காண்பது கடமையாகும்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



(கொழும்பு)

**மக்களின் இதயத்துடிப்பு பற்றி விழிப்புணர்வுடன் செயற்பட்டு அவர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குதல் அரசியல் வாதிகளின் கடமையாகுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

"காலு சமய 2015" கண்காட்சியை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று முந்தினம் பிற்பகல் காலியில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பல்வேறு மதங்களை பின்பற்றும், பல்வேறு மொழிகளை பேசும் மக்கள் மத்தியில் மாத்திர மன்றி அரசியல் தலைவர்கள், அரசியல் கட்சிகள் மத்தியிலும் இன்று நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட வேண்டுமென தெரிவித்த ஜனாதிபதி , நாட்டில் வேற்றுமையை விளைவிப்பதா அல்லது நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அனைவரும ஒன்றுபடுவதா என்பது பற்றி இன்று அனைவரும் தம் மனங்களை தொட்டு வினா எழுப்புதல் வேண்டு மெனவும் தெரிவித்தார்.

நாட்டு மக்களின் வறுமையை ஒழித்து, சுபீட்சமான பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக 2016 ஆம் ஆண்டில் பல்வேறு தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுமெனக் குறிப்பிட்ட ஜனாதிபதி , இலவச சுகாதாரம் மற்றும் இலவசக் கல்வி ஆகியவற்றை வலுவடையச் செய்வதற்கும் விவசாய நாடு என்ற ரீதியில் தேசிய பொருளாதாரத்தை வலுவடையச் செய்து, நாட்டை முன்னேற்றுவதற்கும் புது வருடத்தில் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்துவதாகவும் தெரிவித்தார். ஓராண்டுக்குள் நிறைவேற்றப்பட்டவைகள் தொடர்பாக திருப்தியடைய முடியுமா என்ற ஒரு சிலரின் கேள்விக்கு நேரடி விடையாக ஆம் என்றே கூற முடியுமென தெரிவித்த ஜனாதிபதி,

கடந்த ஓராண்டுக்குள் அரசினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை இந்நாட்டு மக்களின் வயிறுகள் உணராதபோதும், மக்களுக்குத் தேவையான சுதந்திரம், ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் என்பவற்றை பாதுகாத்து நாட்டின் நல்லாட்சி மற்றும் கலங்கமற்ற தன்மை ஆகியவற்றை நிலைநாட்டி, ஊழல் மோசடிகள மற்றும் முறைகேடு களை இல்லாதொழித்து, நாடு என்ற ரீதியில் பயணிக்க வேண்டிய சரியான பாதையில் காலடி எடுத்து வைக்கும் செயன்முறையினை மக்கள் உணர்ந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## துமிந்த சில்வாவுக்கு எதிராக வழக்கு தாக்கல்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழு நேற்று இரண்டு வழக்குகளை தாக்கல் செய்துள்ளது.

துமிந்த சில்வாவுக்கு எதிரான இந்த இரண்டு வழக்குகளை கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாக ஆணைக்குழுவின் விசாரணைப் பிரிவு பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

2013, 2014 ஆம் ஆண்டுகளில் தனது அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் தொடர்பான விபரங்களை வழங்காதமைக்கு எதிராகவே ஆணைக்குழு இந்த வழக்குகளை தாக்கல் செய்துள்ளது. (இ-7)

## பிரதமர் ரணிலும் மகிந்தவும் போட்டிக்கு கோப்பி விருந்து

### சம்பிக்க விசனம்

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஆளாளுக்கு கோப்பி விருந்து அளித்துக் கொண்டிருப்பதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இதனை அவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் முகத்துக்கே நேரே தெரிவித்து ரணிலைக் கிண்டல் அடித்துள்ளதாக தெரியவருகின்றது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பின் பின்னர் நாடாளுமன்றத்தை விட்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளியேறிய போது அமைச்சர் சம்பிக்க ரணவக்க அவரை நெருங்கிச் சென்றுள்ளார்.

பிரதமர் அவர்களே, நீங்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது அன்றைய ஜனாதிபதி மகிந்தவை அடிக்கடி சந்தித்து அவர் தரும் கோப்பியை பருகிவிட்டு வருவீர்கள். இப்போது ஆட்சி மாற்றம் நடந்துள்ளது.

நீங்கள் பிரதமராகவும், மகிந்த எதிர்க்கட்சியின் சாதாரண நாடாளுமன்ற உறுப்பினராகவும் மாறி விட்டீர்கள். ஆனாலும் உங்கள் கோப்பி விருந்து இன்னும் முடிந்தபாடில்லை.

தற்போது மகிந்த உங்களைத் தேடி வருகின்றார். நீங்கள் அவருக்கு கோப்பி விருந்து அளிக்கின்றீர்கள் என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க பிரதமர் ரணிலைக் கிண்டல் அடித்துள்ளார்.

இதற்கு எதுவித பதிலும் அளிக்காத பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, புன்சிரிப்புடன் அமைச்சர் சம்பிக்கவைக் கடந்து சென்றுள்ளார். (இ-7)

## தனிவழிப் பயணம் தொடர்பில் இன்னும் முடிவெடுக்கவில்லை

### மகிந்த அணி அறிவிப்பு

அடுத்த வருடம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தனித்துக் களமிறங்குவதற்கு தினேஷ் குணவர்தன தலைமையிலான பொது எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் சில கட்சிகள் தீர்மானித்துள்ளன.

இருப்பினும் கூட்டணிஎனற வகையில் அவ்வாறானதொரு தீர்மானத்தை இன்னும் எடுக்கவில்லை என அதன் பங்காளிக் கட்சியான பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில எம்.பி. தெரிவித்தார்.

இதேவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தலை இலக்காகக்கொண்டு பொது எதிர்க்கட்சியால் புதியதொரு கூட்டணி உருவாக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மகிந்த தலைமையில் எமது ஸ்ரீலங்கா சுதந்திர முன்னணி என்ற புதிய கூட்டணி அமைத்து பொது எதிர்க்கட்சி போட்டியிடவுள்ளதாக வெளியாகியுள்ள தகவல் குறித்து வினவியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"புதிய கூட்டணியை (எமது ஸ்ரீலங்கா சுதந்திர முன்னணி) அமைத்து அடுத்த வருடம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து எந்தத் தீர்மானத்தையும் நாம் இதுவரை எடுக்கவில்லை. ஆனால், அவ்வாறு செய்திகள் வெளியாகியுள்ளன.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடாது தனித்துப் போட்டியிடுவது தொடர்பாக பொது எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் சில கட்சிகள் தனித்துப் போட்டியட விரும்புகின்றன. நானும், தனித்துப் போட்டியிடுவதையே விரும்புகின்றேன். இருப்பினும், இது தொடர்பாக பொது எதிர்க்கட்சி இன்னும் முடிவெடுக்கவில்லை. தேர்தல் தொடர்பான அறிவிப்பு வெளியானதன் பின்னரே நாம் முடிவெடுப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இறக்குமதிப்பொருட்களை சோதனையிட அதிநவீன தொழில் நுட்பம் அறிமுகம்!

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் பொருட்களை சோதனையிடுவதற்கு கொழும்பு துறைமுகத்தில் அதிநவீன தொழில் நுட்பம் அறிமுகம் செய்யப்பட்டவுள்ளது.

அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஸ்கானர் கருவிக் கட்டமைப்பு ஒன்று கொழும்பு துறைமுகத்தில் பொருத்தப்படவுள்ளதாக இலங்கை சுங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக இந்த அதிநவீன ஸ்கானர் கருவிக் கட்டமைப்பு கொழும்பு துறைமுகத்தில் பொருத்தபபடவுள்ளது.

2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் இக்கருவி கட்டமைப்பு மூலம் அனைத்து கொள்கலன்களும் முழு அளவில் சோதனையிடப்படவுள்ளன.

புதிய தொழில்நுட்பத்தின் ஊடாக நாட்டுக்குள் கொண்டு வரப்படும் பொருட்களை இனம் காண்பதற்கும் சட்டவிரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவும் முடியும் என சுங்கத் திணைக்கள அதிகாரிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

உலகின் அபிவிருத்தி அடைந்த அனைத்து நாடுகளிலும் துறைமுகங்களில் இவ்வாறான அதிநவீன ஸ்கானர் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

இந்தக் கருவி பொருத்தப்படும் இடத்தை அண்மையில் துறைமுக அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க மற்றும் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோர் பார்வையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## விபத்தில் சிக்கிய இளைஞன் வைத்தியசாலையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

சைக்கிள்-மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கிய இளைஞன் ஒருவர் தலையிலும் கையிலும் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதில் மானிப்பாயைச் சேர்ந்த சிறிதரன்- சிறிகாந்தன் (வயது- 25) என்ற இளைஞரே இவ்வாறு அனுமதிக்கப்பட்டவராவார். நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் பிரஸ்தாப இளைஞர் மானிப்பாய் வீதியூடாக சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது பின்னால் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர் ஒருவர் மோதியதால் மேற்படி விபத்துச் சம்பவம இடம்பெற்றது. (இ-5-30)

## ஒரே பாடசாலையில் 10 ஆண்டுகளுக்கு மேல் கடமையாற்ற அதிபர்களுக்கு அனுமதியில்லை

### கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

அதிபர்கள் ஒரே பாடசாலையில் பத்து ஆண்டுகளுக்கு மேல் கடமையாற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது என கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

ஹற்றனில் நேற்று முந்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஒரே பாடசாலையில் தொடர்ச்சியாக பத்து ஆண்டுகள் கடமையாற்றிய அதிபர்கள் எதிர்வரும் ஆண்டில் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.


சில பாடசாலைகளில் மேலதிகமாக கடமையாற்றி வரும் ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படுவார்கள்.

எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு முதலாம் தவணையில் இந்த இடமாற்ற உத்தரவுகள் அமுல்படுத்தப்படும்.

சில நகரப் பாடசாலைகளில் மேலதிகமாக ஆசிரியர்கள் கடமையாற்றி வருவதுடன், பின் தங்கிய பிரதேசங்களில் ஆசிரியர்களுக்கு ஆளணிப் பற்றாக்குறை நிலவி வருகின்றது.

இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் கல்வித்துறைக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியைப் பயன்படுத்தி மேலும் சேவைகளை ஆற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

பாடசாலை சீருடை வவுச்சர் தொடர்பில் நிலவி வந்த பிரச்சினைகளுக்கு அடுத்த ஆண்டு முழு அளவில் தீர்வு வழங்கப்படும் என அமைச்சர் இராதாகிருஸ்ணன் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)




## மெல்போர்ன் டெஸ்ட்

# அவுஸ்திரேலியா ஆதிக்கம் தடுமாறும் கரீபியன்ஸ்

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான 2 ஆவது டெஸ்ட் போட்டியின் 3ஆம் நாள் முடிவில் அவுஸ்திரேலியா வலுவான நிலையில் உள்ளது.

அவுஸ்திரேலியா-மேற்கிந்திய தீவுகள்



அணிகள் மோதும் 2ஆவது டெஸ்ட் போட்டி மெல்போர்ன் நகரில் நடந்து வருகிறது.

முதல் இன்னிங்சில் அவுஸ்திரேலியா 3 விக்கெட்டுக்கு 551 ரன்னுக்கு டிக்ளேர் செய்தது.

பின்னர் முதல் இன்னிங்சை விளையாடிய மேற்கிந்திய தீவுகள் அணி நேற்றுமுன் தினம் 2ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் 6 விக்கெட்டுக்கு 91 ரன் எடுத்து தத்தளித்தது. நேற்று 3ஆம் நாள் ஆட்டம் நடந்தது.


மேலும் சில ரன்கள் சேர்ப்பதற்குள் மேற்கிந்திய தீவுகள் ஆல் அவுட் ஆகும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் டேரன் பிராவோவால் அந்த அணி 271 ரன்கள் சேர்த்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. டேரன் பிராவோ 81 ரன் எடுத்து கடைசி விக்கெட்டாக வீழ்ந்தார்.

மேற்கிந்திய தீவுகள் பாலோ ஆன்-ஐ தவிர்க்க 352 ரன் எடுத்திருக்க வேண்டும். ஆனால அந்த அணிக்கு அவுஸ்திரேலியா பாலோ ஆன் கொடுக்கவில்லை. 280 ரன் முன்னிலையுடன் 2ஆவது இன்னிங்சை அவுஸ்திரேலியா விளையாடியது.

முதல் இன்னிங்சில் சதம் அடித்த பர்ன்ஸ் 4 ரன்னில் வெளியேறினார். வார்னர் 17 ரன்கள் எடுத்தார். ஆனால் கவாஜா சிறப்பாக விளையாடி 56 ரன்கள் சேர்த்தார். அதன்பின் வந்த கப்டன் ஸ்மித் 3-வது நாள் ஆட்டம் முடிவில் 70 ரன்கள் எடுத்து களத்தில் இருக்கிறார். இவரது ஆட்டத்தால் அவுஸ்திரேலியா நேற்றைய 3-வது நாள் ஆட்ட முடிவில் 2-வது இன்னிங்சில் 3 விக்கெட் இழப்பிற்கு 179 ரன்கள் எடுத்துள்ளது.

தற்போது வரை அவுஸ்திரேலியா 459 ரன்கள் முன்னிலையில் உள்ளது. இந்த ரன்னே மேற்கிந்திய தீவுகளுக்கு போதுமான வெற்றி இலக்காகும். இருந்தாலும் ஸ்மித் 70 ரன்களுடன் களத்தில் இருப்பதால் அவர் சதம் அடிக்கும்வரை அவுஸ்திரேலியா 2-வது இன்னிங்சை தொடரலாம். அல்லது 500 ரன்களுக்கு மேல் முன்னிலை பெற்று இடைநிறுத்தலாம். இப்போட்டியின் 4ஆம் நாள் ஆட்டம் இன்றாகும். (க)

# பிரோட், மொயின் அலி பந்துவீச்சில் தென்னாபிரிக்கா தடுமாற்றம்



புயல் வேக பந்துவீச்சாளர் டேல் ஸ்ரெய்னுக்கு மீண்டும் காயம் ஏற்பட அதை தமக்குச் சாதகமாக்கிக் கொண்ட இங்கிலாந்து அணி, நேற்றைய 3ஆம் நாள் ஆட்ட நேர நிறைவில் 7 விக்கெட்டுக்கள் கைவசமிருக்கும் நிலையில் 261 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

முன்னதாக நேற்று முன்தினம் 2ஆம் நாள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 137 ஓட்டங்களை எடுத்திருந்த தென்னாபிரிக்க அணி,

நேற்றைய 3ஆம் நாள் ஆட்டத்தில் மெயின் அலியின் பந்துவீச்சில் சிக்கி முதல் இன்னிங்ஸில் 214 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

தென்னாபிரிக்க - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி டேர்பனில் நடைபெற்று வருகிறது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து முதல் இன்னிங்சில் 303 ஓட்டங்கள் குவித்தது. கொம்ப்டன் அதிக பட்சமாக 85 ஓட்டங்கள் எடுத்தார்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பில் ஸ்ரெய்ன்: மோர்கல் ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்கள் வீழ்த்தினர்.

பின்னர் தென்னாபிரிக்க அணி தனது முதல் இன்னிங்சுக்காக களம் இறங்கியது.

அந்த அணியின் தொடக்க வீரர் எல்கரை தவிர மற்றைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். 4ஆவது வீரராக வந்த டி வில்லியர்ஸ் மட்டும் தன் பங்குக்கு 49 ஓட்டங்கள் எடுத்தார்.

ஒருபுறம் விக்கெட்டுக்கள் வீழ்ந்தாலும் மறுமுனையில் எல்கர் நிலைத்து நின்று சதம் அடித்தார். சதம் அடித்த எல்கர் ஒரு புறம் நங்கூரம் பாய்த்த மாதிரி நின்றாலும் எதிர்முனை விக்கெட்டுக்களை மொயின் அலி வீழ்த்தியதால் தென்னாபிரிக்கா அணி 214 ஓட்டங்களில் சுருண்டது.

தொடக்க வீரராக களம் இறங்கிய எல்கர் மட்டும் 246 பந்துகளை சந்தித்து 118 ஓட்டங்கள் எடுத்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பில் பிரோட், மொயின் அலி ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களும், பின் இரண்டு விக்கெட்டுக்களும் வீழ்த்தினர்.

89 ஓட்டங்கள் முன்னிலையுடன் இங்கிலாந்து 2ஆவது இன்னிங்சை தொடங்கியது.

அணித் தலைவர் குக் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தபோதிலும் மற்றைய வீரர்கள் சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தினர்.

இந்நிலையில் ஆட்டத்தின் 7ஆவது ஓவரில் தென்னாபிரிக்க அணிக்கு அதிர்ச்சி காத்திருந்தது.


இந்த ஓவரின் 2ஆவது பந்தை ஸ்ரெய்ன் வீசியபோது அவருக்கு தோள்பட்டையில் கடுமையான வலி ஏற்பட்டது. இதனால் உடனடியாக பெவிலியன் திரும்பிய அவர், பின்னர் 20ஆவது ஓவரில் திரும்பி வந்தார். அந்த ஓவரில் மூன்று பந்துகள் வீசிய பின்னர் மீண்டும் வலி ஏற்படவே மீண்டும் பெவிலியன் திரும்பினார்.

நட்சத்திர வீரர் ஸ்ரெய்னின் வெளியேற்றம் எதிரணியான இங்கிலாந்து அணிக்கு சாதகமாக அமைய இங்கிலாந்து அணி நேற்றைய 3ஆம் நாள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 172 ஓட்டங்களை எடுத்துள்ளது.

இதன்மூலம் 7 விக்கெட்டுக்கள் கைவசமிருக்கும் நிலையில் 261 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

களத்தில் ரூட் 60, ஜேம்ஸ் ரெய்லர் 26 ஓட்டங்களுடன் உள்ளனர்.இப் போட்டியின் 4ஆம் நாள் ஆட்டம் இன்றாகும். (க)

# பிக் பாஷ் இருபது-20 சிட்னி தண்டர் வெற்றி




களத்தடுப்பில் காட்டிய சிறந்த பெறுபேறுகளால் அடிலெய்ட் ஸ்ரைக்கர்ஸ் அணியை 21 பந்துகள் மீதமிருக்கையில் 7 விக்கெட்டுக்களால் வெற்றி கொண்ட சிட்னி தண்டர் அணி, புள்ளிகள் பட்டியலிலும் முதலிடத்துக்கு முன்னேறியது.

அவுஸ்திரேலியாவில் பிக் பாஷ் இருபது-20 தொடர் நடைபெற்று வருகிறது. இதன் 11 ஆவது லீக் போட்டி நேற்று நடந்தது.

இப்போட்டியில் அடிலெய்ட் ஸ்ரைக்கர்ஸ் அணி, சிட்னி தண்டர் அணியை அதன் சொந்த மண்ணில் எதிர்கொண்டது.

நாணயச்சுழற்சியில் வென்ற அடிலெய்ட் ஸ்ரைக்கர்ஸ் அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. அதன்படி அவ்அணி சார்பில் லூட்மேன், சிம்மன்ஸ் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். லூட்மேன் 0, சிம்மன்ஸ் 1 என அடுத்தடுத்து வெளியேறினர்.

அதன்பின் வந்த இலங்கையின் ஜெயவர்த்தன 21, அணித் தலைவர் ஹொட்ஜ் 34, ரஷித் 25 ஓட்டங்கள் எடுக்க, அடிலெய்ட் ஸ்ரைக்கர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட் இழப்பிற்கு 117 ஓட்டங்கள் எடுத்தது.

118 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலகுவான இலக்குடன் களமிறங்கிய சிட்னி தண்டர் அணி, 16.3 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை (121) 7 விக்கெட்டுக்களால் அடைந்தது.


சிறப்பாக விளையாடிய ஆரம்ப வீரர்களான கலிஸ் ஆட்டமிழக்காமல் 49, பிளிசார்ட் 35 ஓட்டங்கள் எடுத்தனர்.

பந்துவீச்சில் பென் லோலின் 22 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

போட்டியின் ஆட்ட நாயகனாக சிட்னி தண்டர் அணியின் கலிஸ் தெரிவானார்.

இதுவரை 3 போட்டிகளில் பங்குபற்றியுள்ள சிட்னி தண்டர் அணி, எந்தவித தோல்வியையும் சந்திக்காமல் புள்ளிகள் பட்டியலில் 6 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. (க)

பிறக்கின்ற புத்தாண்டை
ஜில் ஜில் என குளிர்மையாகக்
குதூகலமாக கொண்டாட
ஊஷா ஏஜென்சி
நிறுவனம் வழங்கும்
அதிரடி விலைக் குறைப்பு






இரட்டைக் கதவு
குளிர் சாதனப் பெட்டி
5 வருட
உத்தரவாதத்துடன்
வெறும்
30,000/=
மட்டுமே

ஊஷா ஏஜென்சி
62/32 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:-0214923393



பிறக்கின்ற புதிய புத்தாண்டை முன்னிட்டு
ஊஷா ஏஜென்சி

ஸ்தாபனத்திற்கு முன்னால்
காட்சிப்படுத்தப்பட்ட வாகனத்
தில் ஊஷா கிரைண்டர்,
ஊஷா சீலிங் (F)பான்,
ஊஷா ஸ்டாண்ட் (F)பான்
ஊஷா காஸ்குக்கர்,
ஊஷா ரைஸ் குக்கர்,
ஊஷா தையல்
இயந்திரம்



15%-25%
விலைக்கழிவில்
விற்பனை
செய்யப்படும்.

30,31 ஆம்
திகதிகளில்
மட்டுமே!

ஊஷா ஏஜென்சி,
62/32,
ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
021- 492 3393


# 90 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 31-12-1994 மறைவு 01.10.2015

## அமரர் இராசையா லாவன்யா


அவர்களின் அந்தியேட்டிக் கிரியை இன்று 29.12.2015 செவ்வாய்க் கிழமை காலை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று அதனை தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன உபசரிப்பிலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். அன்னாரது மரணச் செய்தி பற்றி எம்மால் முறையான அறிவித்தல் தரப்படாத பட்சத்திலும் அவற்றையும் பொருட்படுத்தாது நேரில் வந்து உதவி புரிந்தோர்க்கும் துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டோர்களுக்கும் தொலைத்தொடர்பு மூலம் அனுதாபங்களை தெரிவித்தோருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்வதோடு கிரியை அழைப்பிதழ் தரத் தவறியிருந்தாலும் அவற்றையும் குறை காணாது இவ்வழைப்பை எமது தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டிக் கொள்கின்றோம்.

பூவத்தோட்டம்
இமையாணன், உடுப்பிட்டி.

அன்னாரது
குடும்பத்தினர்.

# இதுதான் தீர்வு என்று அரசு சொன்னால்

# அதன் தரத்தில் சந்தேகம்



அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகளின் வெளியுறவானது பொதுவாக நமது சொந்த நலன்களை முன்னிலைப்படுத்துவதாக அமைவது வழமை. இலங்கை மீதான அமெரிக்காவின் கரிசனை சீனாவின் ஆதிக்கத்தை இலங்கையில் குறைப்பதையே பிரதானமாகக் கொண்டது. அடுத்தபடியாகவே சர்வதேச ஒத்துழைப்புடன் உள்ளக விசாரணை, தமிழர்களுக்கான தீர்வு என்பன அமையும். இதை இப்படியும் கூறலாம். ஈழத் தமிழரின் பிரச்சினையை கையில் எடுத்துக் கொண்டு இலங்கையில் அமெரிக்கா ஆணித்தரமாக கால் பதிக்க விரும்புகின்றது. இந்தியாவிற்கும் தெற்காசிய வலயத்தில் சீனாவின் ஆதிக்கமே முதற்பிரச்சினை. தமிழர்களின் பிரச்சினை என்பது இரண்டாம் பட்சமான விடயமே.

சர்வதேசத்தின் செல்வாக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேல் அதிகரித்துள்ளதனால் தமிழருக்கான தீர்வு ஒன்றை ஜனாதிபதி கொடுத்து விடுவார் என்பது கட்டாயமான ஒன்று அல்ல. இலங்கை அரசு சீனாவின் ஆதிக்கத்தை குறைத்து சர்வதேசத்தை திருப்திப்படுத்துமாக இருந்தால் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் அதற்கு பிரதியுபகாரமாக தீர்வுக்கான நெருக்கடியை குறைத்துக் கொள்ளலாம். அதனால் தான் சம்பந்தன் ஐயா இந்தப் பிரச்சினை 70 வருடங்களாகத் தொடர்ந்த ஒன்று. நிச்சயமாக (நடைபெற்று )/ தீர்வு கிடைத்து விடும் என்று நான் ஒருபோதும் சொல்ல மாட்டேன் என்று கூறினார் போலும்.

மகிந்த காலத்தில் சர்வ தேச விசாரணை வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்த அமெரிக்கா தனக்கு சாதகமான ஆட்சி மாற்றம் வந்தவுடன் பாரிய அழுத்தங்கள் ஏதும் அற்ற உள்ளக விசாரணை என மாற்றிக் கொண்டது. இதில் இருந்தே ஆரம்பத்தில் கூறப்பட்ட விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். உள்ளக விசாரணையும் இலங்கை அரசின் மீதான ஒரு பிடியே இன்றி தமிழர்கள் மீதுள்ள அக்கறை என முழுமையாக கூறமுடியாது.

தற்போதைய சூழ்நிலையில் தமிழர்களின் அரசியல் தீர்வைப்பெற இரண்டு வழிமுறைகளே உள்ளன.

முதலாவது ஜனாதிபதி, பிரதமர், தமிழ்த் தலைமைகள், தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் போன்ற எல்லோருடனும் பேசி புரிந்துணர்வை ஏற்படுத்தி இலங்கை மக்கள் அனைவரினதும் பூரண ஒத்துழைப்புடன் தீர்வு ஒன்றைப் பெற்றெடுத்தல்.

இரண்டாவது இலங்கை அரசு மீது சர்வதேச அழுத்தங்களை பிரயோகித்து பொருத்தமான தீர்வு ஒன் றைப் பெற்றுக்கொடுக்க வழிவகை செய்தல்.

முதலாவது விடயம் சாத்தியப்பாடற்ற ஒன்று. சம்பந்தன் ஐயா கூறுவது போல மக்களுக்கு சரியானதைச் செய்யவேண்டும் என்ற எண்ணம் கொண்டவராக ஜனாதிபதி இருந்தாலும் அவர் நியாயத்தை செய்யக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறாரா என்பதையும் சிந்திக்க வேண்டும்.

அவ்வாறு தனித்து செயற்பட முயன்றால் தேசிய அரசின் இருக்கையை கேள்விக்குறியாக்கிவிடும் வகையில் தென்னிலங்கை கடும் போக்குவாதிகளின் செயற்பாடு அமையும். அரசியல் கைதிகளின் விடுவிப்பு தொடர்பில் நான் எதையும் செய்ய முடியாத நிலையில் உள்ளேன் என ஜனாதிபதி கூறியது இதற்கான சிறந்த உதாரணம்.

வடக்கில் எவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தேசியவாதத்தை பரப்ப வாக்கு வங்கியை நிரப்புகின்றனரோ அதேபோல தென்னிலங்கையில் இனவாதத்தைப் பரப்பி தமது அரசியல் இருக்கையை உறுதிப்படுத்திக் கொள்வோரும் உள்ளனர். இந்நிலை நாட்டில். காணப்படும் வரை இணக்கப்பாடு என்பது கிடைக்க வாய்ப்பே இல்லை.

இரண்டாவது விடயமே சாத்தியபடக்கூடியது. தேசிய அரசுக்கான ஆதரவுப் போக்கை கடைப்பிடிப்பதன் மூலம் இந்தியாவிடம் இருந்து தீர்வு ஒன்றினைப் பெற்றுக் கொள்ளவே கூட்டமைப்பு எதிர்பார்த்துள்ளது.

வேறு வழிகள் இல்லாத நிலையில் இதுவே நடைமுறைச் சாத்தி யமானதும் கூட. ஆனால் தீர் வொன்று பெறப் படுமாயின் மூன்று தசாப்தங்களுக்கு மேலான தமிழ் மக்களின் தியாகங்களுக்கு பெறுமதியான தீர்வாக அது அமையுமா என்ற வினா பூதாகரமாக எழுந்து நிற்கின்றது.

சர்வதேச ரீதியில் இலங்கைக்கு ஏற்பட்டிருக்கும் களங்கத்தை துடைப்ப தற்காகவோ, போரின் இழப்புக்களைச் சந்தித்த மக்களை சாந்தப்படுத்தவோ, மைத்திரி ஜனாதிபதியாகவும் தேசிய அரசு ஆட்சிப்பீடம் ஏறவும் உதவிய கூட்டமைப்பினரை திருப்திப்படுத்தவோ தீர்வு ஒன்று முன்வைக்கப்படுமானால் அது சிறந்த ஒன்றாக அமைந்து விடாது. ஆரம்பத்திலிருந்து இனப் பிரச்சினைக்கான காரணங்களை கண்டறிந்து களையெடுத்து மீண்டும் ஒரு போராட்டமோ, வன்முறையோ ஏற்படாத வகையில் நீடித்து நிற்கக் கூடியதாக வழங்கப்படும் தீர்வே காலத்தின் தேவையாகவுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் தேசிய அரசின் பங்காளியாகவே கூட்டமைப்பு மாறிவிட்ட நிலையில் சம்பந்தன் ஐயா மற்றும் அரசுடன் ஒத்து நடக்கும் கூட்டமைப்பினர் சிலர் **இதுதான் தீர்வு** என்று ஒன்றைக் கொடுத்தால் அதன் தரம் எவ்வாறானதாக இருக்கும் என்ற நியாயமான சந்தேகம் மத்தியில் நிலவி வந்தது.

திட்டம் எவ்வாறானது? தீர்வு எவ்வாறானது? என கூட்டமைப்பின் தலைமையிடம் கேட்ட போதெல்லாம் இரகசியமானது, தற்போது கூறவேண்டியதில்லை, சந்தேகத்தை விட்டுத் தள்ளுங்கள் என மழுப்பப்பட்டதே தவிர தக்க பதில்கள் வழங்கப்படவில்லை.

இதன் வெளிப்பாடாகவே முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயா தலைமையில் (மார்கழி 19 ஆம் திகதி) **தமிழரின் நலனைப் பாதுகாக்க** தமிழ் மக்கள் பேரவை உருவாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. கூட்டமைப்பினர் வாக்குகளை மட்டும் இலக்காகக் கொண்டு வாக்குறுதிகளை வழங்காமல் நடைமுறை சாத்தியமான விடயங்களைக் கூறி மக்களுக்கு நம்பிக்கை அளித்து வெளிப்படையான பாதையில் பயணித்திருந்தால் இவ்வாறான அமைப்பு ஒன்று தோன்ற வேண்டிய தேவையே இருந்திருக்காது என்பதே நிதர்சனம்.

கூட்டமைப்பின் உறுப்பினர்கள், ஏனைய தமிழ்க் கட்சிகளின் தலைமைகள், மதகுருமார்கள், சமூக ஆர்வலர்கள், கல்விமான்கள் போன்ற பல தரப்பட்டோரை கொண்ட தமிழ் மக்கள் பேரவை தமிழ் மக்களுக்கு சரியான தீர்வு ஒன்றைப் பெற்றுத் தரும் என நம்புவோம்.

மாணவன்:-வி.முகுந்தன்
பேராதனைப் பல்கலைக் கழகம்
விவசாய தொழில்நுட்பமும் முகாமைத்துவமும்





நயினாதீவிலுள்ள வறுமைக்கோட்டுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களின் வீடுகளுக்கு யாழ்.பல்கலைக்கழக நயினாதீவு மாணவர்கள் சென்று கற்றல் உபகரணங்களை அண்மையில் கையளித்துள்ளனர். கனடாவாழ் நயினாதீவு சமூகசேவையாளர் சிங்கம் அருள் என்பவரால் நயினாதீவிலுள்ள பாடசாலை மாணவர்கள் 21 பேருக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கியிருந்தார். அதை யாழ்.பல்கலைக்கழக நயினாதீவு மாணவர்கள் கடந்த 24, 25 ஆம் திகதிகளில் வீடு வீடாக சென்று கையளித்துள்ளனர். (படங்கள்:-பொ.சோபிகா)



மட்டக்களப்பு சிவானந்தா தேசிய கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற தேசியமட்ட தமிழ்த்தின நாடகப் போட்டியில் யா/சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் காப்பு எனும் நாடகம் முதலிடத்தைப் பெற்றுள்ளது. கல்லூரியின் நாடகமும் அரங்கியலும் பாட ஆசிரியர் பு.கணேசராஜாவின் நெறிப்படுத்தலின் கீழ் மேற்படி நாடகம் அமைந்ததுடன் கடந்த 2013 ஆம் ஆண்டு இடம்பெற்ற தேசியமட்ட தமிழ்த் தினப் போட்டியில் ஒய்யாரக் கொண்டை, மர்மமுடிச்சு என்பனவும் முதலிடங்களைப் பெற்றுக் கொண்டன.

# அறநெறி வகுப்புக்களுடன் பொதுப் பணியிலும் ஆலயங்கள் அதிக முனைப்புக்காட்ட வேண்டும்

## யாழ்.அரச அதிபர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்திலுள்ள கோவில்கள் அனைத்தும் அறநெறி வகுப்புக்களை ஆரம்பிப்பதுடன் சமூக பொதுப்பணியிலும் தமது பங்களிப்பை செய்ய வேண்டுமென யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**



நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு அறநெறி பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட ஆக்கத்திறன் போட்டிகளில் சித்தியடைந்த மாணவர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராககலந்துகொண்டு உரையாற்றும்போதேஅவர்மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும்தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தில் முதன்முறையாகஅறநெறிபாடசாலைமாணவர்களுக்கானவிருதுவழங்கும் வைபவம் நடைபெறுகிறது.

இதுபோன்ற நிகழ்வுகள் மூலம்தான் எமது சமூகத்தின் மத்தியில் ஒரு மாற்றத்தை கொண்டுவர முடியும். அத்துடன் புதிய மாணவர்களையும்அறநெறிவகுப்பில்இணைத்துக்கொள்ள முடியும்.

எமது சமூகத்தில் ஆன்மீக நடவடிக்கைகள் குறைந்து போவதனால் சமூக பிறழ்வுகள் ஏற்படுகின்றன. இவற்றை தடுப்பதற்கு அறநெறி வகுப்புக்களின் தேவை மிக முக்கியமாக இருக்கின்றது.

எனவே அனைத்து கோவில்களும் அறநெறி வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதுடன் சமூக பொதுப் பணிகளில் முக்கிய பங்களிப்பை செய்ய வேண்டும்.

இதன்மூலமாகத்தான் கஷ்டப்பட்ட மாணவர்களுக்கு உதவுவதோடு அவர்களின் கல்வி மேம்பாட்டுக்கும்உதவமுடியும்.

யாழ்.மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிலும் வெள்ளிக்கிழமை மாலையிலும் ஞாயிற்றுக்கிழமை காலையிலும் தனியார் வகுப்புக்களை நிறுத்தி அறநெறி வகுப்புக்களை நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனவே அறநெறி வகுப்புக்களை விரிவுபடுத்தவும் புதிய மாணவர்களை உள்வாங்குவதற்கும் கோவில்கள் முன்வர வேண்டும். எந்தவொரு செயற்பாட்டுக்கும் செயல் வடிவம் கொடுத்தால் மட்டுமே அது சிறப்பாக அமையும். எனவே சொல்வதோடு மட்டும் நின்றுவிடாமல் செயற்பாடுகளில் ஈடுபடுவதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் 2016 ஆம் ஆண்டு வினைத்திறனுடன் அறநெறிப் பாடசாலைகளை அமைத்து மாணவர்களைஆன்மீகநெறியில்ஈடுபடுத்த சிறந்த வாய்ப்பை ஏற்படுத்திசிறந்தசமூகத்தைகட்டியெழுப்புவதற்கு அனைவரும் முன்வரவேண்டும்எனஅவர்மேலும் தெரிவித்தார். (இ-9)


இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா:46சூரி செவ் 3 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/Lடுபாய்<br>தொ.இ: B/5330 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 37செவ் 7 இல்<br>உயரம்: 156cm<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/5348 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 89சூரி செவ் 8 இல்<br>தகைமை/தொழில்:ITபட்டதாரி நியூசிலாந்து PR<br>தொ.இ: B/5331 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 20<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/5352 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 19<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BSC/அரசதொழில்<br>தொ.இ: B/5332 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 42<br>தகைமை/தொழில்:பட்டதாரி<br>தொ.இ: G/5354 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 12சூரிசெவ் 6 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/5333 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 23<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/5357 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)



அருள்வளர் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோவில் இலட்சார்ச்சனை பெருவிழாவில் இசை ஆராதனை செய்யும் கலைஞர்கள்

இசை ஆராதனை
நிகழ்ச்சி
29.12.2015 செவ்வாய்க்கிழமை
நாதஸ்வர இசை அருவி- கலாபூஷணம் கோண்டாவில் பஞ்சமூர்த்தி
நாதகான சாகரன்- R.கேதீஸ்வரன்
தவில்- S.ராமதாஸ்
சொற்சுவை வேந்தன் தெட்சணாமூர்த்தி உதயசங்கர்

இசை ஆராதனை
அனுசரணை வழங்குவோர்
வே.பரமேஸ்வரன்
C.M.S. லேன், கொக்குவில் மேற்கு, கொக்குவில்
(2901)


## இராசி பலன்

29.12.2015
(மார்கழி 13, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.21 மணிக்கு
சதுர்த்தி மாலை 5.36 மணிவரை
ஆயிலியம் பிற்பகல் 3.19 மணிவரை
இராகுகாலம் 3.28-4.58 மணிவரை
சுபநேரம் 10.58-12.28 மணிவரை
சங்கடகர சதுர்த்தி விரதம்
கெர்ப்போட்ட ஆரம்பம்
வளவன்

| | | | |
| --- | --- | --- | --- |
| கேது | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>பூராடம், உத்தராடம்<br>பகல் 2.59 இற்கு<br>சிங்-சந் | | சந் |
| சூரி<br>புத | சனி<br>சுக் | செவ் | ராகு<br>குரு |

**மீனம்:** தேகநலனில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அகலும், செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மேடம்:** சந்தித்தவர்களால் சந்தோசங்கள் கிடைக்கும் நாள், தொழிலை விருத்தி செய்ய எடுத்த முயற்சிகள் கைகூடும், வருமானம் திருப்தி தரும்.

**இடபம்:** வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் அக்கறை காட்டுவீர்கள்.

**மிதுனம்:** சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்திதரும்.

**கும்பம்:** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், அபூர்வ சந்திப்புண்டு.

**கடகம்:** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்ச்சிகள் நடைபெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, முயற்சிகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மகரம்:** சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், எடுத்த காரியங்களை முடிப்பதில் சில இடையூறுகள் ஏற்படலாம், மனஸ்தாபங்கள் கூடும் நாள்.

**சிம்மம்:** நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, குடும்பச் சுமை கூடும், ஆழ்ந்த சிந்தையுண்டு.

**தனுசு:** தொழிலில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் குறையும், ஆலய வழிபாடு ஆனந்தம் தரும், புதிய முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.


**விருச்சிகம்:** சேமிப்புகள் உயர்வதற்கான வாய்ப்புண்டு, தொழில் வளர்ச்சி கூடும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**துலாம்:** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், தொழில் முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்லும், வழிபாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி:** சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம், எடுத்த காரியங்களை முடிப்பதற்கு அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.







கிளி/பூநகரி மத்திய கல்லூரியின் மாற்று வலுவுடையோர் தினம் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இதில் வலயமட்ட போட்டியில் வெற்றிபெற்ற மாணவர் ஒருவருக்கு கிளிநொச்சி கல்வி வலய விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி எஸ்.றேனுகா, கல்லூரியின் அதிபர் ஆகியோர் பரிசில்களை வழங்குவதையும் விசேட தேவையுடைய மாணவர்களின் கலை நிகழ்வினையும் படங்களில் காணலாம்.

## சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்கு பண உதவி

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்திடம் பிரமந்தனாறு பரந்தன் கிளிநொச்சியை சேர்ந்த ரங்கநாதன் ராகவன் என்பவருக்கான சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்காக அவரது மனைவி திருமதி.சுமித்திரமலர் ராகவன் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் அண்மையில் சங்க தலைமை காரியாலயத்தில் வைத்து அவர்களது வங்கி கணக்கில் 50 ஆயிரம் ரூபா பணம் வைப்பில் இடப்பட்டு அதற்கான பற்றுச்சீட்டு முன்னாள் சங்க தலைவர் இராஜகோபால் குகனினால் வழங்கி வைக்கப்பட்டது.

இவருக்கான சத்திர சிகிச்சை அண்மையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டது. (2)

## ஒரே இரவில் 3 வர்த்தக நிலையங்கள் உடைக்கப்பட்டு பொருட்கள் கொள்ளை

(குருமன்காடு)

வவுனியாவில் ஒரே இரவில் மூன்று கடைகள் உடைக்கப்பட்டு பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

வவுனியா குருமன்காட்டில் நேற்று இரவு. வர்த்தக நிலையங்கள் மூன்றின் பூட்டு உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பகுதியிலுள்ள பல்சரக்கு கடை. போன் கடை மற்றும் பிறிதொரு அழகு சாதனப் பொருட்கள் விற்பனை நிலையம் என்பனவே, உடைக்கப்பட்டு பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

மேலும், குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணை களை முன்னெடுத்து வருகின்றனர். (2-250)




## பூநகரி மத்திய கல்லூரிக்கு குடிநீர் விநியோகம்

(பூநகரி)

சரவணபொய்கை நிதியத்தின் அனுசரணையுடன் பூநகரி மத்திய கல்லூரிக்கு குடிநீர் விநியோகம் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

கல்லூரி அதிபர் இ.பாலச்சந்திரன் சரவண பொய்கை நிதியத்தினருக்கு விடுத்த வேண்டுகோளுக்கு அமைய பல ஆண்டுகாலமாக நிலவிய குடிநீர் பிரச்சினை தற்போது தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

இதனால் பாடசாலை சமூகத்தினர் நன்மை அடைந்துள்ளனர்.

இதன் அடுத்த கட்டமாக சரவண பொய்கை நிதியத்தினரால் குடிநீர் நிரப்புவதற்கு இழுவைத் தாங்கியொன்று வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

## அனர்த்த முகாமைத்துவ நிதியம் வடக்கில் அமைக்கப்பட வேண்டும்

### மாகாண சபை உறுப்பினர் ப.அரியரத்தினம் கோரிக்கை

(கிளிநொச்சி-1)

வடக்கு மாகாணத்திற்கான அனர்த்த முகாமைத்துவத்திற்கான நிதியமொன்றை அமைக்க வேண்டும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப.அரியரத்தினம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு சுற்றாடல் அமைச்சின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண இயற்கைப் பேரிடர் தணிப்புத் தின நிகழ்வு கடந்த 26ஆம் திகதி கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வடக்கு மாகாணமானது இயற்கை பேரிடரினாலும் மனிதர்களின் சுற்றுச்சூழலுக்கு ஒவ்வாத நடவடிக்கைகளினாலும் பெரிதும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன் பாதிப்பும் ஏற்பட்டு வருகின்றது.

இதிலிருந்து விரைவாக மீளுவதற்கு பெருமளவில் நிதி தேவையாகவுள்ளது.

அனர்த்தம் ஏற்பட்ட பின்னர் நிதியை சேகரிப்பது என்பது சவாலான காரியமாகும்.

எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு வடக்கு மாகாண சுற்றாடல் அமைச்சானது இந்நிதியத்தை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரச உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள், விவசாயிகள் என அனைத்து தரப்பினரிடமும் ஒரு நாளுக்குரிய வேதனத்தையோ அல்லது வருமானத்தை இந்நிதிய உருவாக்கத்திற்கான அடிப்படை நிதியாக சேகரிக்க முடியும்.

இந்நிதியத்தில் இருந்து அனர்த்தத்தின் போது பாதிக்கப்படும் மக்களுக்கு உதவ முடியும்.

பேரிடர் தணிப்பு நடவடிக்கைகளுக்கும் இந்நிதியைப் பயன்படுத்த முடியும் என அவர் தெரிவித்தார். (2-277)

## சமூகத்தில் இடம்பெறும் சீர்கேடுகளை தகர்க்க முயன்றவரை பாடுபடுவேன்

### சாந்தி எம்.பி.தெரிவிப்பு

(மாமூலை)

மாணவர்களின் நலனுக்காகவும் மாற்றுத திறனாளிகளின் வாழ்வாதார மேம்பாட்டிற்காகவும் சமூகத்தில் தலைதூக்கியுள்ள சீர்கேடுகளைத் தடுக்கவும் முயன்றவரை பாடுபடுவேன் என பாராளுமன்ற உறுப்பினர் திருமதிசாந்தி ஸ்ரீஸ்கந்தராசா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய மாணவர்களுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருக்கும் இடையில் "கல்வியே எமது அழியாச் சொத்து" எனும் தொனிப்பொருளில் கலந்துரையாடலொன்று அண்மையில் முள்ளியவளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிராந்திய மக்கள் தொடர்பு காரியாலயத்தில் இடம்பெற்றது.

இதில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

மாணவர்களே தேசத்தின் சொத்து எதிர்காலத்தில் முன்னெடுக்கவுள்ள அனைத்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளிலும் மாணவர்களுடன் கைகோர்த்து நின்று மாணவர்கள் நலனுக்காகவும், மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதார மேம்பாட்டிற்காகவும்.சமூகத்தில் தலைதூக்கியுள்ள சீர்கேடுகளைத்தடுக்கவும் முயன்றவரை பாடுபடுவேன். பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாடுகருதி பல திட்டங்களைச் செயற்படுத்த இருப்பதாகவும் மேலும் தெரிவித்தார். (2-301)

## கால்கோள் விழா நடைபெறும் தினம் சீருடை பண வவுச்சர் வழங்கப்படும்

(புதுமுறிப்பு)

கிளி/இந்து ஆரம்ப வித்தியாலயத்தில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரம் ஒன்று மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான கலந்துரையாடல் நேற்று காலை 9.30மணியளவில் கல்லூரி மண்டபத்தில் அதிபர் தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் அதிபர் கருத்து தெரிவிக்கையில்,

அயல்பாடசாலைகளிலுள்ள மாணவர்களை இப்பாடசாலையில் இணைத்துக் கொள்ள முடியாது எனவும் அவ்வாறு இணைப்பதால் பாடசாலைகளுக்கு இடையிலான சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டிவரும் என்றும் கூறினார்.

அத்துடன் பெற்றோர், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோருக்கிடையிலான தொடர்புகள் சிறந்ததாக இருக்க வேண்டும்.

இது மிகவும் கட்டாயமும் அவசியமான தொன்றாகும்.

மாணவர்களுக்கான சீருடை பண வவுச்சர்கள் கால்கோள் விழாவின் போது வழங்கப்படவுள்ளது. (2-307)

## கேப்பாபிலவு-புதுக்குடியிருப்பு வீதியின் ஆரம்பகட்ட புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

(முள்ளியவளை)

வற்றாப்பளை கேப்பாபிலவு புதுக்குடியிருப்பு வீதி ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி ஒதுக்கீட்டில் புனரமைப்பு செய்யப்படவுள்ளது. இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கையாக வீதிக்குத் தேவையான கற்கள் வீதியோரம் பறிக்கப்பட்டு வருகின்றன. இதுகுறித்து முல்லைத்தீவு மாவட்ட வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் நிறைவேற்றுப் பொறியியலாளர் கௌசிகன் தெரிவிக்கையில், இவ்வீதியானது இம்முறையே முழுமையாக தார் வீதியாக புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாகவும் இவ்வீதியினை புனரமைப்புச் செய்து முடிப்பதற்கு 18மாதங்கள் ஒப்பந்த காலமாக வரையறை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இவ்வீதியானது தமது அதிகார வரையறையின்படி வழமையான வீதியாக கேப்பாபிலவு இராணுவ முகாம்களை ஊடறுத்தே புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-302)







துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட முன்பள்ளி நிலையங்களது ஆசிரியர்கள்,மாணவர்கள் ஆகியோரின் கௌரவிப்பு விழா துணுக்காய் வலயக்கல்வி அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றபோது.... (படங்கள்:- மல்லாவி செய்தியாளர்)



கிளிநொச்சி மாவட்டத்தில் வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் ஆதரவுடன் முத்தான வியர்வை எனும் தொனிப் பொருளில் கண்காட்சியும் விற்பனையும் நேற்றுக்காலை 9 மணியளவில் கிளிநொச்சி பொதுச் சந்தைக்கு முன்பாக ஆரம்பமானது. கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலகங்களும் இணைந்து இதில் பங்கேற்றுள்ளன. இக்கண்காட்சியும் விற்பனையும் நேற்றிலிருந்து இன்று வரை நடைபெறும். (படங்கள்:-உதயநகர் செய்தியாளர்)

# உயிராபத்தை ஏற்படுத்தும் நிலையிலுள்ள புகையிரத கடவையை சற்று கவனியுங்கள்

## பொதுமக்கள்,மாணவர்கள் கோரிக்கை

(உருத்திரபுரம்)

கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியிலுள்ள புகையிரத கடவையில் பொருத்தப்பட்ட சமிக்ஞை விளக்கு பல மாதங்களாக ஒளிராமையால் கடவையைக் கடப்போர் அச்சத்துடன் செல்வதாக தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

ஒரு பாரவூர்தி வாகனம் விபத்திற்குள்ளானதில் இக்கடவையில் அமைக்கப்பட்டிருந்த சமிக்ஞை விள்க்கு சேதமடைந்தது.

அன்றிலிருந்து இன்று வரை குறித்த விளக்கு ஒளிர்வதில்லை என மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இதனால் இக்கடவை பயணத்திற்கு பாதுகாப்பற்றதாகவே காணப்படுகின்றது.

இக்கடவைக்கென காவலாளி நியமிக்கப் பட்டுள்ளபோதிலும் புகையிரதம் வரும் சமயத்தில் ஒருபக்கத்திற்கு கயிற்றைக் கட்டிவிட்டு மறுபக்கத்தில் காவலாளி நின்று கொண்டு மக்களை மறிக்கும் நிலை காணப்படுகின்றது.

இதேவேளை இக்கடவைக்கு பாதுகாப்பான தடை அமைத்துத்தருமாறு பொது மக்கள் புகையிரத திணைக்களத்திற்கு கடிதம் வழங்கியும் கவனயீர்ப்பு போராட்டத்தை நடத்தி கிளிநொச்சி அரசாங்க அதிபருக்கு மகஜர் கையளித்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.


இக் கடவையூடாக தினமும் கிளி/சென். திரேசா பெண்கள் கல்லூரி,கிளி/இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலை மாணவர்கள் சென்று வருகின்றனர்.

அத்துடன் உருத்திரபுரம், ஜெயந்திநகர், 7ஆம் வாய்க்கால்,சிவநகர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது தேவையின் நிமிர்த்தம் சென்று வருகின்றனர்.

எனவே உயிராபத்தை ஏற்படுத்தும் நிலையிலுள்ள புகையிரத கடவையை சீர்செய்து தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-298)

# புகையிரத கடவையில் பொருத்தப்பட்டுள்ள சமிக்ஞை விளக்குகளை ஒளிரச்செய்யுங்கள்

## பொதுமக்கள் கோரிக்கை



கிளிநொச்சி அறிவியல் நகர் பிரதான வீதியில் அமைந்துள்ள பாதுகாப்பற்ற புகையிரத கடவையில் பொருத்தப்பட்டுள்ள சமிக்ஞை விளக்குகள் ஒளிராமையால் அக்கடவையின் ஊடாக பயணிப்போர் அச்சத்துடன் செல்வதாக விசனம் தெரிக்கின்றனர்.

இக்கடவையினூடாக நாளாந்தம் இலங்கை மத்திய வங்கி பிரதேச அலுவலகம், கிளி/சிவபாத கலையகப் பாடசாலை மாணவர்கள், வன ஜீவராசிகள் திணைக்களப் பிரதேச அலுவலகம், அறிவியல் நகர் ஜனசவன வீட்டுத் திட்டம், முதியோர் இல்லம் ஆகிய இடங்களுக்கு செல்லும் பிரதான பாதையாகவுள்ளது.

பாதுகாப்பற்ற புகையிரத கடவையாகவும், சமிக்ஞை விளக்குகள் ஒளிராமை காரணமாகவும் இக்கடவையூடாகவும், சமிக்ஞை விளக்குகள் ஒளிராமை காரணமாகவும் இக்கடவையூடாகபயணிப்போருக்கு உயிராபத்து ஏற்படலாமென அஞ்சப்படுகின்றது. எனவே புகையிரதத் திணைக் களம் இதில் கூடிய கவனம் எடுத்து சமிக்ஞை விளக்குகளை ஒளிரச்செய்ய வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.(2-299)




# நிலத்தை பண்படுத்துகையில் பெருமளவான மிதிவெடிகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கொக்குத் தொடுவாய், கோட்டடக்கேணி ஆகிய கிராமங்களிலுள்ள விவசாய நிலங்களில் அதிகளவான மிதிவெடிகள் மற்றும் வெடி பொருட்கள் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மிதிவெடிகள் அற்ற பிரதேசங்கள் என்ற அடிப்படையில் இந்தப் பகுதிகள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டன.

ஆனால், இந்தப் பகுதி மக்கள் தங்களின் வாழ்வாதார தேவையான விவசாயச் செய்கையை மேற்கொள்ளும் பொருட்டு நிலத்தை பண்படுத்திய போது பெருமளவான மிதிவெடிகளை அவதானித்துள்ளனர்.

தற்போது, இவர்கள் சுமார் 6 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம் மேற்கொண்டு வரும் நிலையில் அந்தப் பகுதியில் பெருமளவான மிதிவெடிகளை அவதானித்துள்ளனர்.

இதனால், சுற்றுவட்டாரத்திலும் மிதிவெடிகள் அதிகம் இருக்கும் என அந்த மக்கள் அச்சம் கொள்கின்றனர்.

வெடிபொருட்கள் இருப்பதற்கான அடையாளப்படுத்தல் ஏதும் செய்யப்படாத நிலையில் தாங்கள் மிகுந்த அச்சத்துடன் வாழ்வதாகவும் மாவட்டச் செயலகத்துக்கு மிதிவெடிகள் இருப்பதற்கான படங்களையும் அனுப்பி முறைப்பாட்டையும் அம்மக்கள் பதிவு செய்துள்ளனர்.

இதனால் அம் மக்கள் மீள்குடியேறியும் அப்பகுதியில் தமக்கான விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அச்சப்படுவதாக தெரிவிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (2)

# இன்று அடையாள அணிவகுப்பு; சந்தேக நபரின் விளக்கமறியல் நீடிப்பு


வவுனியா நகரில் செய்தி சேகரித்துக் கொண்டிருந்த போது ஊடகவியலாளர் ஒருவர் தாக்கப்பட்டமை தொடர்பில் இன்று செவ்வாய்க்கிழமை அடையாள அணிவகுபபு இடம்பெறவுள்ளது.

கடந்த வியாழக்கிழமை வவுனியா நகர சபையினால் போக்குவரத்துக்கு இடையூறாக வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டவர்களை அகற்றிய போது வர்த்தகர்களுக்கும், நகரசபைக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது. இதனை பதிவு செய்து செய்தி சேகரித்த ஊடகவியலாளர் ஒருவர் மீது வர்த்தகர் ஒருவரால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க வவுனியா மாவட்ட நீதிபதி எஸ்.இராமக்கமலன் உத்தர விட்டார். இந்நிலையில் நேற்றையதினம் மீண்டும் இவ்விடயம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதும், விசாரணைகள் இடம்பெறாது இன்று அடையாள அணிவகுப்புக்கு உத்தரவு பிறக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சந்தேக நபர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (2-250)




வசுந்திரா சசி எழுதிய 'பாவு தளிர் தூவு வாகனம்' எனும் சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா அண்மையில் வவுனியா செட்டிகுளம் மகா வித்தியாலயத்தில் நூலாசிரியரின் தந்தையார் பசுபதிக்கு நூலின் முதற்பிரதியை வழங்குவதையும் விழாவில் கலந்து கொண்ட பிரமுகர்களையும் படங்களில் காணலாம்.






யாழ்ப்பாண தமிழ்ச் சங்கம் நடத்திய ஆறுமுக நாவலர் விழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்றது. கரிகணன் அச்சக அதிபரின் அனுசரணையில் யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவரும் தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினருமாகிய பேராசிரியர் மா.வேதநாதன் தலைமையில் இந் நிகழ்வு இடம்பெற்றது.


எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தின் கட்டட திறப்புவிழா அண்மையில் வித்தியாலயத்தின் முதல்வர் கே.கஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. சுவிஸ் அரசின் நிதியுதவியுடன் 3 கோடியே 25 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இக் கட்டடத்தின் பிரதான மண்டபத்தை சுவிஸ் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் கென்ஸ் வோக்கர் நடகூள் நாடாவெட்டி திறந்து வைத்தார். (படங்கள்:-சாவகச்சேரி செய்தியாளர்)



சண்டிலிப்பாய்க் கோட்டத்தைச் சார்ந்த 50 க்கும் மேற்பட்ட முன்பள்ளிகள் இணைந்து நடத்திய கலைவிழா அண்மையில் மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டார். நிகழ்வில் சிறார்களின் கலைநிகழ்வுகள் இடம்பெற்றதுடன். விருந்தினர்களால் பரிசில்களும் வழங்கி வைககப்பட்டதுடன். மேலும் நிகழ்வின் விருந்தினர்களாக மானிப்பாய் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் அ.ஜெபநேசன். மானிப்பாய் பிரதேசசபையின் செயலாளர் திருமதி ஜெயந்தா சோமராஜ். அயற்பாடசாலைகளின் அதிபர்கள். முன்பள்ளி ஆசிரியர்கள். முன்பள்ளி சிறார்கள்.பெற்றோர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்





யாழ்.குடாநாட்டில் ஏற்பட்ட கடும் மழை காரணமாக பல கிராமங்கள் வெள்ளத்தால் பாதிப்புக்குள்ளாகின. இம் மக்கள் இடம்பெயர்ந்து பொதுமண்டபங்களில் தங்க வேணடியநிலைஏற்பட்டது. இவர்களுக்கு தேவையான அத்தியாவசிய உலர் உணவு பொருட்கள் தேவைப்பட்டது. இதனை கருத்தில் கொண்டு புலம்பெயர் தமிழாகள் உதவமுன் வந்தனர். இந்தவகையில் வடமராட்சி கிழக்கு, தும்பளை பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான அத்தியாவசிய உதவிகளை ஜேர்மனியில் இருக்கும் கையல் புறோன் கந்தசாமி கோவில் நிர்வாகத்தினர் வழங்கியிருந்தனர். கந்தசஷ்டி தினத்தில் கோவிலுக்குவரும் பக்தர்கள் வழங்கியநிதி இம் மக்களின் உணவு தேவைக்காக வழங்கப்பட்டது. கையல் புறோன்கந்தசாமிகோவில்நிர்வாகத்தினர் தொடர்ந்து தாயக மக்களுக்கான வாழ்வாதார உதவிகளையும் செய்து வருகின்றனர். இவ் உதவி வலி.வடக்கு பிரதேச சபையின முன்னாள் துணை தவிசாளர் எஸ். சஜீவன் மூலம் வழங்கப்பட்டது.




மூளாய் குமரன் புலோ பகுதியில் அமைந்துள்ள மனிதவள சமூக நிலையத்தில் முன்பள்ளி விளையாட்டுப்போட்டி, பரிசளிப்பு நிகழ்வு என்பன அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வுகளில் வலி. மேற்கின் முன்னாள் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்குரிய பரிசில்களை வழங்கி வைத்தார்.



நோர்வே தமிழ் மகளிர் அமைப்பின் உதவியுடன் Feed The Poor உணவளிப்போம் என்ற அமைப்பின் ஊடாக புற்றுநோய்த்தாக்கத்துக்குட்பட்ட 4 பெண் பிள்ளைகளின் தாயொருவருக்கு தையல் இயந்திரம் ஒன்று அன்பளிப்பாக அண்மையில் வழங்கப்பட்டடபோது...

கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன் எழுதிய சிறுவர் கதைக் கொத்து நூல் வெளியீட்டு விழா அண்மையில் யாழ். நாவலர் கல்வி நிலையத்தில் இடம்பெற்றது. இதன்போது தொழிலதிபர் ஈ.எஸ்.பி. நாகரத்தினம் நூலின் முதற் பிரதியைப் பெற்றுக் கொள்வதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

## உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைத்தமைக்கு எதிர்ப்பு



உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டமைக்கு ஜே.வி.பி தமது கடும் எதிர்ப்பை தெரிவிப்பதாக அந்த கட்சியின் பொதுச செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டமை குறித்து கொழும்பு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை வெளியிட்டுள்ளார்.

அந்த வகையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை ஒத்தி வைக்க அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானம் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்கு முன்னதாக தேர்தல் நடத்தப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றில் உறுதியளித்திருந்த நிலையில் மீளவும் தேர்தல் ஒத்தி வைக்கப்படுவது ஜனநாயக ரீதியானதாக கருதப்பட முடியாது என அவர் தெரிவித்தார்.

கடந்த ஜனவரி மாதம் 8ஆம் திகதி நாட்டில் ஜனநாயகத்தை மீள நிலைநாட்டும் நோக்கிலேயே அரசாங்கத்திற்கு மக்கள் வாக்களித்ததாக கூறிய அவர் தேர்தலை ஒத்தி வைப்பது ஜனநாயக மாகாது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில் புதிய தேர்தல் முறைமையில் தேர்தல் நடத்தப்பட முடியாவிட்டால் பழைய முறையில் தேர்தல் நடத்தப்படுவதில் சிக்கல்கள் இல்லை எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

எனினும் தங்களது அரசியல் அதிகார போட்டிகளுக்காக தேர்தலை ஒத்தி வைக்கக் கூடாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

### சிறுவனுக்கு சூடுவைத்த பெண்ணுக்கு மறியல்

சிறுவனொருவனுக்கு கைகளில் சூடு வைத்த அரக்க குணம் கொண்ட பெண் ஒருவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஹொரணை அங்குருவாத் தொட்ட பிரதேசத்தில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. குறித்த பிரதேசத்தில வசிக்கும் எட்டுவயதுச் சிறுவனொருவன் தனது அத்தை வட்டில் இருந்து இருபது ரூபாய் பணம் மற்றும் மீன்தொட்டியிலிருந்து ஒரு மீனையும் திருடிச் சென்றுள்ளான். அதற்குத்தண்டனையாகபணத்தைப பறிகொடுதத பெண் குறித்த சிறுவனுக்கு பழுக்கக் காய்ச்சிய கரண்டியினால்கைகளில் சூடு வைத்துள்ளார். (இ-7)





### வலம்புரி என்றும் வாழ்கவே

அகவை பதினாறு கண்ட வலம்புரியே
ஆக்கங்கள் தந்து அறிவை வளர்த்தாயே
இன்பச்செய்திகள் இவ்வுலகை மகிழ்வித்ததே
ஈனச் செயல்களை எடுத்தியம்பி வலம் வருவாய்
உண்மை நடுவு நிலை தவறா நன்னெறி உன் பாதை
ஊடகவியலாளர்க்கு உன்னத இடம் தந்தாய்
என்றும் உன் வரவை எல்லோரும் எதிர்பார்த்து இருப்பாரே
ஏளனம் செய்வோரையும் எட்டி உதைக்க மாட்டாய்
ஐயம் தெளிவித்து அவர்களையும் அணைத்திடுவாய்
ஒன்றும் குறையில்லா உன்னதமானது உன்நிலை
ஓங்காரமாய் ஒலிக்கும் என் செய்திகள் உலகோர்க்கு
ஒளவைநெறி அகத்தேகொண்டுஅனைவரும்மகிழவாழ்கவே
எஃகம் போல் என்றும் ஒளி வீசும் வலம்புரி வாழ்க வாழ்கவே

எஃகம்-வேல்
தீர்வைத் தேவன்

## 29, 871 பேர் வெளிநாட்டில் பணிப்பெண்களாகவுள்ளனர்

கடந்த 2014 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்திலிருந்து 14, 871பெண்களும்2015 ஆம ஆண்டு சுமார் 15 ஆயிரம் பணிப்பெண்களுமாக 29, 871 பெண்கள் கடந்த இரு ஆண்டுகளில் மாத்திரம் பணிப்பெண்களாக வெளிநாடு சென்றுள்ளனர்.

2016 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை குறைவதற்கான வாய்ப்புண்டு. 2017 ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்திலிருந்து பெண்கள்பணிப் பெண்ணாக வெளிநாட்டுக்கு செல்வதை நிறுத்துவதற்கான வேலைத்திட்டங்களை உருவாக்க நடவடிக்கை எடுத்து வருவதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹபீஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் நடைபெற்ற சமூக மதிப்பீட்டுக்கான அமைப்பு (ஒசா) நடத்திய 500 பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை புத்தகப்பைகளை வழங்கி வைக்கும்வைபவத்தில உரையாற்றும்போதே அவர்மேற் கண்டவாறு தெரிவித்தார்.(இ-7)

# உங்கள் உணவும் குடிநீரும் பாதுகாப்புத்தானா?



அலை அலையாகத் திரண்டு வந்துவிட்டுப் போயிருக்கிறது வெள்ளம். ஆனால், குடிக்க சுகாதாரமான குடிநீர் இல்லை. உண்ணும் உணவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதால், கிடைப்பதைச் சாப்பிட வேண்டிய சூழல். இதுவே, புட் பாய்சன எனப்படும் உணவு வழியே பரவும் நோய்கள் ஏற்பட முக்கிய காரணமாக இருக்கிறது.

சமீபத்தில், ஒரு அம்மா தாங்க முடியாத வயிற்று வலி, வயிற்றுப்போக்கு, வாந்தி காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். என்ன பிரச்சினை என்று பார்த்தால், அவர் சாப்பிட்ட உணவு கெட்டுப் போயிருந்தது.

அவர் உட்கொண்ட உணவில் பக்றீரியா தொற்று ஏற்பட்டிருக்கிறது. வீணாக்க வேண்டாமே என்று நினைத்து அவர்உட்கொண்ட உணவு, அவருக்குப் பாதிப்பை ஏற்படுத்தி வைத்தியசாலை வரை கொண்டு சென்றுவிட்டது. மழைகாலங்களில் அதிகமாக ஏற்படும் நோய் இது. அலட்சியப்படுத்தினால், உயிர் பறிக்கும் நோயாகவும் மாறலாம். கவனக்குறைவு, சுத்தமின்மை, அலட்சியம், போதிய விழிப்புணர்வு இன்மை போன்றவைதான் புட்பாய்சன் ஏற்பட முக்கிய காரணம்.

உணவு நஞ்சாதல் (புட் பாய்சன்) உணவை நீண்ட நேரம் வெளியே வைக்கக் கூடாது. அப்படி வைத்தால், பக்றீரியா, வைரஸ் போனற தொற்றுகள்காரணமாக உணவு கெட்டுப்போய்விடும். இப்படி கெட்டுப் போன உணவுகளை உட்கொள்ளும்போது, உடலுக்குள் செல்லும் கிருமிகள் பாதிப்பை ஏற்படுத்தும். குமட்டல், வாந்தி, வயிற்றுப்போக்காக பாதிப்பு வெளிப்படும். இதைத்தான் புட் பாய்சன அல்லது உணவு நஞ்சாதல என்கிறோம். மழை காலத்தில் மட்டும் அல்ல, கோடையிலும் புட் பாய்சன் உண்டாக வாய்ப்பு அதிகம்.

### எந்த வகையில் புட் பாய்சன் வரலாம்?

பக்றீரியா, ஒட்டுண்ணி, வைரஸ்மூன்றும்தான்உணவு நஞ்சாக முக்கிய காரணிகள். நாம் சாப்பிடும் எந்த உணவுப் பொருளை எடுத்தாலும், அதில் மிகமிகக் குறைந்த அளவாவது நுண்ணுயிரிகள் இருக்கும். சமைக்கும்போது, அதிகப்படியான வெப்பம் காரணமாக இந்தக் கிருமிகள் அழிக்கப்படுகின்றன. இப்படி அழிக்கப்பட்ட கிருமிகளுடன்தான் நம் தட்டில் உணவு பரிமாறப்படுகிறது.

ஒருவேளை உணவுப் பொருளைச் சமைப்பவர், பரிமாறுபவர் கைகளை நன்கு சுததம் செய்யவில்லை எனில், கிருமித்தொற்று ஏற்படும். பொதுவாக, சமைக்காத உணவுப் பொருட்களை உட்கொள்ளும்போதுதான் புட் பாய்சன் அதிக அளவில் நடக்கிறது. தவிர உணவுப் பொருட்களை நீண்ட நேரம் வைத்து உட்கொள்ளும்போது அதில் கிருமிகள் பெருக்கம் அடைந்தும் புட் பாய்சன் நிகழ்கிறது.

### அறிகுறிகள் என்னென்ன?

சிறிய அளவில் ஏற்படும் புட் பாய்சன் பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தாது. ஆன்ால், பெரிய அளவில்விளைவுகளை ஏற்படுத்தும் புட் பாய்சனாக இருந்தால், வயிற்றுவலி, தலைவலி, குமட்டல், வாந்தி, வயிற்றுப்போக்கு, இதன் காரணமாக உடலில் தீவிர நீர் இழப்பு (Dehydration), போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம்.

சாதாரண வயிற்றுப் போக்குத்தானே! என்று அலட்சியப் படுத்தினால், அடுத்தகட்டமாக வாந்தி, மலத்துடன் இரத்தம் கலந்து வருதல், காய்ச்சல், அதீத வயிற்றுப்போக்கு, பார்வைத் திறன் மங்குதல், வயிற்று எரிச்சல், வயிற்றுப் பொருமல், கல்லீரல் பாதிப்பு, சிறுநீரகப் பாதிப்பு, வலிப்பு ஏற்படலாம். நிலைமை மோசமானால் உயிரிழப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புமுள்ளது.

மேலே சொன்ன அறிகுறிகள் எல்லாம் ஏற்படும் என்று இல்லை. ஒவ்வொருவருக்கும் தனித்தனி அறிகுறிகள் ஏற்படலாம்.

தீவிர நீர் இழப்புப் பிரச்சினை வந்து சிகிச்சை எடுக்காமல் இருந்தால், உடலில் நீர்ச்சத்து குறைவதன் மூலம், இதயம் பாதிக்கப்படலாம். சோடியம் உடலில் அதிகமாகலாம். மூளையில் பாதிப்பு ஏற்பட்டு, மரணம்கூட சம்பவிக்கலாம்.

வாந்தி பிரச்சினையில் வரும நோயாளிகளை, வைத்தியசாலையில் அனுமதித்து அதிக கவனம் கொடுத்து சிகிச்சை எடுத்துக்கொள்வது நல்லது. ஓரல் மருந்துகளைச் சாப்பிடுவதும் நல்ல தீர்வுதான்.

### உடனடி முதலுதவி என்னென்ன?

24-48 மணி நேரத்துக்குள் மருத்துவர் ஆலோசனை பெற்று, சிகிச்சை எடுக்க வேண்டியது அவசியம்.

குடிக்க முடிந்த நோயாளிகளுக்கு, இளநீர், நீர் ஆகாரங்களைக் கொடுத்து, உடலைத் தேற்றுவது நல்லது.

நீர் ஆகாரங்கள் அதிகமாக உட்கொள்ளலாம். இதனால் உடலில் நீர் இழப்பு ஏற்படுவது தடுக்கப்படும்.

எலெக்ட் ரோலைட் சத்துக்கள் கொண்ட, இளநீர் பருகுவது நல்லது. பழச்சாறுகளையும் அருந்தினால் புட் பாய்சன் பிரச்சினை படிப்படியாகக் குறையும்.

உடலில் எதிர்வினைகள் செயற்படுகிறது என்று தெரிந்தும் கட்டுப்பாடு இல்லாமல் உணவு சாப்பிடுவது தீவிரப் பிரச்சினைக்கு அழைத்துச் செல்லலாம்.

குடிக்க முடியாத நிலையில் உள்ளவர்களுக்கு டிரிப்ஸ் ஏற்ற வேண்டும்.

கைக்குழந்தைகளுக்கு வயிற்றுப்போக்கு ஏற்பட்டால், அவர்களுக்கு அவ்வப்போது நீராகாரம் புகட்ட வேண்டும். தாய்ப்பால் ஊட்டும் குழந்தையாக இருந்தால், குழந்தைக்குத் தாராளமாகத் தாய்ப்பால் கொடுக்கலாம்.

### என்னென்ன சிகிச்சைகள்?

நோயாளியின் அறிகுறிகளைப் பார்த்தே சிகிச்சை எடுக்க முடியும். சிலருக்குக் காய்ச்சல் மட்டும் வரலாம். சிலருக்கு வயிற்றுப்போக்கு, வாந்தி எனப் பிரச்சினைகள் மாறுபடுவதால் அந்தந்த நோயாளிக்கு ஏற்ற சிகிச்சைகள் அளிக்கப்படும். வாந்தி, நீர் வறட்சி பிரச்சினை கொண்ட நோயாளிகளுக்கு, அவசியம் உடனடி மருத்துவசிகிச்சை தேவைப்படும். இவர்கள் வீட்டிலேயே வைத்தியம் செய்து கொள்ளாமல் மருத்துவரை அணுகுவது முக்கியம். டிரிப்ஸ், ஆன்டிபயாடிக், ஓரல் மருந்துகள் போன்ற சிகிச்சைகள் புட்பாய்சனைச் சரி செய்யும.

### எதனால் புட்பாய்சன்?

கோழித் தீவனம், முட்டை, கோழி இறைச்சி, ஆட்டு இறைச்சி, கடல் உணவுகள், பால், நீரால் தயாரிக்கப்பட்ட பானங்கள், சீஸ், கழுவாத காய்கனிகள், பூஞ்சை பிடித்த மசாலா, பருப்பு மற்றும் தானியங்கள், சுத்தமில்லாத உணவகங்களில் சாப்பிடுவது, சுகாதாரமற்ற குடிநீரைக் குடிப்பது போன்றவற்றால் புட்பாய்சன் வரலாம்.

உணவு, நீர் இதனை ஆதாரமாக வைத்து தயாரிக்கப்படும் உணவுகளில் அதிக கவனம் தேவை. வயிற்றுப்போக்கு, வாந்தி போன்ற தொந்தரவுகள் முதற்கட்ட அறிகுறிகளாக தென்படுமாயின் உடனடி சிகிச்சை எடுப்பது அவசியம்.

# கடலில் தத்தளித்த 10,000 அகதிகள்

## ஜேர்மன் கடற்படையால் மீட்பு



கடலில் தத்தளித்த 10 ஆயிரத்திற்கும் அதிகமான அகதிகள் இந்த ஆணடு மீட்கப்பட்டுள்ளதாக ஜேர்மன் கப்பல் படை தெரிவித்துள்ளது.

சிரியா, ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக் உட்பட பல நாடுகளில் உள் நாட்டுப் போர், தீவிரவாதம் போன்ற காரணங்களால் ஏராளமான மக்கள் அகதிகளாக வெளியேறி வருகின்றனர்.

இவர்கள் ஆபத்தான கடல் பயணத்தின் மூலம் ஐரோப்பிய நாடுகளில் தஞ்சமடைகின்றனர்.

இதில் இந்தாண்டு மட்டும்10 ஆயிரத்துக்கும் அதிகமான மக்களை மீட்டதாக ஜேர்மன் கப்பல் படை தெரிவித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை கிறிஸ்மஸ் தினத்தன்று மட்டும் லிபியக் கடற்பகுதியில் இருந்து 500 அகதிகள் மீட்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து ஐ.நா. அகதிகள் முகாமை மற்றும் சர்வதேச இடம் பெயர்வு அமைப்பு கூறியதாவது, இந்த ஆண்டு மட்டும் ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு புகலிடம் கோரி வந்துள்ளதாகவும், அதிலும் கடல் பயணத்தின் மூலம் வந்தவர்களே அதிகம் எனவும் தெரிவித்துள்ளது.

மேலும் தொலைந்து போனதாக கருதப்படும் 3700 பேர் கடலில் மூழ்கியிருக்கலாம் என அச்சம் வெளியிட்டுள்ளது.

ஆபத்துக்களின் போது மீட்பு நடவடிக்கைகளில் பங்கேற்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் மீட்புக் குழுவில் இரண்டு ஜேர்மன் கப்பல்கள் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)




## பாப்பரசரின் ஆசீர்வாதத்தையடுத்து நோயிலிருந்து குணமடைந்த சிறுமி

(வோஷிங்டன்)

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நிலையில் ஒரு வருடத்துக்கு முன்னர் ரோம் நகரில் பாப்பரசரின் ஆசிபெற்ற 12 வயது சிறுமியொருவர் நோயிலிருந்து முழுமையாக விடுதலை பெற்றுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்க நியூஜெர்ஸி மாநிலத்தைச் சேர்ந்த கிரேஸ் என்ற சிறுமியே இவ்வாறு அதிசயிக்கத்தக்க வகையில் புற்றுநோயிருந்து முழுமையாக குணமடைந்துள்ளார். கிரேஸிக்கி அளிக்கப்பட்ட தீவிர சிகிச்சையும் அவரது அளவு கடந்த நம்பிகையுமே அவருக்கு புற்றுநோயிலிருந்து விடுதலை பெற உதவியதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

## அமெரிக்க பொலிஸ் துப்பாக்கி சூட்டில் ஆயிரம் பொதுமக்கள் உயிரிழந்தனர்

(வோஷிங்டன்)

2015 இல் அமெரிக்க பொலிஸார் நடத்திய பல்வேறு தாக்குதலில் பொதுமக்களில் சுமார் ஆயிரம் பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதில் பலியானவர்களின் எண்ணிக்கையில் ஆயுதம் இல்லாத கறுப்பினத்தவர்களே அதிகம்.

அமெரிக்காவில் இனவெறுப்பு ரீதியான உள்நாட்டு வன்முறைகள் கடந்த சில ஆண்டுகளாகவே அதிகரித்த நிலையில் உள்ளது. துப்பாக்கி கலாசார வன்முறை நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் இது குறித்த ஓர் ஆய்வை வோஷிங்டன் போஸ்ட் வெளியிட்டுள்ளது.

இந்த வன்முறைகளுக்கு எதிராக அமெரிக்க பொலிஸார் தடுப்பு நடவடிக்கைகளை அதிரடியாக எடுத்து வருகின்றனர். அத்தகைய நடவடிக்கைகளில் துப்பாக்கியுடன் காணப்பட்ட 564 பேரும் கத்தி போன்ற குறைந்த அளவு ஆபத்தை ஏற்படுத்தும் ஆயுதங்களை வைத்திருந்த 281 பேரையும் ஆயுதங்கள் ஏதும் இல்லாத 94 பேரும் கொல்லப்பட்டிருப்பதாக வோஷிங்டன் போஸ்ட் ஆய்வில் தெரிவித்துள்ளது.

இது மட்டுமல்லாது, பொலிஸாரால கொல்லப்பட்ட 5இல் ஒரு அமெரிக்க கறுப்பினத்தவர் அல்லது இலத்தின் அமெரிக்கர் என்றும் அந்த ஆய்வு குறிப்பிட்டுள்ளது. (இ-7)

## 4 ஐ.எஸ். தீவிரவாதிகளின் தலைகள் மக்கள் பார்வைக்கு


(காபூல்)

ஆப்கானிஸ்தானின் கிழக்குப் பகுதியில் உள்ள அச்சின் மாவட்டத்தில் உள்ள உள்ளூர் கிராம தீவிரவாத குழுவினர் ஐ.எஸ். தீவிரவாதிகளின் தலையைத் துண்டித்து பொதுமக்கள் பார்க்க வேண்டி அவர்களின் தலைகளை காட்சிக்கு வைத்துள்ளனர்.

உள்ளூர் எம்.பியான ஹஜி சகிர் என்வரின் ஆதரவாளரான இவர்கள் கடந்த சில வாரங்களாக தலிபான் மற்றும் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராகப் போராடி வருகின்றனர்.

இந்நிலையில், இந்த குழுவினர் நான்கு ஐ.எஸ் தீவிரவாதிகளின் தலையை துண்டித்து அவர்களின் தலையை கிழக்கு ஆப்கானிஸ்தானில் உள்ள ஒரு பிரதான வீதியில் பொதுமக்கள் பார்வைக்காக காட்சிக்கு வைத்ததாக உள்ளூர் அதிகாரிகள் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளனர். (இ-7)

## அகதிகளுக்கு அமெரிக்கா கருணை காட்ட வேண்டும் போப் பிரான்ஸிஸ் கோரிக்கை



அமெரிக்காவிற்குள் நுழையும் முயற்சியில் தத்தளித்துக் கொண்டிருக்கும் கியூபாவின் அகதிகளுக்கு மத்திய அமெரிக்க நாடுகள்கருணை காட்ட வேண்டுமென்று போப் பிரான்சிஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

மத்திய அமெரிக்கா வழியாக செல்லும் கியூப அகதிகள் பலர், ஆட்கடத்தும் சட்டவிரோத கும்பல்களிடம் சிக்கியவர்கள் என்று போப் தெரிவித்தார்.

குடியேறிகள் கடந்து செல்ல நிக்கரகுவா அரசு அனுமதி மறுத்த நிலையில், கியூபர்கள் பல்லாயிரம் பேர் கொஸ்டாரிகா -நிக்கரகுவா எல்லையில் சிக்கி நிற்கிறார்கள் என்று கருதப்படுகிறது.

அமெரிக்கா சென்றடைய முயலும கியூபர்களின் எண்ணிக்கை இந்த ஆண்டு 80 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக தெரியவருகிறது. (இ-7)

## அமெரிக்காவில் புயலால் 1000 விமானங்கள் ரத்து

(வோஷிங்டன்)

மத்திய மேற்கு, தெற்கு மற்றும் தென்மேற்கு அமெரிக்காவை கடந்த நான்கு நாட்களாக துவம்சம் செய்த புயல், சூறைக்காற்று, மழை, வெள்ளத்தால் அமெரிக்க மக்களின் தலைமை திருவிழாக்களான கிறிஸமஸ் மற்றும் புத்தாண்டு கொண்டாடங்கள் சீர்குலைந்து, களையிழந்து போய் உள்ளன.

இதேவேளை விமான சேவைகளும் இரத்து செய்யப்பட்டுள்ளன.

நியூமெக்சிகோ மற்றும் மிசவுரி பகுதி ஆளுநர்கள் அங்கு அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்க வேண்டிய சூழ்நிலையை இந்த இயற்கை சீற்றம் உருவாக்கியுள்ளது. மிசவுரி மற்றும் இல்லினாய் பகுதிகளில் மட்டும் மழை, வெள்ளம் சார்ந்த விபத்துக்களில் 13 பேர் பலியாகியுள்ளனர்.

டெக்சாஸ் மாநிலத்தில் உள்ள டெல்லாஸ் பகுதியில் மணிக்கு 322 கிலோமீற்றர் வேகத்தில் வீசிய புயல் காற்றால் அங்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. இங்கு 11 பேர் உயிரிழந்ததுடன் ஆயிரக் கணக்கான வீடுகள் நாசமடைந்துள்ளன.

மிசிசிப்பி மாநிலத்தில் கடும் சீற்றத்துடன் வீசிய சூறைக்காற்றுக்கு இருபதுக்கும் அதிகமானோர் பலியாகியுள்ளனர். நியூமெக்சிகோ, டெக்சாஸ், ஒக்லஹாமா மாநிலங்களில் புயலுடன் கூடிய கனமழையும் அதன் விளைவாக பெருவெள்ளப் பெருக்கும் ஏற்படலாம் என வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ள நிலையில் தாழ்வான பகுதிகளில் வசித்து வரும் இலட்சக்கணக்கான மக்கள் தங்களது வீடுகளை விட்டு வெளியேறி, பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

மேற்கண்ட பகுதிகளில் பல்லாயிரக்கணக்கான மரங்கள் வேரோடு சாய்ந்து வீதியை ஆக்கிரமித்துளளதால் பல இடங்களில் வாகனப் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. மோசமான வானிலை நிலவுவதால அமெரிக்காவில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளுக்கான ஆயிரக்கணக்கான விமானசேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன. (இ-7)

## கிராமவாசிகள் 14 பேர் சுட்டுப் படுகொலை தீவிரவாதிகளின் அட்டூழியத்தால் பதற்றம்

(கானா)

நைஜீரியாவில் அப்பாவி கிராமவாசிகள் 14 பேரை போகோஹறாம் தீவிரவாதிகள் சுட்டுக்கொலை செய்தனர். இதனால் அங்கு பதற்றம் நிலவுகிறது.

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் போகோஹறாம் தீவிரவாதிகள் கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். அங்கு ஒரு குறிப்பிட்ட மதச்சட்டத்தின் அடிப்படையிலான அரசை அமைப்பதற்காக உருவானதாக கூறப்படுகிற இந்த இயக்கம், அயல் நாடுகளான சாட், நைஜர், கமரூன ஆகியவற்றிலும் காலூன்றி வருகிறது.

இந்த இயக்கத்தினர் கடந்த 6 ஆண்டுகளாக நடத்திய தாக்குதல்களில் சுமார் 20 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஏறத்தாழ 23 இலட்சம் பேர் வீடுகளை விட்டு பாதுகாப்பான இடம் தேடி சென்றுவிட்டனர்.

**கிறிஸ்மஸ் நாளில் தாக்குதல்**

இந்த நிலையில் கிறிஸ்மஸ் பண்டிகை நாளில் (டிசம்பர் 25ஆம் திகதி), போர்னோ மாகாணத்தில் கிம்பா கிராமத்தில் துப்பாக்கி ஏந்திய போகோஹறாம் தீவிரவாதிகள் புகுந்தனர்.

வீடு வீடாகச் சென்று அங்குள்ளவர்களை வெளியே இழுத்து வந்து சரமாரியாக துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தினர்.

அத்துடன் விட்டுவிடவில்லை. அங்குள்ள வீடுகளுக்கும் தீ வைத்தனர். இந்தச்சம்பவம் அங்கு பெரும் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

**14 பேர் கொல்லப்பட்டனர்**

இது தொடர்பாக போகோஹறாம் தீவிரவாதிகளை எதிர்த்து சண்டையிட்டு வருகிற இராணுவத்துக்கு உதவியாக செயற்பட்டு வரும் கிராமவாசி முஸ்தபா கரிம்பீ கூறும்போது, "துப்பாக்கி ஏந்திய தீவிரவாதிகள் கம்பா கிராமத்தில் புகுந்து மிருகவெறி தாக்குதல் நடத்தினார்கள். இதில் 14 பேர்கொல்லப்பட்டனர். ஏராளமானோர் படுகாயம் அடைந்தனர்" என்றார்.

மூசா சுலைமான் என்ற கிராமவாசி கூறுகையில், "ஒரு வீட்டைக் கூட விட்டு வைக்காமல் தீ வைத்து கொளுத்தி விட்டனர்" என்றார்.

படுகாயம் அடைந்தவர்களை இராணுவத்தினர் மீட்டு, அருகில் உள்ள வைத்தியசாலைகளில் சேர்த்துள்ளனர். (இ-7)

# ஐ.எஸ்.தீவிரவாதிகளுக்கு மரணஅடி; ரமாடி நகரை மீட்டெடுத்த இராணுவம்

(பக்தாத்)

**ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் கோட்டையாக விளங்கி வந்த ரமாடி நகரை கைப்பற்றியதன் மூலம் அந் நாட்டில் அட்டூழியத்தில் ஈடுபட்டுவரும் தீவிரவாதிகளுக்கு இராணுவம் மரண அடி கொடுத்துள்ளது.**



இஸ்லாமிக் ஸ்டேட் இன் ஈராக் அன்ட் சிரியா என்ற நோக்கத்தில் தீவிரவாத இயக்கத்தை ஆரம்பித்த ஐ.எஸ். படையினர். ஈராக் மற்றும் சிரியாவில் சில பகுதிகளை கைப் பற்றி. பரந்து, விரிந்த இஸ்லாமிய சாம்ராஜ்யத்தை அமைக்க திட்ட மிட்டிருந்தனர்.

அவர்களது முதல் இலக்காக இருந்த ஈராக்கில் உள்ள அன்பர் மாகாண தலைநகரான ரமாடி நகரை கடந்த ஆண்டு ஜூன் மாதம் கைப்பற்றினர்.

அங்கிருந்தவாறே ஏனைய பகுதிகளையும் ஆக்கிரமிக்க தொடங் கிய தீவிரவாதிகள், ஏராளமான அப்பாவி மக்களை கொன்று குவித் ததுடன், இளம்பெண்களை கடத்திச் சென்று அவர்களை அடிமைகளாக மாற்றி சித்திரவதை செய்து வருகின்றனர்.

இந்நிலையில், ரமாடி நகரை மீண்டும் கைப்பற்றி விட்டால் ஐ.எஸ். தீவிரவாதிகளின் கொட் டத்தை அடக்கி விடலாம் என ஈராக் இராணுவத்தளபதி முடிவு செய்தார்.

இதையடுத்து, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் விமானப் படைகள் வானில் பறந்து குண்டு மழை பொழிய, தரைவழியாக முன் னேறிச் சென்று ரமாடி நகரை மீட்டே தீருவது என்ற போர்த்திட்டம் வகுக் கப்பட்டது.

இதையடுத்து, சுமார் பத்து நாட் களாக ரமாடி நகரை முற்றுகை யிடும் இராணுவத்தின் அதிரடி நட வடிக்கை தொடங்கியது. இதன் விளைவாக ரமாடி நகரை கைப் பற்றியுள்ளதாக ஈராக் அரசு நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

நகரின் பாதுகாப்பு நிர்வாகத்தை வழக்கம்போல் பொலிஸார் வசம் ஒப்படைக்க முடிவு செய்துள்ளதாக ஈராக் பிரதமர் தெரிவித்துள்ளார்.

ஈராக்-சிரியா இடையே உள்ள எல்லையோர நகரமான மொசூல் நகரை கைப்பற்றி, அங்கு முகா மிட்டுள்ள ஐ.எஸ். தீவிரவாதிகளை யும் நாட்டை விட்டு விரட்டி அடிப் போம் என இராணுவத் தளபதி தெரிவித்துள்ள நிலையில், ரமாடி நகரை மீட்பதற்காக நடந்த தாக்கு தலில் ஏற்பட்ட உயிர்ப்பலி தொடர் பான எந்த தகவல்களையும் ஈராக் அரசு வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சீனாவில் கண்டெடுக்கப்பட்ட பழங்கால தங்க குவியல்கள்



(பீஜிங்)

சீனாவின் ஹேஹூன் மாகா ணத்தில் அமைந்துள்ள கல்லறைத தோட்டத்தில் இருந்து குவியல் குவியலாக தங்கம் மற்றும் வெள்ளி நகைகள் மீட்கப்பட்டுள்ளன.

சீனாவின் ஹேஹூன் மாகா ணத்தில் அரச குடும்பத்தினரை அடக்கம் செய்வதற்காக பயன்படுத் தப்பட்ட கல்லறைத் தோட்டம் ஒன்று அமைந்துள்ளது.

இந்தத் தோட்டமானது ஹான் வம்சத்தினருக்காக பிரத்தியேக மாக பயன்படுத்தி வந்ததாக கூறப் படுகிறது.

இந்த கல்லறைத் தோட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த 8 கல்லறை களை தொல்பொருள் ஆராய்ச்சி யாளர்கள் கடந்த 5 ஆண்டுகளாக தீவிரமாக ஆராய்ச்சி செய்து வந்த தாக கூறப்படுகிறது.

தொல்பொருள் ஆய்வாளர் களின் ஆராய்ச்சி முடிவில் அப் பகுதியை தோண்டும் பணி பல்வேறு குழுக்களால் நடத்தப்பட்டு வந்துள்ளது.

இந்நிலையில், அந்த கல்லறை களில் இருந்து குவியல் குவியலாக தங்கம். வெள்ளி மற்றும் இரும்பு நாணயங்களை ஆய்வாளர்கள் கண்டெடுத்துள்ளனர்.

சீனாவில் இதுவரை கண்டெடுக் கப்பட்டுள்ள அரச கல்லறைகளில் ஹான் வம்சத்தினரின் கல்லறையே மிகவும் பத்திரமாக பாதுகாக்கப் பட்டிருப்பதாக ஆய்வாளர்கள் கூறி யுள்ளனர்.

ஆய்வாளர்களால் இதுவரை தோண்டப்பட்டு ஆய்வு நடத்திய கல்லறையானது வூ பேரரசரின் பேரனான Liu he என்பவரது கல்லறை என கருதப்படுகிறது.

Liu he என்பவர் அரசாள்வதில் திறமை மற்றும் ஒழுக்கமற்றவரா னதால் பதவியேற்ற 27 ஆம் நாளி லேயே குடும்பத்தினரால் அவரது அரச பதவி பறிக்கப்பட்டது என கூறப்படுகிறது. (இ-7)

# மோடி- நவாஸ் மீண்டும் பேச்சு

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பும் எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதி அமெரிக்காவில் சந்தித் துப் பேசவுள்ளனர்.

அமெரிக்க தலைநகர் வோஷிங் டனில் எதிர்வரும் மார்ச் 31. ஏப்ரல் 1 ஆகிய திகதிகளில் அணுசக்தி பாதுகாப்பு மாநாடு நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்க வருமாறு மோடி, நவாஸுக்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அழைப்பு விடுத்துள் ளார்.

அதன்படி இருநாட்டு தலைவர் களும் மாநாட்டில் கலந்து கொள்ள திட்டமிட்டுள்ளனர். அப்போது இருவரும் தனியாகச் சந்தித்துப் பேசுவார்கள் என்று தெரிகிறது.

கடந்த 25 ஆம் திகதி இந்திய பிரதமர் நரேந்திர மோடி திடீர் பயணமாக பாகிஸ்தானின் லாகூர் நகருக்குச் சென்றார். அங்கு அந்த நாட்டுப் பிரதமர் நவாஸ் ஷெரீப்பை சந்தித்து சுமார் 90 நிமிடங்கள் பேச்சுவார்த்தை நடத்தினார். இந்தச் சந்திப்பு இருநாட்டு உறவில் மிகப் பெரிய திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியா - பாகிஸ்தான் இடையே மீண்டும் சுமுக உறவு துளிர் விட்டி ருப்பதை அமெரிக்க பாதுகாப்புத் துறை நிபுணர்கள் வரவேற்றுள் ளனர்.

பாதுகாப்புத்துறை நிபுணர் நிக் கோலஸ் பர்னஸ் என்பவர் கூறிய போது, இருநாட்டு உறவை தீவிர வாதிகள் சீர்குலைக்க முயற்சிக்கக் கூடும், அதை தடுப்பது பாகிஸ்தான் அரசின் கடமை என்று தெரிவித் தார். (இ-7)

# ஒரே கல்லறைத் தோட்டத்திற்குள் புதைக்கப்பட்ட 800 குழந்தைகள்

## காரணம் என்ன?

(டப்ளின்)

அயர்லாந்தில் தனியாருக்கு சொந்தமான கல்லறைத் தோட்டம் ஒன்றில் 800 குழந்தைகள் வரை அடக்கம் செய்யப்பட்டிருக்கலாம் என தெரிய வந்துள்ளது.

அயர்லாந்தின் கால்வே மாகா ணத்தில் செயற்பட்டு வந்த சிறுவர் இல்லம் ஒன்றில் ஜூலியா தேவானே என்பவர் பணியாளராக இருந்து வந்துள்ளார்.

அந்த இல்லம் கடந்த 1961 ஆம் ஆண்டு மூடப்படும் வரை அங்கு பணியாற்றிய இவர், தாம் இறக்கும் முன்னதாக பதிவு செய்து வைத் திருந்த தகவல்கள் சமூக ஆர்வலர் களிடையே அதிர்ச்சியை ஏற்படுத் தியுள்ளது.

திருமணம் ஆகாமல் கருத்தரிக்கும் அன்னையர்களுக்காகவே அயர் லாந்தின் கால்வே மாகாணத்தில் இந்த இல்லம் செயற்பட்டு வந்துள்ள தாக கூறப்படுகிறது.

சமூக சிக்கல்களில் இருந்து தப்பிக்க பெரும்பாலான திருமண மாகாத அன்னையர்கள் தங்கள் குழந்தைகளை கன்னியர்களால் நடத்தப்படும் இந்த இல்லத்தில் ஒப்படைத்து வந்துள்ளனர்.

இந்த இல்லத்தில் குழந்தை களை பராமரிக்கும் பொருட்டும் உள்ளூர் சந்தைகளில் பொருட்களை வாங்கிவரவும் பணியாளராக தமது 9 ஆவது வயதில் சேர்ந்துள்ளார் ஜூலியா.

கன்னியர்களால் சமூக சேவையாக இந்த இல்லம் நடத்தப்பட்டாலும் பொருளாதார சிக்கல் காரணமாக குழந்தைகளை சரிவர பராமரிக்க அவர்களால் இயலாமல் போயுள்ளது.

இதனால் பலசமயங்களில் குழந்தை கள் நோய்வாய்ப்பட்டும் பட்டினியா லும் உயிரிழக்கும் நிலையும் உரு வாகியிருந்ததாக கூறப்படுகிறது.

பெரும்பாலான குழந்தைகளை அங்குள்ள கன்னியர்கள் அமெரிக்கா போன்ற நாடுகளில் இருந்து வரும் தம்பதியர்களுக்கு தத்துக் கொடுத் ததாகவும் தெரிய வந்துள்ளது.

போதிய உணவு இன்றியும் நோயினால் அவதியுற்று இறக்கும் குழந்தைகளை அந்த இல்லத்தின் அருகாமையில் உள்ள தோட்டத் தில் அடக்கம் செய்து வந்துள்ளதாக ஜூலியா தமது பதிவில் தெரிவித் துள்ளார்.

1925 முதல் அந்த இல்லம் 1961 ஆம் ஆண்டு மூடப்படும் வரை சுமார் 800 குழந்தைகளின் உடல் கள் குவியலாக அந்தத்தோட்டத்தில் அடக்கம் செய்திருக்கலாம் என அவர் அச்சம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து வெளியான தக வலின் அடிப்படையில் கடந்த ஆண்டு விசாரணை ஆணைக் குழு ஒன்றினை அமைத்துள்ளனர்.

ஆனால் அப்பகுதியில் உள்ள வரலாற்று ஆய்வாளர் ஒருவர் இந்தச் சிறுவர் இல்லம் குறித்து மேலும் ஆராய்ந்து வருவதாக கூறப்படுகிறது. (இ-7)

## ஜனவரி 12 ஆம் திகதி

# அமெ.பாராளுமன்றில் ஒபாமா இறுதிப்பேச்சு

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வின் பதவிக்காலம் அடுத்த ஆண்டு இறுதியில் முடிகிறது. புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் 2016 ஆம் ஆண்டு நவம்பர் 8ஆம் திகதி நடத் தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



இந்த நிலையில் ஒபாமா, அமெரிக்க பாராளுமன்றத்தில் கடைசி முறையாக ஜனவரி மாதம் 12ஆம் திகதி உரை ஆற் றப்போகிறார். இதை அவர் அதிகார பூர்வமாக அறிவித்துள்ளார்.

இது குறித்து, தற்போது ஹவாய் தீவில் ஆண்டிறுதி விடுமுறை நாட்களை கழித்து வரும் ஒபாமா தனது ஆதரவாளர்களுக்கு ஈமெயில மூலம் விடுத்துள்ள செய்தியில், "இன்னும் 12 மாதங்கள்தான் இருக்கின் றன. பதவியில் இருக்கும் வரையில் மாற்றத்தை கொண்டு வருவேன். குறிப்பிடத்தக்க பல காரியங்களை செய்திருக்கிறோம். நாம் பதவிக்கு வந்த போது மாதம் 7 1/2இலட்சம் பேர் வேலை இழந்து கொண்டிருந்தனர். ஆனால கடந்த 69 மாதங்களில் 1 கோடியே 37 இலட்சம் புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்கியுள்ளோம் வேலையில்லா திண்டாட்டம் 5 சதவீதமாக குறைந்துள்ளது. முதல் முறையாக 90 சதவீத மக்கள் சுகா தார காப்பீடு வாய்ப்பினை பெற்றிருக கிறார்கள். ஒபாமா சுகாதார திட்டத்தின் கீழ்மேலும் 1 கோடியே 70 இலட்சம்பேர் சுகாதார காப்பீடு பெற்றிருக்கிறார் கள்" என குறிப்பிட்டுள்ளார்.

மேலும், "இந்த சாதனைகளை எல்லாம் உங்களுடன் ஜனவரி 12ஆம திகதி (பாராளுமன்றத்தில் பேசி) கொண்டாடப்போகிறேன். அமெரிக்கா வுக்கு இன்னும் பிரகாசமான எதிர்காலம உள்ளது" என அவர் மேலும் தெரி வித்தார். (இ-7)





# சிறுவர் அரங்கம்

1319

## கூடா நட்பு

ஒரு அடர்ந்த காட்டின் ஓரமாய் இருந்த ஓர் ஊரில் பூனை ஒன்று வசித்து வந்தது. அந்தப் பூனை அந்த ஊரிலிருந்து அடிக்கடி பக்கத்து காட்டிற்கு சென்று வரும். அப்படி சென்று வருகையில் நரி ஒன்றை நட்பு பிடித்தது.

நரி வேட்டையாடி தின்ற மிச்ச சொச்ச உணவுகளை பூனைக்கு கொடுக்கும். பூனையும் ஒரு கட்டு கட்டும். இப்படி வாரம் ஒருமுறையேனும் காட்டுக்குச் சென்று நரி கொடுக்கும் விருந்தை ருசித்துக் கொண்டிருந்தது பூனை.

ஊருக்குள் சத்தம் போடாமல் யார் வீட்டின் அடுக்களைக்குள்ளாவது சென்று பயந்து பயந்து பாலையோ சோற்றையோ உருட்டித் தின்னுவதை விட காட்டு வாழ்க்கை பூனைக்குப் பிடித்து இருந்தது. அதே சமயம், நரிக்கு நகரத்துக்குச் செல்லவேண்டும் அங்குள்ள உணவு வகைகளையும் சாப்பிடவேண்டும் என்ற ஆசையாக இருந்தது.

ஒருநாள் நரி, "பூனை நண்பா! இத்தனை நாள் என்னுடைய விருந்தினராக வந்து நான் கொடுக்கும் விருந்தை சாப்பிட்டுச் செல்கிறாய்! ஆனால் உன் ஊருக்கு மட்டும் என்னைக கூப்பிட மாட்டேன் என்கின்றாயே? நான் இதைக் கேட்க கூடாதுதான்! ஆனாலும் என் ஊர் சுற்றிப் பார்க்கும் ஆசை கேட்கத் தூண்டிவிட்டது!" என்று கேட்டது.


பூனையார், "நரி நண்பா! உன்னை நகரத்துக்கு அழைத்துச் செல்ல ஆசைதான்! ஆனால் நீ மகிழ்ச்சி அதிகமானால் சத்தம் போடுவாய்! அது எனக்கல்ல உனக்குத்தான் ஆபத்து! அதனால் தான் உன்னைக் கூப்பிடவில்லை!" என்றது.

"இதென்ன பிரமாதம்! நான் என் மகிழ்ச்சியை கட்டுப்படுத்திக் கொள்கிறேன்! ரொம்ப நாளாய் நகரத்து உணவை ருசிக்க வேண்டும் என்பது எனக்கு ஆசை!" என்றது நரி.

அப்படியானால் சரி! உன்னை இன்றே என் ஊருக்கு கூட்டிச் செல்கிறேன்! தடபுடலான விருந்து சாப்பாடு போடுகிறேன்! ஆனால் நீ மட்டும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். காட்டுக்குள் இருப்பதாக நினைத்து மகிழ்வோடு ஊளையிட்டாயோ! அவ்வளவுதான்! எனக்கொன்றும் இல்லை! நீதான் மாட்டிக் கொள்வாய்" என்றது பூனை.

"அப்படியெல்லாம் நடக்காது நண்பா! நான் என் மனசை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்வேன்!" என்றது நரி.

உடனிருந்த மிருகங்களோ நரியை எச்சரித்தன. "நரியே! நமக்கு காடுதான் சரி! பூனையை நம்பாதே! நகருக்கு சென்றால் நமக்குப் பாதுகாப்பு கிடையாது" என்றன.



"உங்க புத்திமதியெல்லாம் யாருக்கு வேண்டும்? நான் நகரத்தை சுத்திப் பார்க்க போறேன்! நாவுக்கு ருசியா சாப்பிடப் போறேன்!" என்று நரி உற்சாகமாக பாடியபடி பூனையுடன் கிளம்பியது.

பூனை தான் வழக்கமாக தங்கியிருக்கும் வீட்டின் மொட்டை மாடிக்கு நரியைக் கூட்டிச் சென்றது. அன்றைக்கு முழுநிலா வானில் ஜொலித்துக் கொண்டிருந்தது.

அதைப் பார்த்ததுமே நரிக்கு உற்சாகம் பீறிட்டுக் கொண்டு வாயைத் திறந்து பாட ஆரம்பித்தது.

பூனை, உடனே நரியின் வாயை மூடியது. நண்பர்! நான் என்ன சொன்னேன்! அமைதியாக இரு.

இன்னும் கொஞ்ச நேரத்தில் உணவோடு வருகிறேன்! என்று வீட்டுக்குள் சென்றது. கொஞ்ச நேரத்தில் வீட்டில் இருந்த விதவிதமான பலகாரங்களை சத்தம் போடாமல் திருடி எடுத்து வந்து நரிக்கு கொடுத்தது.

பலகாரங்களின் ருசி நரிக்கும் மிகவும் பிடித்துப் போக இன்னும் கொஞ்சம் இன்னும் கொஞ்சம் என்று கேட்டு வாங்கி வயிறு முட்ட உண்டது.

பனிக் காற்று இதமாக வீச குளிர் நிலா ஒளிக்க நரிக்கு பாட்டுப் பாடவேண்டும் என்ற ஆசை தோன்றிவிட்டது.

பூனை எவ்வளவோ தடுத்தும் அது "ஊ! ஊ!" என்று ஊளையிட ஆரம்பித்தது.

"இதென்னடா மொட்டை மாடியில் நரியோட சத்தம் என்று வீட்டுக்காரர் பதறி அடித்து எழுந்து வந்தார். கையில் டார்ச்சும் தடியும் எடுத்தபடி அவர் வருவதைக் கண்ட பூனை, "நண்பா! நான் வருகிறேன்! இனி தப்பிப்பது உன் சாமர்த்தியம்!" என்றது.

"என்னது! ஆபத்து சமயத்தில் விட்டு ஓடுகிறாயே!"

"நண்பன் சொல்லை கேட்காமல் பாடினாயே!"

"நண்பா! காப்பாற்று!"

"உனக்குத்தான் ஆயிரம் தந்திரங்கள் தெரியுமே! எப்படியாவது பிழைத்துக் கொள்!"

"எனக்கு ஒன்றும் நினைவு க்கு வர வில்லையே!"

"எனக்கு தெரிந்த ஒரே தந்திரம் ஓடிப் போய் மரத்தில் ஏறிக் கொள் வதுதான்! வரட்டுமா!" பூனை ஓடிப்போய் பக்கத்தில் இருந்த மரத்தில் தாவிக் கொண்டது.

நரியால் அப்படி ஓட முடியவில்லை! மொட்டை மாடியில் இருந்து குதித்தாலும் கால் உடைந்துவிடுமே! அது தயங்க தடியாலும் கல்லாலும் அடித்து விரட்டினார் வீட்டுக்காரர்.

காயங்கள் வலிக்க அப்படியே காட்டுக்குள் தப்பிச்சோம் பிழைச்சோம்! என ஓடியது நரி.

அப்போ மத்த விலங்குங்க நரிகிட்ட என்ன நடந்துச்சுன்னு கேட்டுதுங்க!

அப்ப நரி ஒன்னு அழுதுச்சு! அப்புறமா இந்த பாட்டை பாடுச்சு!

கூடாத பேருடன்
கூடலாமா?
கூடுனாலும் கூடங்கள்
மாடங்கள் ஏறலாமா?
கூடங்கள் மாடங்கள்
ஏறினாலும்
நாதங்கள் கீதங்கள்
இசைக்கலாமா?
நாதங்கள் கீதங்கள்
இசைத்ததாலே
மேளங்கள் தாளங்கள்
கிடைத்தனவே!

அப்படின்னு வடிவேலு பாணியிலே அழுதுகிட்டே சொல்லுச்சு நரி! அதை மத்த விலங்குகள் பரிதாபமாக பார்த்தன! வேறு என்ன செய்ய முடியும்?

12.2015
29

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



- 1170 - இங்கிலாந்து, கண்டர்பரி ஆயர் தோமஸ் பெக்கெட் அவரது தேவாலயத்தில் வைத்து இரண்டாம் ஹென்றி மன்னனின் நான்கு ஆதரவாளர்களால் படுகொலை செய்யப்பட்டார்.
- 1690 - இத்தாலியின் அன்கானோர் நக்ரில் நில நடுக்கம் ஏற்பட்டது.
- 1778 - அமெரிக்கப் புரட்சிப் போர்: 3,500 பிரித்தானிய போர்வீரர்கள் ஜோர்ஜியா மாநிலத்தின் சவான்னா நகரைக் கைப்பற்றினர்.
- 1813 - 1812 போர்: பிரித்தானியப் படைகள் நியூயோர்க்கில் பஃபலோ என்ற நகரை தீக்கிரையாக்கினர்.
- 1835 - மிசிசிப்பி ஆற்றின் கிழக்கேயுள்ள செரோக்கீ இன மக்களின் நிலங்கள் அனைத்தையும் ஐக்கிய அமெரிக்காவுக்குக் கொடுக்கும் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.
- 1845 - டெக்சாஸ் ஐக்கிய அமெரிக்காவின் 28 ஆவது மாநிலமாக இணைந்தது.
- 1851 - அமெரிக்காவின் முதலாவது இளைய கிறிஸ்தவர்களின் அமைப்பு (வை.எம்.சி.ஏ) பொஸ்டனில் அமைக்கப்பட்டது.
- 1891 - தோமஸ் அல்வா எடிசன் வானொலிக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1911 - சுன் யாட்-சென் சீனக் குடியரசின் முதலாவது ஜனாதிபதியானார்.
- 1911 - மங்கோலியா கிங் வம்சத்திடமிருந்து விடுதலை பெற்றது.
- 1930 - அலகாபாத் நகரில் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய கவிஞரும், மெய்யியலாளருமான முகமது இக்பால் முஸ்லிம்களுக்கென தனிநாடு கோரிக்கையைக் கொண்ட தனது இரு-நாடுகள் கொள்கையை முன்வைத்தார்.
- 1937 - ஐரிய சுதந்திர நாடு புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்தி அயர்லாந்து குடியரசு எனப் பெயரை மாற்றியது.
- 1987 - 326 நாட்கள் விண்வெளியில் பயணித்த சோவியத் விண்வெளி வீரர் யூரி ரொமானின்கோ லூரசல Romanenko பூமி திரும்பினார்.
- 1989 - ஹொங்கொங் வியட்நாமிய அகதிகளை பலவந்தமாக வெளியேற்றியதை அடுத்து அங்கு கலவரம் மூண்டது.
- 1993 - உலகின் மிகப்பெரிய செம்பினாலான புத்தர் சிலை ஹொங்கொங்கில் அமைக்கப்பட்டது.
- 1996 - குவாத்தமாலாவில் அந்நாட்டு அரசுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் அமைதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதில் 36-ஆண்டு கால உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.
- 1997 - ஹொங்கொங்கில் கோழிகளுக்கு தொற்று நோய் பரவியதை அடுத்து அங்கிருந்த அனைத்து 1.25 மில்லியன் கோழிகளும் கொல்லப்பட்டன.
- 1998 - கம்போடியாவில் 1970களில் ஒரு மில்லியன் மக்கள் கொலை செய்யப்பட்டமைக்கு கெமர் ரூச் தலைவர்கள் மன்னிப்புக் கேட்டனர்.

### பிறப்புகள்

- 1937 - மாமூன் அப்துல் கயூம், மாலைதீவுகளின் முன்னாள் குடியரசுத் தலைவர்
- 1942 - ராஜேஷ் கன்னா, இந்தி நடிகர்
- 1965 - சி. ஜெயசங்கர், ஈழத்து எழுத்தாளர்

### இறப்புகள்

- 1924 - கார்ள் ஸ்பிட்டெலெர், நோபல் பரிசு பெற்ற சுவிட்சர்லாந்து எழுத்தாளர் (பி. 1845)
- 2004 - ஜூலியஸ் அக்செல்ரொட், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி. 1912)

# 2009ல் நடந்தது என்ன? தலைவர் பிரபாகரன் எங்கே?

## விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் பேட்டி



**வி**டுதலைப் புலிகள் இயக்கத்தில் முக்கிய தளபதியாக இருந்த தயாமோகன், இயக்கத்தில் 20 ஆண்டு காலம் பணியாற்றியவர்.

கருணா, விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து பிரிந்து சென்றபோது கிழக்கு மாகாண அரசியல் பொறுப்பாளராகப் பணியாற்றியவர் தயாமோகன்.

2009 மே மாதம் முள்ளிவாய்க்கால் போர் முடிவுற்றதாக அறிவிக்கப்பட்ட பின்னர் காட்டுக்குள் இருந்து ஜூன் மாதம் வெளிநாட்டுக்கு தப்பிச் சென்று தற்போது சுவிட்சர்லாந்து நாட்டில் வாழ்ந்து வருகிறார். தனியார் தொலைக்காட்சிக்கு அவர் அளித்த பேட்டியில்,

**2009ல் என்னதான் நடந்தது? பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் இணைந்து இந்த போருக்கு வித்திட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. தவிர, அந்தக் காலகட்டத்தில் நீங்கள் களத்தில் இருந்துள்ளீர்கள். ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டதாக சொல்லப்படுகிறது. உண்மையில் நடந்தது என்ன?**

மன்னார் மாவட்டம் மறைமாவட்ட ஆயர் ஜோசப் சொல்லியிருக்கிறார், ஒரு இலட்சத்து ஐம்பத்து ஆறு ஆயிரம் மக்கள் அங்கு பதிவில் இருந்து இப்போது இல்லாமல் இருக்கிறார்கள் என்று. அப்படிப் பார்க்கும்போது 1 லட்சத்து 56 ஆயிரம் பேர் கடைசி நேரங்களில் அந்த போரில் இல்லாமல் போயிருக்கிறார்கள் என்பதுதான் இந்த கேள்விக்கான பதில்.

இறுதிப்போரில் பல நாடுகள் இலங்கை இராணுவத்திற்கு உதவி செய்து, இந்தப் போரை வெற்றி கொள்ள முயன்றது உண்மை. இதில் குறிப்பாக இந்தியாவிற்கு எதிராக இருக்கின்ற சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகள், அதே நேரம் இந்தியா. எதிரெதிர் நாடாக இருந்த அத்தனை நாடுகளும் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை முற்று முழுதாக முடிக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு, அதன்படியே இந்தப் போரை முடித்துவிட்டார்கள்.

**கடந்த காலங்களில் வல்லரசு நாடுகளை எதிர்த்து புலிகள் இயக்கம் கடுமையாக எதிர்த்து வெற்றியும் பெற்றிருக்கின்றன. ஆனால், 2009ல் இறுதிப்போர் என்கிற அளவிற்கு இந்தச் சூழ்நிலை செல்ல காரணமென்ன?**

இந்திய இராணுவம் தொழில்நுட்ப ரீதியாக இலங்கைக்கு உதவி அளித்தது. இந்திய இராணுவம் நேரடியாகவே களத்தில் நின்றது. வவுனியாவில் விடுதலைப் புலிகளின் ராடார் அளிக்கப்பட்ட போது, இந்திய சிப்பாய் காயமடைந்திருப்பதை அறிவீர்கள்.

**தோல்வி என்று வந்தால் அது நம்மில் இருக்கும் ஒருவர் காட்டிக் கொடுத்தால் உண்டு என்று விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் முன்னமே கூறியுள்ளார். அந்த வகையில், இந்த போராட்டத்தின் தோல்விக்கு கருணா ஒரு முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது. இது உண்மைதானா?**

வீரபாண்டிய கட்டப்பொம்மனுக்கு எட்டப்பன் போல பிரபாகரனுக்கு ஒரு கருணா. இது வரலாற்றில் இருந்து அழிக்கப்பட முடியாத ஒன்று.


ஆனால் வரலாறு இப்போது திரிக்கப்படுகின்றது. இந்த குறுகிய காலத்திலேயே திரிக்கப்படுகின்ற நிலை வருகின்ற போது, நாங்கள் அதை வெளியே வந்து சொல்ல வேண்டிய கடமைக்கு தள்ளப்பட்டிருக்கின்றோம்.

இலங்கையில் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டு இன்று ஆறு வருடங்கள் நெருங்குகின்ற போது, அங்கு பத்து வயதாக இருந்த ஒரு பிள்ளைக்கு இன்று பதினாறு வயதாகிறது. இப்போது அவர்கள் வரலாறு தெரிய வேண்டியவர்கள். இந்த நேரத்தில் பிழையான வரலாறும் பிழையான தகவல்களும் கிடைத்து உண்மையான வரலாறு மறைக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக பேசுகிறேன்.

ஏனையவர்கள் காட்டிக் கொடுப்பவர்கள் இருந்தார்கள். இதில் முக்கியமானவர் கருணா. நீண்டகாலமாக எங்களுடைய போராட்டத்தில் படைத்தளபதியாக இருந்து வழிநடத்தியவர். எங்களுடைய இராணுவ, தொழில்நுட்ப, படைபல இரகசியங்களை கணிசமாக, 90 விகிதம் தெரிந்த ஒருவர் எதிரிப்படைக்கு தகவல் கொடுக்கின்ற போது எந்த அளவு பாதிப்பு ஏற்படும் என்பது சாதாரண மக்கள் கூட புரிந்துகொள்ள முடியும். அந்த வகையில் கருணாவின் காட்டிக்கொடுப்பு என்பது இந்தப் போராட்டத்தில் மிகப்பெரிய பங்களிப்பை செய்தது.

**இறுதிக்கட்ட போருக்கு முன்பாகவே கிழக்கு மாகாணத்திலிருந்த போராளிகளை பிரபாகரன் பாதுகாப்பிற்கும் மேற்கு மாகாணத்தில் நியமிக்கப்பட்டதை, கருணா மீண்டும் கிழக்கு மாகாணத்திற்கு அழைத்ததாகவும், அது எப்படி வர முடியும் என்று கேட்டபோது, இலங்கை இராணுவத்தின் வழியாக வாருங்கள் என்று கருணா சொன்னதாக கூறப்படுகிறது. அது குறித்து உங்கள் கருத்து என்ன?**

நான் உட்பட 600 படை அணி வீரர்களை கருணா ஏற்கனவே தலைவரின் பாதுகாப்புக்காக வடக்கிற்கு அனுப்பி இருந்தார். கருணாவுக்கும் தலைவருக்கும் நடந்த சொற்போரின் போது நான் உட்பட கிழக்கு மாகாண 600 படை அணியினரும் தலைவருடன்தான் நிற்கிறோம். கருணாவுக்கு அளித்த தகவலையும், கருணா தனக்கு அளித்த மறுமொழியையும் தலைவர் எங்களிடம் காண்பித்தார்.



இப்படிப்பட்ட நிலையில்தான் கருணா நேரில் வராமல், எங்கே தன்னைக் காட்டி கொடுத்து விடுவார்களோ என்று அச்சத்தின் பேரில் தன் சொந்த பந்தங்களை, போராளிகளைக் கொல்லத் தொடங்குகிறார். இதற்குப் பிறகுதான் தலைவர் சொன்னார்.. இனி விட்டால் கருணா சொந்தப் படை அணியினரைக் கொன்று சிதைத்து விடுவார். எனவே கிழக்கில் சென்று புலிகள் இயக்கத்தை மீட்டு எடுங்கள் என்று கட்டளையிட்டார்.

இப்படி நடந்து கொண்டு இருக்கக் கூடிய நிலையில்தான் கருணா எம்மைத் தொடர்பு கொண்டு, 600 படை வீரர்களோடு வடக்கில் அங்குள்ளவர்களை அடித்து விட்டாவது கிழக்குக்கு வந்து விடுங்கள் என்று சொல்கிறார். நாங்கள் சொன்னோம் அது எப்படி முடியும் என்று. அதற்குக் கருணா சொன்னார்.


ஒன்றும் இல்லை நீங்கள் அங்கிருந்து வந்து இலங்கை இராணுவத்திடம் வந்து விடுங்கள் அவர்கள் உங்களைப் பத்திரமாக மீட்டுக் கப்பல் மூலமாக அழைத்து வந்து எம்மிடம் ஒப்படைத்து விடுவார்கள் என்று. எங்களுக்கு அதிர்ச்சியாகிவிட்டது.

இலங்கை இராணுவம் வழியாக வாருங்கள் என்று அவர் சொன்னதில் இருந்து கருணா இலங்கை இராணுவத்தோடு கைகோத்து விட்டார்.. நிலைமை எல்லை மீறிப் போய்விட்டது என்பதை அறிந்து நடந்தவற்றை எல்லாம், கருணா பேசியதை எல்லாம் தலைவரிடம் காண்பித்தோம். கருணா பேசியதை நாங்கள் பதிவு செய்திருந்தோம். இதற்கு பிறகுதான் தலைவர் கிழக்கை மீட்டு எடுப்பதில் தீவிரம் காண்பித்தார். அப்போதும் அவர் சொன்னார். நீங்கள் துப்பாக்கியை நீட்டுவது உங்கள் உடன்பிறப்புகளுக்கு எதிராக. முடிந்தவரை துப்பாக்கிப் பயன்பாடு வேண்டாம். அவர்களை அச்சுறுத்தி கைப்பற்றுங்கள் என்றார். ஆனால்.. அந்தச் சண்டையில் கிழக்கு மாகாண த்தின் 23 புலிகள் இறந்து போனார்கள். அவர்களில் பொறுப்பாளர்கள் யாரும் இல்லை, அவர்கள் போராளிகள்தான் என்று உறுதியானால் அவர்களை மாவீரர்கள் பட்டியலில் சேருங்கள் என்று சொன்னார் எமது தலைவர் பிரபாகரன்.

(தொடரும்)

# மகிந்த அரசாங்கத்தின் மோசடியால் கப்பல் கூட்டுத்தாபனம் நட்டத்தில்

# அமைச்சர் அர்ஜுன குற்றச்சாட்டு



(கொழும்பு) —

**மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் காலத்தில் கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு கப்பல்கள் காரணமாக கப்பல் கூட்டுத்தாபனம் நட்டத்தை எதிர்கொண்டுள்ளதாக அமைச்சர் அர்ஜுன ரணதுங்க குற்றம் சாட்டியுள்ளார்.**

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் வங்கிக் கடன் மூலமாக கப்பல் கூட்டுத்தாபனத்துக்கு இரண்டு கப்பல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக மக்கள் வங்கியிலிருந்து சுமார் 80 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடனாக பெறப்பட்டுள்ளது.

கப்பல் கூட்டுத்தாபனத்திற்கு கொள்வனவு செய்யப்பட்ட ஒரு கப்பலின் சந்தை விலை 28 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். எனினும் அன்றைய அரசாங்கம் ஒரு கப்பலுக்கு 35 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை செலவிட்டுள்ளது. இதன்மூலம் 14 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மேலதிகமாக செலவிடப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த கப்பல்கள் இதுவரை இலங்கையிடம் கையளிக்கப்படவில்லை.

எதிர்வரும் வருடத்தில் தான் இரண்டு கட் டங்களாக இரண்டு கப்பல்களும் இலங்கைக்கு கையளிக்கப்படவுள்ளன.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்திற்கான நிலக்கரியை எடுத்துச் செல்லவும், கடற்படையினரின் பயிற்சிக்காகவும் என்ற பெயரில் கொள்வனவு செய்யப்பட்டுள்ள குறித்த கப்பல்களிலிருந்து எதிர்பார்த்த வருமானத்தை ஈட்ட முடியாது.

மேலும் கப்பல் ஒன்றின் நாளாநத பராமரிப்பு செலவு ஐயாயிரம் அமெரிக்க டொலர்களாகும். வங்கிக் கடனுக்கு நாளாந்தம் பதினைந்தாயிரம் அமெரிக்க டொலர்கள் செலுத்த வேண்டும்.

இவ்வாறாக தினமொன்றுக்கு 50 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் வரையில் கப்பல் கூட்டுத்தாபனத்துக்கு அநாவசிய செலவு ஏற்பட்டுள்ளது. இதன் மூலம் இதுவரை கால மும் இலாபத்தில் இயங்கி வந்த கபபல் கூட்டுத்தாபனம் பாரிய நட்டத்தை எதிர்கொண்டுள்ளதாக அமைச்சர் அரஜுன ரணதுங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# அமைச்சரவை மாற்றத்தின் போது அரசாங்கத்தரப்புக்கு தாவும் சமல்

முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ இன்னும் சில நாட்களில் உததியோகபூர்வமாக ஆளுங்கட்சி வரிசைக்கு மாறுவதற்குத் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் சில நாட்களுக்குள் மேற்கொள்ளப்படவுள்ள அமைச்சரவை மாற்றத்தின் போது சமல் ராஜபக்ஷவுக்கும் அமைச்சுப் பதவியொன்று வழங்கப்படவுள்ளது. இதன்பின்னர் அவர் மகிந்த ஆதரவு அணியிலிருந்து முற்றாக விலகி, ஆளுங்கட்சிக்கு ஆதரவாக செயற்படவுள்ளார். தற்போதைய நிலையில அம்பாந்தோட்டை மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவராகவும் சமல் ராஜபக்ஷ ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கிடையே தற்போது எதிரணியில் இருக்கும் கீதா குமாரசிங்க, பவித்திரா வன்னியாராச்சி, மனூஷ நாணயக்கார ஆகியோரும் புதிய அமைச்சரவை மாற்றத்தின்போது அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்கவுள்ளனர் என்றும் தெரிய வந்துள்ளது. (இ-7)

# இயற்கைவலு மின்னுற்பத்தியை அதிகரிக்க விசேட நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையில் இயற்கை வலு மின் உற்பத்தியை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக மின்சக்தி, மீளுருவாக்க சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

இதன் ஒரு கட்டமாக சூரிய ஒளி மற்றும் காற்றிலிருந்து மின்சாரம் தயாரிக்கப்படும் மின்சாரத்தின் அளவை அடுத்த வருடம் முதல் தினமொன்றுக்கு 500 மெகா வோட் வரையில் அதிகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைக்கு காற்று மற்றும் சூரிய ஒளி கொண்டு தினமொன்றுக்கு 400 மெகாவோட் வரையிலான மின்சாரம் தயாரிக்கப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக சிறிய நீர்த்தேக்கங்கள் மற்றும் இயற்கை வலு மூலங்களைக் கொண்டு மின்னுற்பத்தி செய்யும் நடவடிக்கைகளை இலங்கை எங்கும் பரவலாக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் புதிய மின்சாரக் கொள்கையின் பிரகாரம் எதிர்வரும் காலத்தில் யாழ்ப்பாணத்தில் இரண்டு சூரிய ஒளி மின்னுற்பத்தி நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. (இ-7)

# ஊவா சபை உறுப்பினர்களில் 20 பேர் வெளிநாடு பயணம்

இந்தோனேசியா மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களை பார்வையிடுவதற்காகவும் ஊவா மாகாணத்தில் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பது தொடர்பில் ஆய்வு செய்யவும் மாகாண சபை உறுப்பினர்களில் 32 பேர், மேற்படி நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளதாக மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்தார்.

இதற்காக மூன்று கோடியே 60 இலட்சம் ரூபாய், ஊவா மாகாண சபையின் நிதியிலிருந்து பெறப்பட்டுள்ளதாக அவர் கூறினார். இக்குழுவில் 20 பேர் நேற்று பயணமாகியுள்ளதுடன் இரண்டாவது குழு, ஜனவரி மாதம் 2ஆம் வாரத்திலும் பயணம் மேற்கொள்ளவுள்ளது.

ஊவா மாகாண சபையின் 34 உறுப்பினர்களில் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்கள் இருவர் மட்டும் மேற்படி விஜயத்தில் பங்கேற்கவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

மக்களின் நிதியை வீண் விரயம் செய்யக்கூடாதென்றும் இவ் விஜயத்துக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் பெருநதொகை நிதியை, ஊவா மாகாண மக்களின் நலனுக்காக பயன்படுத்தலாமென்ற நிலைப்பாட்டிலேயே தாம் இருப்பதாக, மாகாண சபையின் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர் சமந்த வித்தியாரத்ன தெரிவித்தார்.

இக்கள விஜயத்துக்கு முழுமையான எதிர்ப்பை தெரிவிப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## பேரறிஞர்

ஜவஹர்லால் நேரு பிரதமராக இருந்த சமயம் அவர் ஒரு தடவை முக்கிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக சென்னைக்கு வந்திருந்தார். ஆளுநர் மாளிகையில் ஒரு நாள் இரவு தங்கி மறுநாள் புதுடில்லிக்குப் புறப்படுவதாக ஏற்பாடு! நிகழ்ச்சிகளை யெல்லாம் முடித்துக்கொண்டு ஆளுநர் மாளிகையில் தங்கியிருக்கிறார்.

அன்றிரவுபடிப்பதற்கு ஒரு முக்கியமான புத்தகம் அவருக்குத் தேவைப்பட்டது. அந்தச் சமயத்தில் உலக அளவில் ஒரு முக்கியமான பொருளாதாரம் சம்பந்தமான ஒரு புத்தகம் வெளியாகியிருக்கும் விடயம் அவருக்குத் தெரியும்.

அந்தப் புத்தகம் சென்னைக்கு வந்திருக்குமா? அது இங்கே கிடைக்குமா? என்று விசாரித்தார் நேருஜி.

அவர் இப்படிக் கேட்டவுடன் அங்கிருந்தவர்களெல்லாம் பரபரப்பாக செயற்பட ஆரம்பித்தனர். முக்கிய இடங்களில் எல்லாம் விசாரித்தார்கள்.

சென்னையிலுள்ள கன்னிமாரா நூல் நிலையத்திற்கு எப்படியும் அந்தப் புத்தகம் வந்திருக்கும் என்ற நம்பிக்கையில் அங்கு விசாரித்தார்கள்.

அந்தப்புத்தகம் இரண்டு நாட்களுக்கு முன்புதான் அங்கு வந்திருந்தது. உடனே அங்கே போனார்கள்.

அவர்களுக்கு இன்னொரு சந்தேகம்! "புத்தகம் வந்திருக்கிறது சரி... வேறுயாரும் அதை எடுத்துக் கொண்டு போயிருக்கக்கூடாதே..." இருந்தாலும் மனதில் ஒரு தைரியம்.

இப்படி ஒரு புத்தகம் வெளிவந்திருப்பதே நேரு சொல்லித் தான் நமக்கே தெரியும். அதுவுமில்லாமல் உலகப் பொருளாதாரம் சம்பந்தமான ஏதோவொரு புத்தகம் அது. அதைப் போய் அவ்வளவு ஆர்வமாக யார் எடுத்துக்கொண்டு போயிருக்கப் போகிறார்கள் என்ற தைரியம் தான்.

இந்தத் தைரியத்துடன் அந்த நூல் நிலையத்துக்கு போய்ப் பார்த்தால், அது கிடைக்கவில்லை அதை யாரோ எடுத்துக் கொண்டு போயிருக்கிறார்கள்.

நேருவுக்கு மட்டுமே தெரிந்திருந்த அந்தப் புத்தகம் பற்றிய விடயம் சென்னையிலுள்ள இன்னொருவருக்கும் தெரிந்திருக்கிறது.

உடனே எல்லோரும் பரபரப்பாக யார் எடுத்தது என்று தெரிந்து கொள்வதற்காக நூல் நிலைய றெஜிஸ்டரைப் புரட்டிப் பார்த்தார்கள். அதில் சி.என். அண்ணாதுரை என்று எழுதியிருந்தது. அவர்தான் பேரறிஞர் அண்ணா.

நேரு படிக்க விரும்பிய ஒரு புத்தகத்தை அதே நேரம் படிக்க விரும்பிய இன்னொரு தலைவர் இவர்.

படிப்பதில் அவருக்கிருந்த ஆர்வத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் அதற்கு எவ்வளவோ சம்பவங்கள் உண்டு.

கடைசிக்காலத்தில் அவர் மருத்துவமனையில் இருந்தார். அப்பொழுது அவருக்கு ஒரு முக்கியமான அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டியிருந்தது.

அமெரிக்காவிலிருந்து டாக்டர் மில்லர் வந்திருக்கிறார். அவரிடம்,

'டாக்டர் நாளைக்கே அறுவைச்சிகிச்சை செய்யப் போகிறீர்களா?" என்றார்.

"ஆமாம்" என்றார் டாக்டர்.

"நாளை மறுதினம் செய்து கொள்கிறேனே!" என்றார் அண்ணா.

"ஏன் ஏதாவது நாள் பார்க்கிறீர்களா?" என்றார் அவர்.

"இல்லை ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருக்கிறேன். அதை நாளைக்குள் முடித்துவிடுவேன். அதன் பின் நான் இறந்தாலும் கவலையில்லை!" என்றார்.

அவர் தான் அறிஞர் அண்ணா.

சங்க நூல்களிலிருந்து சமீபத்திய நூல்கள் வரை எல்லாம் படித்திருக்கிறார் அவர்.

ஒரு திருமண விழாவில் அவர் பேசும் போது சொன்ன விடயம் இது!

சங்க காலத்தில் காதலியை மணக்க விரும்புபவனுக்கு அவளுடைய தந்தை சோதனைகளெல்லாம் வைப்பார். "போய்ப் புலிப்பல் கொண்டு வா, அப்பொழுதுதான் என் பெண்ணைத் தருவேன்!" என்பார்.

காதலன் உடனே காட்டுக்குப் போய் ஒரு புலியைக் கொன்று அதன் பல்லைக் கொண்டு வருவான். அதை வீரப்பதக்கத்தில் பதித்து திருமணத்தன்று அவனுக்கு சூட்டுவார்கள்.

இப்பொழுதெல்லாம் காதலனிடம் "காட்டுக்குப் போய் புலிப்பல் கொண்டு வா! என்று சொன்னால்... புலிதான் மாப்பிள்ளையாக வரும்!" என்றாராம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# மகிந்த தலைமையில் புதிய கட்சி உருவாகாது

## டிலான் நம்பிக்கை

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் புதிய கட்சியொன்று உருவாக்கப்படும் என பரபரப்படும் செய்தி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை இரண்டாகப் பிரிக்க எடுக்கும் ஐ.தே.கட்சியின் நடவடிக்கையே ஆகும் என ஸ்ரீ.ல.சு.க. செயலாளரும் அமைச்சருமான டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.**



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஸ்ரீ.ல.சு.கட்சி பிரிவதற்கு இடமளிக்கப் போவதில்லையென வும், எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சுதந்திரக் கட்சிக்காக செயற்படவுள்ளதாகவும் அறிவித்துள்ளார். வரவுசெலவுத்திட்டத்தில் கூட அவர் எதிராக வாக்களிக்காது தவிர்த்து கொண்டமை இதனாலேயே ஆகும் இந்நிலையில்இவ்வாறு செய்தி பரப்பப்படுவதாகவும் அமைச்சர் குற்றம் சாட்டியுள்ளார். (இ-7)

# ராணுவத்தளம் முடக்கப்பட்டது

இலங்கை இராணுவத்தின் இணையத்தளம் முடக்கப்பட்டுள்ளதாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் அதிகாலை வேளையில் இவ்வாறு இலங்கை இராணுவத்தின் உத்தியோகபூர்வ இணையததளம் முடக்கப்பட்டுள்ளது.

இணையத்தளத்திற்குள் அத்துமீறி பிரவேசித்த ஒரு தரப்பு அரை மணித்தியாலம் இணையத்தளத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது.

இராணுவத்தின் உத்தியோக பூர்வ விபரங்களை மாற்றியதுடன் நாடு கடந்த தமிழீழ இராச்சியத்தின் பிரதமர் உருத்ரகுமாரனின் புகைப் படமொன்றையும் இணையத்தளத்தில் பிரசுரித்துள்ளனர்.

எவ்வாறெனினும் துரித கதியில் செயற்பட்ட படையினர் இலங்கை இராணுவத்தின் உத்தியோகபூர்வ இணையத்தள கட்டுப்பாட்டை மீளவும் பெற்றுக்கொண்டதுடன் தேவையற்ற தகவல்களை நீக்கியுள்ளனர்.

நாச வேலைகளை மேற்கொள்ளும் நோக்கில் இவ்வாறு இணையத்தளம் முடக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி கிருஸாந்த டி சில்வா கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் குறித்து விரிவான விசாரணைகள் நடத்தப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இணையத்தளங்கள் மீதான ஊடுருவல்கள் இதற்கு முன்னரும் பதிவாகியுள்ளன என இராணுவப் பேச்சாளர் ஜயநாத் ஜயவீர தெரிவித்துள்ளார். (இ-7)

# முதலீட்டாளர்களையும் விட்டு வைக்காத நாமல்

இலங்கையில் சுற்றுலா ஹோட்டல்கள் மற்றும் வீடமைப்புத் திட்டங்களை நிர்மாணிப்பதில் முதலீடுகளை மேற்கொண்டுள்ள கிறீஸ் கம்பனியிடமிருந்து பெருந்தொகைப்பணம்கப்பமாகப்பெறப்பட்டுள்ளது.

இலங்கையில் 99 வருட கால குத்தகைக்கு நிலங்களைப் பெற்று சுற்றுலா ஹோட்டல்கள் மற்றும் ஆடம்பர வீடுகளை நிர்மாணிப்பதற்கு கிறீஸ் முதலீட்டு நிறுவனம் முன் வந்திருந்தது. இதற்கென பல்லாயிரம் கோடிகளை அந்த நிறுவனம் இலங்கையில் முதலீடு செய்திருந்தது.

குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் இலங்கைக்கு முதலீடுகளை கொண்டு வந்திருந்த இந்த நிறுவனத்துக்கு நிலங்களை ஒதுக்கிக் கொடுப்பதற்காக பெருந்தொகைப் பணம் கப்பமாக பெறப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷவின் மூத்த புதல்வர் நாமல் ராஜபக்ஷவே குறித்த கப்பம் பெற்ற சம்பவத்தின் பின்னணியில் செயற்பட்டதாக நம்பகமான தகவல்கள்தெரிவிக்கின்றன.(இ-7)

# ஹிருணிகாவின் தாயாருக்கு வழங்கிய வீட்டை திரும்ப ஒப்படைக்குமாறு ஜனாதிபதி உத்தரவு

நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவின் தாயாருக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள வீட்டை மீள ஒப்படைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் அவரது ஆலோசகராக செயற்பட்ட பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர. கொலன்னாவையில் வைத்து அன்றைய நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவினால் துப்பாக்கிச் சூட்டின் மூலம் படுகொலை செய்யப்பட்டார்.

அதனையடுத்து பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் மனைவி மற்றும் குடும்பத்தினருக்கு பாதுகாப்பை முன்னிட்டு கொழும்பு -07 இல் அமைந்துள்ள சமிட் தொடர் மாடியில் தற்காலிகமாக வீடொன்று வழங்கப்பட்டிருந்தது.

அத்துடன் பாரதவின் மனைவி சுமணா பிரேமச்சந்திர, மகள் ஹிருணிகா பிரேமச்சந்திர ஆகியோருக்கும் விசேட பாதுகாப்பும் வழங்கப்பட்டது.


ஆட்சி மாற்றம் நடைபெற்று ஹிருணிகா நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவான பின்னரும் சுமணா பிரேமச்சந்திர உள்ளிட்ட குடும்பத்தினர் குறித்த வீட்டில் தொடர்ந்தும் தங்கியுள்ளனர்.

இந்நிலையில் குறித்த வீட்டை விட்டு வெளியேறுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தற்போது உத்தரவிட்டுள்ளார்.

மேலும் ஹிருணிகா நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவானதன் பின்னர் அந்த வீட்டில் குடியிருந்த காலப்பகுதிக்கு வாடகை செலுத்துமாறும் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 588

### ஷாரா




### சந்திரன் சிந்துஜா




### கீர்த்தனா கருணாகரன்




### சர்மிலா

"புலம்பல்ஸ்" @ ..ரிலாக்ஸ் ப்ளீஸ்..

கொசுவுக்கு வயிறு நிரம்ப
எவ்வளவு இரத்தம் தேவைன்னு
தெரிஞ்சா,தூங்கும் முன்பே அதன்
வயிறை நிரப்பிட்டு தூங்கிடலாம்

#சனியன் நைட் புல்லா கடிக்குது

### விமல்ராஜ்




### நதீபன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தமிழ் சினிமா வரலாறு

## 84 ஸ்டூடியோ 1975 இல் மூடப்பட்டது

**இறுதி ஊர்வலம்**

மாலையில் இறுதி ஊர்வலம் நடந்தது. ஊர்வலம், மைலாப்பூர் எட்வர்ட் எலியட்ஸ் சாலையில் (இன்றைய ராதாகிருஷ்ணன் சாலை) உள்ள வாசன் இல்லத்தில் இருந்து புறப்பட்டது.

எம்.ஜி.ஆர், பட அதிபர்கள் ஏவி.மெய்யப்பட்ட செட்டியார், சுந்தர்லால் நகாதா, முன்னாள் அமைச்சர்கள் கக்கன், பூவராகன், தமிழரசு கழக தலைவர் ம.பொ.சிவஞானம் மற்றும் திரை உலகப் பிரமுகர்கள் ஊர்வலத்தில் நடந்துசென்றனர்.

உடலை சுமந்து செல்ல, ஜெமினிகணேசன் தோள் கொடுத்தார்.

ஊர்வலத்தில் பல்லாயிரக் கணக்கானோர் கலந்து கொண்டனர். இறுதி ஊர்வலம், கிருஷ்ணாம்பேட்டை மயானத்தை அடைந்தது. அங்கு இறுதிச் சடங்குகள் நடைபெற்றன. சிதைக்கு வாசனின் ஒரே மகன் பாலசுப்பிரமணியன் தீ மூட்டினார்.

**சினிமா காட்சிகள் ரத்து**

வாசன் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் விதத்தில் சென்னை நகரில் எல்லா சினிமா கொட்டகைகளிலும் காட்சிகள் ரத்து செய்யப்பட்டன.

தமிழ் நாடு காங்கிரஸ் கட்சி ஆபீசில், கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டன.

வாசன் மறைவுக்குப் பின் ஜெமினியின் நிர்வாகப் பொறுப்புக்களை அவர் மகன் பாலசுப்பிரமணியன் (பாலன்) கவனித்தார்.

பூதய்யன் மகன் அய்யூ என்ற கன்னடப்படம் சக்கை போடு போட்டது.

அந்தப் படத்தின் உரிமையை வாங்கி தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய மூன்று மொழிகளிலும் ஜெமினி தயாரித்தது.

தமிழ்ப்படத்தின் பெயர் எல்லோரும் நல்லவரே. இதில் முத்துராமன், ஜெயந்தி ஆகியோர் நடித்தனர்.

1957 இல் இப்படம் வெளியாகியது.

கன்னடத்தில் மாபெரும் வெற்றிபெற்ற படம், பிற மொழிகளில் தோல்வி அடைந்தது. காரணம், மண்வாசனையுள்ள கதை, பிற மொழியினரைக் கவரவில்லை.


நேருவுடன் எஸ்.எஸ்.வாசன்

**படத் தொழிலில் மாற்றங்கள்**

இந்த நேரத்தில் படத் தொழிலில் மாபெரும் மாற்றங்கள் ஏற்பட்டன.

ஸ்டூடியோக்களில் செட் போட்டுப் படம் எடுக்கும் முறை முடிவுற்றது. பட அதிபர்கள், கறுப்பு- வெள்ளைப்படங்களுக்குப் பதிலாக கலர்ப்படங்களைத் தயாரிக்க ஆரம்பித்த காரணத்தால் கோபிசெட்டிப்பாளையம், பொள்ளாச்சி, கன்னியாகுமரி என்று வெளியூர்களுக்குச் சென்று வெளிப்புறங்களில் படப்பிடிப்பை நடத்தினார்கள்.

ஸ்டூடியோக்களுக்கு வேலை இல்லை. ஸ்டூடியோவை நடத்திக்கொண்டு மாதம் ஊழியர்களுக்கு சம்பளம் கொடுப்பது யானையைக் கட்டித் தீனி போடுவதுபோல ஆயிற்று. சென்னையில் உள்ள ஸ்டூடியோக்கள் ஒவ்வொன்றாக மூடப்பட்டு அடுக்கு மாடி குடியிருப்புகளாகவும் கல்யாண மண்டபங்களாகவும் கிடங்குகளாகவும் மாறின.

ஜெமினி ஸ்டூடியோவும் மூடப்படடது. அங்கு பார்சன் காம்ப்ளக்ஸ் என்ற பெயரில் பல மாடி கட்டடங்கள் எழுந்தன. அவற்றில் வர்த்தக நிறுவனங்கள், அலுவலகங்கள், வீடுகள் இடம்பெற்றன.

வாசன் மகன் பாலசுப்பிரமணியன், படத் தொழிலை நிறுத்திவிட்டு ஆனந்த விகரனில் முழு கவனம் செலுத்தலானார்.

ஸ்டூடியோவை மூடியது பற்றி அவர் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருப்பதாவது:-

**கடல் நீச்சல்**

சினிமா உலகத்தில் கொடி நாட்ட வேண்டும் என்று திட்டமிட்டு லட்சியக் கனவுகளோடு அணு அணுவாக உழைத்து, ஆத்மார்த்தமாக அதிலே பாடுபட்டவர் அவர் (வாசன்).

(தொடரும்)



# 2009ல் நடந்தது என்ன? தலைவர் பிரபாகரன் எங்கே?

## விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் பேட்டி

16 பக்கத் தொடர்ச்சி....

....காலச்சூழல் காரணமாகக் கருணாவின் பிடியில் சிக்கிய அவர்கள் நமது உடன் பிறப்புகள். எனவே அவர்களை மாவீரர்கள் பட்டியலில் சேருங்கள் என்று சொல்லி அவர்களைச் சேர்த்தார் தலைவர். கருணா பிரிவதாக அறிவித்த காலத்திற்கு ஓர் ஆண்டுக்கும் முன்னரே கருணா இலங்கை இராணுவத்தின் ஆளாக ஆகியிருந்திருக்கிறார்.

இதுபற்றி என்னைப் போலவே நன்கு அறிந்த கருணாவுக்கு அடுத்த பொறுப்பில் இருந்த இன்னொரு தளபதியும் உயிரோடு இருக்கிறார். வேறு ஒரு நாட்டில் அவர் தற்போது இருக்கிறார். பாதுகாப்புக் காரணங்களுக்காக அவர் பெயரை நான் இப்போது குறிப்பிடவில்லை. அவரும் பாதுகாப்பாக அமர்ந்தபின் நாங்கள் இருவரும் கூட்டாகப் பேட்டி அளிப்போம்.

**பிரபாகரனுக்கு அடுத்த கட்ட இடத்தில் இருந்த கருணா பிரபாகரனுக்கு எதிராகவே திரும்புவதற்கு என்ன காரணம்?**

பல காரணங்கள் இருக்கின்றன. குறிப்பாக எங்களுடைய அமைப்பு ஒழுக்கம், கட்டுப்பாடு, நேர்மை கொண்டது. இந்த மூன்றும் இருப்பவர்கள்தான் போராளிகளாகவும், தளபதிகளாகவும் இருந்தார்கள்.

இதில் குறிப்பிட்ட காலத்திற்குள் கருணாவின் சில பிரச்சினைகள், போராளி, தளபதி என்பதையும் தாண்டி ஒரு தனிமனிதனுக்கு ஏற்படுகின்ற பிரச்சினை. இந்தப் பிரச்சினை தலைவருக்கு தெரியவந்தது.

ஒழுக்கத்தை மீறுபவர்களுக்கு ஆரம்பத்தில் பெரிய தண்டனை கொடுக்கப்பட்டது. அப்போது வளர்ச்சி பெற்ற இராணுவ காலம் என்பதால் சிறு சிறு தண்டனைகள் கொடுக்கப்பட்டன. இதுமாதிரியான ஒழுக்க மீறல்களுக்கு மிகப்பெரிய தண்டனை கொடுத்து வந்தவர்தான் கருணா.

ஆகவே, தான் செய்த செயல்களுக்கு தனக்கு அப்படி ஒரு தண்டனை வழங்கப்பட்டு விடுமோ என்கிற அச்சம் அவருக்கு இருந்தது. அதன் வெளிப்பாடுதான் ஏற்பட்ட முரண்பாடு. ஆனால், கருணாவுக்கு எந்த தண்டனையையும் வழங்கும் எண்ணம் தலைவர் பிரபாகரனுக்கு இல்லை. ஆனால், இது கருணாவுக்கு புரியவில்லை.

**சமாதானத்திற்கு உடன்பட்டேன், பிரபாகரன் அதற்கு உடன்படவில்லை. அதனால் வெளியேறினேன். வெளியேறினாலும் யாரையும் காட்டிக்கொடுக்கவில்லை என்று கருணா கூறியுள்ளாரே?**

தன்னுடைய அரசியல் நலனுக்காக இப்படி உண்மைக்கு புறம்பாக சொல்லி வருகிறார் கருணா. காட்டிக் கொடுக்கவில்லை என்பது உண்மையல்ல. கருண்ா இலங்கை அரசாங்கத்திடம் எங்களது இராணுவ இரகசியங்களை சொல்லிய பின்னரும் கருணாவை துரோகி என்று தலைவர் ஒருபோதும் எங்கேயும் சொன்னதில்லை.

**போர் யுக்தியில் ஏற்பட்ட குளறுபடிதான் விடுதலைப் புலிகளின் தோல்விக்கு காரணம். காட்டுப் பகுதிக்குள் வந்து போரிட்டிருந்தால் வெற்றி பெற்றிருக்கலாம், கடலை நோக்கிச் சென்றதால் தோல்வி பெற்றார் பிரபாகரன். கொரில்லா போர் முறையை கையாண்டிருந்தால் வெற்றி பெற்றிருப்பார் என்று கருணா சொல்லியிருக்கிறாரே?**

புலிகள் இயக்கம் பல பெரிய சமர்களை வென்ற இயக்கம். ஒட்டு மொத்த உலக நாடுகளும் பொறாமைப்பட்டது. புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவரை அதன் போர் முறை என்பது மிகவும் நுட்பமானது. ஆட்கள் குறைவு ஆனால் செயற்படும் வேகமும், முறையும் பெருத்த சேதங்களை ஏற்படுத்தக் கூடியது. எமது தலைவரின் உக்திகளும் போர்த் தந்திர முறைகளும் எவராலும் கணிக்கப்பட முடியாதது.

தமிழர்கள் உதவியால் முப்படைகளையும் கொண்ட ஒரு இராணுவத்தை அமைத்து, தமிழீழத்திற்கான மிகப்பெரும் சமர்களைச் செய்த ஒரு தலைவர், மீண்டும் ஒரு கொரில்லா போருக்குள் செல்வது என்பது அந்தச் சூழலில் சாத்தியமா என்பது இராணுவ ரீதியாக ஆராய்ந்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

எங்களின் மறைவிடங்கள் எல்லாம் காட்டிக் கொடுப்பவர்களால் காட்டிக் கொடுக்கப்பட்டன. குறிப்பாக கருணாவின் காட்டிக் கொடுப்புகள்தான் இந்த போராட்டத்திற்கு மிகப் பெரிய காட்டிக் கொடுப்பாக இருந்துவிட்டது.

இராணுவத்திற்கு எந்தெந்த வழியில் எல்லாம் பொருட்கள் வருகிறதோ அதையெல்லாம் கருணா காட்டிக் கொடுத்துவிட்டார். வெடிமருந்து இல்லாமல் போய்விட்டதால் அவர்கள் இந்த போரில் வென்றார்கள். மேலும், சிறு படைகளை வைத்துக் கொண்டு எப்படி பெரு சமர்களை வெல்வது என்கிற விடுதலைப் புலிகளின் யுக்திகளை சொல்லிக் கொடுத்துவிட்டார் கருணா. (தொடரும்)

# ஜனாதிபதியின் ஜாதகத்தை சோதிடரிடம் காட்டிய மகிந்த



மகிந்த ராஜபக்ஷ அண்மையில் அபயராமய விகாரைக்கு சோதிடர் ஒருவரை அழைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் எதிர்காலம் எவ்வாறு அமையவுள்ளது என்பது தொடர்பான அவரது ஜாதக நிலைமையைக் கேட்டறிந்துள்ளார் என தெரியவந்துள்ளது.

இதன்பிரகாரம் 2016 ஏப்ரல் மாதம் அளவில் புதிய அரசாங்கம் ஒன்றை நிறுவுவதற்கான பிரகாசமான எதிரகாலம் ஒன்று தனக்கு உள்ளதாக மகிந்த ராஜபக்ஷ கருதுகிறார்.

இவர் தனது எதிர்காலக் கனவு தொடர்பாக தனது நண்பர்களிடமும் கூட்டு எதிர்க் கட்சியில் அங்கம் வகித்துள்ள உறுப்பினர்களிடமும் தெரிவித்துள்ளார்.

இவர்கள் அனைவரும் மகிந்த ராஜபக்ஷ வரும் ஏப்ரலில் அரசாங்கம் ஒன்றை அமைக்கும் வரை ஆவலுடன காத்திருக்கின்றனர். மகிந்தவின் இந்தக் கனவு தொடர்பான செய்தி மைத்திரியின் காதையும் எட்டியது. இதுதொடரபாக மைத்திரி பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போது தெரிவித்திருந்தார்.

1994 இல்தோற்கடிக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி, மீண்டும் அரசாங்கத்தை அமைப்பதற்காக பத்து ஆண்டுகள் வரை சந்திரிகா குமாரதுங்கவின் இறப்புத் தொடர்பாக கனவு கண்டுஇதே போன்று மகிந்தவின் இறப்பிற்காக மேலும் பத்து ஆண்டுகள் வரை, ஐ.தே.க காத்திருந்தது.

1994 இல் ஆட்சியிலிருந்து தோற்கடிக்கப்பட்டு எதிர்க்கட்சியாகச் செயற்பட்ட ஐ.தே.க மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான எந்தவொரு திட்டமிடப்பட்ட மூலோபாயங்களையும் கொண்டிருக்கவில்லை.

பல தேர்தல்களில் தோற்கடிக்கப்பட்ட பின்னர் இக்கட்சியானது தனது தோல்வியால் துவண்ட போதிலும் எவ்வித காத்திரமான திட்டங்களையும் தீட்டவில்லை. மாறாக சந்திரிகாவின் ஆரூடத்தை அலசி ஆராய்ந்தது.

சந்திரிகா விரைவில் கெட்ட காலத்திற்கு முகங்கொடுக்கப் போகிறார். ஆனால் இவரது ஆரூடத்தின் பிரகாரம் இது தொடர்பான காலப்பகுதி சுட்டிக்காட்டப்படவில்லை என ஐ.தே.கவிடம் சோதிடர்களால் எதிர்வுகூறப்பட்டது.

சோதிடர்களால் எதிர்வு கூறப்பட்ட சந்திரிகாவின் ஆரூடம் மீது மட்டுமே ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்தும் நம்பிக்கை கொண்டிருந்தது. எனினும், சந்திரிகா இந்த நாட்டை 11 ஆண்டுகள் வரை ஆட்சி செய்தார்.

சந்திரிகா தனது ஆட்சிக் காலத்தை நிறைவுக்குக் கொண்டுவந்த போதிலும், ஆரூடம் மீது நம்பிக்கை கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சியால் இலங்கையின் ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்ற முடியவில்லை.

ஐ.தே.க. தனக்கு ஆதரவான மக்கள் கூட்டத்தைப் பெருக்கிக் கொள்வதற்கான எவ்வித திட்டமிட்ட நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.

அரச சார்பற்ற நிறுவனத்தில் பணியாற்றிய பொறுப்புடைய அதிகாரி ஒருவர் ஒரு தடவை ஐ.தே.கவின் பொறுப்பு வாய்ந்த முக்கிய அரசியல் தலைவரான காமினி அத்துக்கோரளவிடம் ஒரு விடயத்தைத் தெரிவித்திருந்தார்.

நான் ஒருநாள் விஜய குமாரதுங்கவுடன் சந்திரிகா குமாரதுங்கவின் ஆரூடத்தைப் பார்ப்பதற்காகச் சென்றிருந்தேன். நாங்கள் பிரபலமான ஒரு புத்த பிக்குவிடமே சோதிடம் பார்ப்பதற்காகச் சென்றிருந்தோம்.

குறித்த ஆரூடம் சந்திரிகாவினுடையது தான் என்பது பிக்குவிற்குத் தெரியாது. இந்தச் சாதகத்திற்குச் சொந்தமான பெண்மணி சோடாப் போத்தல் போன்ற குணவியல்பைக் கொண்டுள்ளார் என பிக்கு தெரிவித்திருந்தார்.

அதாவது வாயுவுடன் அடைக்கப்படும் சோடாப் போத்தலானது திறந்தவுடன் ஆவியாகிவிடும் அதேபோன்றே சந்திரிக்காவின் குணவியல்பும் என பிக்கு குறிப்பிட்டார்.

அத்துடன் குறித்த காலப் பகுதிக்குப் பிறகு இந்த சாதகம் தொடர்பில் எதனையும் எதிர்வுகூற முடியாதுள்ளதாகவும் பிக்கு சுட்டிக்காட்டியிருந்தார் என்பதே காமினி அத்துக்கோரளவிடம் கூறப்பட்ட சம்பவமாகும்.

குறித்த அரச சார்பற்ற நிறுவனத்தைச் சேர்ந்த பிரமுகர் சந்திரிகாவின் ஆரூடம் தொடர்பில் பிக்குவால் கூறப்பட்ட விடயத்தை மேலும் பல ஐ.தே.க. உறுப்பினர்களிடமும் தெரிவித்திருந்தார்.

ஐ.தே.க. தேர்தலில் வெற்றி பெறுவது தொடர்பில் சந்திரிகாவின் சாதக பலன்கள் மேலும் உயிரூட்டுவதாக இந்த உறுப்பினர்கள் நம்பிக்கை கொண்டனர்.

1999 இல் இடம்பெற்ற குண்டு வெடிப்பொன்றில் சந்திரிகா மயிரிழையில் உயிர் தப்பினார். இவர் இலங்கையை 11 ஆண்டுகள் ஆட்சி செய்திருந்தார். இதன் பின்னரே ஐ.தே.க விழித்துக் கொண்டது. சந்திரிகாவைத் தொடர்ந்து மகிந்த ஆட்சிக்கு வந்தார். இதன் பின்னர் மகிந்தவின் ஜாதக பலன்களைப் பார்ப்பதில் ஐ.தே.க. நேரத்தைச் செலவழித்தது.

மகிந்தவிற்கு கெட்ட காலம் இடம்பெறுவதாலேயே இதற்குப் பரிகாரமாக அவர் திருப்பதி கோயிலுக்கு பூசை செய்வதற்காகச் செல்கிறார் என்கின்ற கதையையும் ஐ.தே.க. உறுப்பினர்கள் புனைந்தனர.

2009 இல் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்களால் ஒழுங்குபடுத்தப்பட்ட கருத்தரங்கு ஒன்றிற்கு பிரபல சோதிடர் சந்திரசிறி பண்டார அழைக்கப்பட்டிருந்தார். இவர் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் பிரபலமானவர் ஆவார். மகிந்த மிகப் பாரிய ஆபத்தைச் சந்திக்கவுள்ளார் என பண்டார கருத்தரங்கில் தெரிவித்திருந்தார்.

ஐ.தே.கவில் செயற்பட்டுக் கொண்டிருந்த மகிந்தவின் உளவாளி ஒருவர் இதனை மகிந்தவிடம் தெரிவித்தார். இதனை அறிந்து கோபங் கொண்ட மகிந்த சந்திரசிறி பண்டாரவைக் கைதுசெய்தார். 2009 இல் மகிந்த போரை வெற்றி கொண்ட பின்னரேயே பண்டார மகிந்தவின் எதிர்கால ஆரூடத்தை எதிர்வு கூறியிருந்தார்.

மகிந்த போரை வென்றெடுத்த பின்னர் ஐ.தே.க. பெரும் நெருக்கடியைச் சந்தித்திருந்தது. தாங்கள் இனி ஒருபோதும் ஆட்சியைக் கைப்பற்ற முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள் கருதினர்.

இந்நிலையில் மகிந்த ஆபத்தைச் சந்திக்கப் போகிறார் என்கின்ற பண்டாரவின் செய்தி ஐ.தே.க. உறுப்பினர்களுக்கு மனஆறுதலை அளித்தது. எனினும் மகிந்த தொடர்பாக பண்டார எதிர்வு கூறியதால் இவர் மிகப் பெரிய ஆபத்தில் சிக்கிக்கொண்டார்.

ஆட்சியாளருக்கு சாதகமற்ற சோதிட பலனைக் கணித்ததன் காரணமாக சோதிடர் ஒருவர் கைதுசெய்யப்பட்டமை இலங்கை அரசியல் வரலாற்றில் முதற் தடவையாக காணப்பட்டது.

இதற்கு முன்னர் 1982 இல் நக்சலைட் என முத்திரை குத்தப்பட்டு விஜய கைது செய்யப்பட்டார். அத்துடன் இலங்கை அரசாங்கங்களுக்கு எதிராக கடந்த காலங்களில் சதித்திட்டத்தில் ஈடுபட்டவர்கள் எனக் குற்றம் சுமத்தப்பட்டு பலர் கைது செய்யப்பட்டனர்.

ஆனால் மகிந்தவின் காலத்திலேயே சோதிடர் ஒருவர் தனக்குச் சார்பற்ற வகையில் ஜாதக பலனைக் கூறியதற்காகக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அரசியல் சதியை அடிப்படையாக வைத்தே இவ்வாறு மகிந்தவுக்கு எதிராக சோதிடம் கூறியதாக சந்திரசிறி பண்டாரவிடம் பொலிஸார் விசாரித்தனர். ஆனால் இதனை பண்டார மறுத்ததுடன், சோதிட பலனை அடிப்படையாகக் கொண்டு மட்டுமே தான் இதனைக் கணித்ததாகத் தெரிவித்தார்.

மகிந்தவின் நம்பிக்கைக்குப் பாத்திரமான மேர்வின் சில்வா, பண்டாரவை மகிந்தவிடம் அழைத்துச் சென்று மகிந்தவுக்குச் சாதகமாக சோதிடம் கூறுமாறு வலியுறுத்தினார்.

இதன் பின்னரே பண்டார விடுவிக்கப்பட்டார். ஆனாலும் ஐ.தே.கவிடம் பண்டார தெரிவித்தது போன்று மகிந்த எந்தவொரு ஆபத்தையோ அல்லது துன்பியல் சம்பவத்தையோ தனது ஆட்சிக்காலத்தில் சந்திக்கவில்லை.

ஜனாதிபதி தேர்தலை மகிந்த முன்கூட்டியே நடத்தியிராவிடடால், இவர் இன்றும் இலங்கையின் ஜனாதிபதியாக இருந்திருப்பார். எனினும் மகிந்த ஒரு பத்தாண்டு வரை இந்த நாடடை ஆட்சி செய்துள்ளார்.

அரசியல் அரங்கிலிருந்து சந்திரிகா வெளியேறுவதைப் பார்ப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சியானது 11 ஆண்டுகள் வரை காத்திருந்த போதிலும், இறுதியில் 2015இல் ஐ.தே.க. அரசாங்கம் அமைப்பதற்கு சந்திரிகாவே உதவியுள்ளார். (இ-7)

## செய்தித் துளிகள்

### இலவச சட்ட ஆலோசனை

சிவில் வழக்குகள், குற்றவியல் வழக்குகள்,தாபரிப்பு போன்ற விடயங்களில் இலவச சட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டதாக இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு வின் பொத்துவில் நிலைய பொறுப்பதிகாரியும் சட்ட உத்தியோகத்தருமான எம்.ஏ.கே.என்பஹிமா தெரிவித்தார்.

இந்த வருடத்தின் ஜனவரி மாதம் முதல் டிசெம்பர் மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் பொத்துவில் சட்ட உதவி நிலையத்தின் மூலம் 447பேர் இலவச சட்ட ஆலோசனைகளைப் பெற்றுள்ளனர்.15 ஆயிரம் ரூபாய்க்கு கீழ் மாதாந்த வருமானம் பெறும் 102 குடும்பங்களுக்கு இலவச சட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டு இலவசமாக வழக்குகளும் பதிவு செய்யப்பட்டன.432 பேருக்கு இலவச ஆவணங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.மேலும் 41 சட்ட விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டன எனவும் தெரிவித்தார்.(இ

### கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நாளை

(யாழ்ப்பாணம்)

London Metro Politan College நிறுவன அனுசரணையுடன் சாவகச்சேரி தச்சன்தோப்பு ஸ்ரீசரஸ்வதி சனசமூக நிலைய அங்கத்தவர்களுக்கான பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை சனசமூக நிலையத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் க.பிரதீஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் வடமாகாண அலுவலக சாவகச்சேரி சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஜெ.செல்வராணி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி உப அலுவலக பொறுப்பதிகாரி நா.தங்கவேல் London Metro Politan College பணிப்பாளர் எஸ். சிறிநிமால் மற்றும் முகாமையாளர் செ.செந்தூரன், விரிவுரையாளர் திருமதி ராஜ்குமார் அனுசாந்தி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக கந்தையா கனகம்மா, நிதியக் காப்பாளர் க.மயில்வாகனம், ஜே/296 கிராம சேவையாளர் ச.ரமேஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

### உலர் உணவு வழங்கல்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி பிரதேசத்தில் இயங்கி வருகின்ற கந்தையா கனகம்மா நிதியத்தினர் இவ்வருடமும் அப்பிரதேசத்தில் வாழ்கின்ற மந்த போசாக்குள்ள சிறுவர்களையும் பொருளாதார வளங்கள் குறைந்த குடும்பங்களில் உள்ள 120 பயனாளிகளைத் தேர்ந்தெடுத்து ஊட்டச்சத்துமிகு உலர் உணவுப் பொருட்களை வழங்கவுள்ளது.

இந்நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு கந்தையா கனகம்மா நினைவாலயத்தின் காப்பாளர் க.மயில்வாகனம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ் வில் இலங்கைக் கம்பன் கழகம் அ.வாசுதேவா பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

### இலங்கைப் பெண்ணுக்கு எத்தனை வருடம் சிறை?

(கொழும்பு)

முறை தவறிய உறவு என்ற குற்றச்சாட்டின் பேரில் முன்னதாக கல்லால் எறிந்து மரண தண்டனை தீர்ப்பளிக் கப்பட்டு பின்னர் சிறைத்தண்டனையை பெற்ற இலங்கைப்பெண்ணுக்கு எத்தனை வருட சிறைத் தண்டனை என்ற விடயம் இந்த வாரத்தில் தெரிய வரும்.

இலங்கையின் பிரதி வெளியுறவு அமைச்சர் ஹர்ஷ டி சில்வா இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தை பொறுத்தவரை குறித்த பெண்ணை மரண தண்டனையில் இருந்து முதலில் காப்பாற்ற வேண்டும் என்ற குறிக்கோளே இருந்தது.

இதன்படி அவர் மரணதண்டனையில் இருந்து காப்பாற்றப்பட்டார். இந்தநிலையில் இந்த வாரம் அவருக்கு எத்தனை வருட சிறைத்தண்டனை வழங்கப்படும் என்ற தீர்ப்பு வெளியாகும் என்று ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார். (இ-7)

# எம்.பிக்களின் சம்பளம் இலங்கையில் குறைவு

அண்டை நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில்தான் பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளம் குறைவு என சபை முதல்வர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இலங்கையில் பாராளுமன்ற உறுப்பினருக்கு சம்பளம் 54 ஆயிரம் ரூபாவும் பிரதி அமைச்சருக்கு 60 ஆயிரம் ரூபாவும் அமைச்சரவை அந்தஸ்து உடைய அமைச்சருக்கு 65 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படுகிறது. பாராளுமன்றத்திற்கு செல்வோருக்கு நாளொன்றுக்கு ஐந்நூறு ரூபா வழங்குவதாக தெரிவித்துள்ளனர். சம்பள அதிகரிப்பிற்கான பிரேரணைகள் உள்ளதெனவும் சம்பளத்தை உயர்த்துவதற்கான தீர்மானம் எடுக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# குடிசை சேதம்



வடமராட்சிப் பகுதியில் நேற்று அதிகாலை பெய்த காற்றுடன் கூடிய கன மழை யினால் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட குடிசையொன்று சேதமடைந்துள்ளது. ஜே/411 கிராம சேவையாளர் பிரவிற்குட்பட்ட சுப்பையா செல்வராசா என்பவரது குடிசையே இவ்வாறு சேதமடைந்துள்ளது. (இ-5-60)

# நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை- 28.12.2015

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 141.45 | 145.68 |
| பிரிட்டன் | பவுண்ட் | 210.22 | 218.02 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 154.18 | 160.60 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 142.38 | 148.55 |
| கனடா | டொலர் | 101.51 | 105.91 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 101.83 | 106.81 |
| சிங்கப்பூர் | டொலர் | 100.10 | 104.14 |
| இந்தியா | ரூபா | 2.1731 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 380.5739 |
| குவைத் | டினார் | 473.5373 |
| ஓமான் | ரியால் | 373.0613 |
| கட்டார் | ரியால் | 39.4335 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.2953 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1028 |

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 200 | 200 | 240 | 250 |
| உருளைக்கிழங்கு | 100 | 60 | 60 | 80 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 900 | 800 | 700 | 800 | 800 | 1000 |
| தக்காளி | 200 | 100 | 120 | 160 | 140 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 30 | 50 | 40 | 40 |
| கோவா | 180 | 200 | 150 | 160-200 | 200 | 120 |
| கரட் | 250 | 250 | 200 | 200-400 | 320 | 200 |
| பூசணி | 70 | 60 | 40 | 60 | 80 | 50 |
| புடோல் | 140 | 150 | 100 | 120 | 140 | 140 |
| வாழைக்காய் | 80 | 60 | 50 | 50 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 160 | 160 | 140 | 120 | 160 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 75 | 90 | 100 | 80 |
| பாகற்காய் | 300 | 400 | 250 | 300-400 | 400 | 400 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 90 | 150-200 | 160 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 80 | 80 | 120 | 80 |
| பயற்றங்காய் | 200 | 250 | 180 | 240 | 250 | 250 |
| லீக்ஸ் | 180 | 180 | 150 | 160-200 | 200 | 180 |
| பீற்றூட் | 200 | — | — | — | 200 | — |
| கறிமிளகாய் | 350 | — | — | 300-500 | 600 | 400 |
| முருங்கைக்காய் | 400 | — | — | — | — | — |
| போஞ்சி | 300 | — | — | 300 | 280 | 300 |
| கத்தரிதம்புள்ள | 200 | 100 | 150 | — | 160 | — |
| கீரை - 1 பிடி | 30 | 50 | 50 | 40 | 60 | 20 |
| தேசிக்காய் | 150 | 120 | 80 | 100 | 120 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 25-45 | 50 | 30-45 | 50 |
| இராசவள்ளி | 180 | 200 | 100 | 150 | 150 | 240 |
| வெங்காயப்பூ | 350 | 250 | — | 200 | — | 300 |
| முள்ளங்கி | 120 | 150 | 120 | 100 | 120 | 140 |
| பொன்னாங்காணி | 30 | 60 | 20 | 30 | 30 | 40 |
| வல்லாரை | 10 | 30 | 10 | 10 | 20 | 35 |
| ஈரப்பலா | 40 | 60 | — | 50 | 80 | 50 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## இலங்கையில் புதிய சட்டம்: பிரிவினை கேட்டால் மரண தண்டனை 65

**பிரேமதாசா பேச்சு**

சட்டத்தைத் தாக்கல் செய்து இலங்கைப் பிரதமர் பிரேமதாசா பேசினார். அவர் கூறியதாவது:-

புதிய சட்டத்தின்படி, பிரிவினை கேட்பது தடை செய்யப்படுகிறது. இப்போதுள்ள சட்டப்படி கூட யாரும் பிரிவினை கேட்க முடியாது. இருந்த போதிலும் பிரிவினை பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக இந்தப் புதிய சட்டம் கொண்டுவரப்படுகிறது.

பிரிவினையை ஆதரிப்பவர்களும் அவர்களுக்கு நிதி உதவி அளிப்பவர்களும் தண்டிக்கப்படுவார்கள். தொடர்ந்து தனநாடு கேட்டுப் போராடப் போகிறார்களா? அல்லது நாட்டு முன்னேற்றத்திற்காகப் பாடுபடப்போகிறார்களா? என்பதைத் தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணி (தமிழர் கட்சி) முடிவு செய்துகொள்ள வேண்டும்.

எந்த அயல்நாட்டு சக்தியும் இலங்கையின் உள்விவகாரத்தில் தலையிட அனுமதிக்க மாட்டோம்.

இவ்வாறு பிரேமதாச பேசினார்.

**புறக்கணிப்பு**

168 உறுப்பினர்களைக் கொண்ட இலங்கை பாராளுமன்றத்தில் அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணிக்கு 16 உறுப்பினர்கள் இருந்தனர். இவர்கள் இந்தப் பாராளுமன்றக் கூட்டத்தைப் புறக்கணித்தனர்.

இலங்கை மந்திரி சபையில் இடம்பெற்று இருந்த தமிழர்களான எஸ்.தொண்டமான், கே.டபிள்யூ.தேவநாயகம், ராஜதுரை ஆகியோர் பிரிவினை தடைச்சட்டத்தை ஆதரித்துப் பேசினார்கள். மொத்தம் உள்ள 168 உறுப்பினர்களில் 150 பேர் கூட்டத்தில் பங்கேற்றனர்.

ஜெய வர்த்தனா கட்சிக்குப் பாராளு மன்றத்தில் 5 இல் 4 பங்கு மெஜாரிட்டி பலம் இருந்தது.

இதனால் பிரிவினைத் தடைச் சட்டம் ஒருமனதாக நிறைவேறியது.

கலவரத்திற்குப் பிறகு நடைபெறும் முதல் கூட்டம் என்பதால் பாராளுமன்றத்தில்



பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பார்வையாளர்கள் யாரும் அனுமதிக்கப்படவில்லை. சில வெளிநாட்டு நிருபர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர்.

**யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம்**



பிரிவினைத் தடைச்சட்டத்திற்கு இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் கடும் எதிர்ப்பு எதிரொலித்தது. யாழ்ப்பாணத்தில் இந்தச் சட்டத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கொந்தளிப்பான நிலைமை நிலவியது. கண்டன ஊர்வலங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடந்தன.

**கண்டனக் கூட்டம்**

இலங்கை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரவினைத் தடைச்சட்டத்திற்கு தமிழ்நாட்டிலும் கடும் எதிர்ப்பு காணப்பட்டது. முதலமைச்சர் எம.ஜி.ஆர், இதுகுறித்து விவாதிக்க மீண்டும் அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டினார்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தில் இலங்கைத் தமிழர்கள் இதுகாறும் கொண்டிருந்த அடிப்படை குடியுரிமையையும் வாக்குரிமையையும் பறிக்கும் விதத்தில் மரண தண்டனை விதிப்பதன் மூலம் வாழ்வுரிமையைப் பறிக்கும் வகையிலும் இலங்கை அரசு அநாகரிகச் சட்டத்தை இயற்றியுள்ளது.


தமிழர்களைப் பழிவாங்கி அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் இலங்கை அரசுக்கு இந்தக் கூட்டம் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் கண்டனக் கூட்டங்களை நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

இதன்படி ஓகஸ்ட் 10 ஆத் திகதி சென்னையிலும் மாவட்டத் தலைநகரங்களிலும் கூட்டங்கள் நடந்தன.

இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற மத்திய அரசு தவறிவிட்டது என்று கண்டனம் தெரிவித்து, தி.மு.க தலைவர் கருணாநிதி, பொதுச் செயலாளர் அன்பழகன் ஆகியோர் எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்தனர்.

1980 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் சென்னை அண்ணா நகர் தொகுதியில் இருந்து கருணாநிதியும் புரவை வாக்கம் தொகுதியில் இருந்து அன்பழகனும் சட்ட சபைக்குத் தேர்ந்து எடுக்கப்பட்டனர்.



(தொடரும்)

ஆழ்ந்த கருத்தற்ற பேச்சாளர்கள் பேச்சை வளர்த்துக்கொண்டே போவார்.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தீர்வுத்திட்டத்தை தயாரித்திருந்தால் அதை வெளிப்படுத்துவதே நல்லது

இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்ட வரைபை தயாரிப்பதற்காக தமிழ் மக்கள் பேரவை நிபுணர்கள் அடங்கிய குழு ஒன்றை நியமித்துள்ளது.

பேரவையால் நியமிக்கப்பட்ட குழுவானது இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்ட வரைபு ஒன்றைத் தயாரித்து அதை தமிழ் மக்களுக்குத் தெரியப்படுத்தி அதில் திருத்தங்கள் மாற்றங்கள் இருப்பின் அவற்றை செய்து தீர்வுத்திட்டத்தின் இறுதி வரைபை தயாரிக்கும் என்பது பேரவையின் அறிவிப்பு.

இங்குதான் ஒரு விடயம் கவனிக்கப்பட வேண்டும். அதாவது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமையும் ஒரு தீர்வுத்திட்டத்தை தயாரித்து வைத்துள்ளதாகக் கூறியுள்ளது.

எனினும் அத்தீர்வுத்திட்டத்தில் உள்ளடங்கியுள்ள அம்சங்கள் எவை என்பது பற்றி எதுவும் தமிழ் மக்களுக்கோ, தமிழ் புத்திஜீவிகளுக்குகோ தெரியாது. தனித்து கூட்டமைப்பில் இருக்கக்கூடிய ஒரு சிலருக்குத் தெரிந்த விடயமாக மட்டுமே இருக்கும்.

அதே சமயம் தீர்வுத்திட்டம் ஒன்றை 2016இல் கொண்டு வருவதாக இருந்தால், தீர்வுத்திட்டம் தொடர்பில் அரச தரப்பும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பேச்சு வார்த்தைகளை நடத்தி இருக்க வேண்டும். ஆனால் அப்படியான பேச்சுவார்த்தைகள் எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை.

ஆக, தயாரிக்கப்பட்டுள்ள தீர்வுத்திட்டம் பற்றி தமிழ் மக்களுக்கு எதுவும் தெரியாது. தீர்வு தொடர்பில் பேச்சுவார்த்தையும் நடைபெறவில்லை எனில், 2016 இல் தீர்வு என்பது அரசாங்கம் கொடுப்பதை இருகரம் நீட்டி வாங்குவது என்றால் மட்டுமே அது சாத்தியமாக முடியும்.

எதுவாயினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்வுத்திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளது எனின் அதனைத் தமிழ் மக்களுக்கு தெரியப்படுத்துவதன் பொருட்டு பேரவையின் நிபுணர் குழுவின் பார்வைக்கு வழங்குவது பொருத்தமானதாக இருக்கும்.

தமிழ்த் தரப்பில் யார் தீர்வுத்திட்டத்தை தயாரித்தாலும் அது தமிழ் மக்களுக்கானது என்ற அடிப்படையில், தயாரிக்கப்பட்ட தீர்வுத்திட்டத்தை தமிழ் மக்களுக்கு தெரியப்படுத்துவது கட்டாயமானதாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்வுத்திட்டம் ஒன்றினைத் தயாரித்திருக்குமாயின் மக்கள் அமைப்பு என்ற அடிப்படையில், பேரவையின் நிபுணர் குழு அத்தீர்வுத் திட்டத்தை பார்வையிடுவதற்கான ஏற்பாடுகள் செய் யப்பட்டால் அதை பேரவையின் நிபுணர் குழு ஆராய் வது நல்லது.

இதை விடுத்து இன்னமும் ஒரு தீர்வுத்திட்டம் முழுமையாக இல்லை என்றொரு நிலைமை இருந்தால், தீர்வுத்திட்டத்தைத் தயாரிக்கும் நிபுணர் குழுவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தனது பரிந்துரைகளை முன்வைப்பது சிறப்பாகும்.

ஏனெனில் தயாரிக்கப்படுகின்ற தீர்வுத்திட்டமானது தமிழ் மக்களுக்கானது. இத்தீர்வுத்திட்டத்தை தமிழ்த் தரப்புகள் ஏற்றுக் கொள்வதுடன் இதுவே எங்களுக்கான தீர்வு என்பதை சர்வதேசத்தின் மத்தியிலும் வலி யுறுத்தவேண்டும்.

ஆகையால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு 2016இல் எய்தப்படும் என நம்புகின்ற தீர்வு ஒன்றை வைத்திருக்குமாயின் அதனை தமிழ் மக்கள் பேரவையால் நியமிக்கப்பட்ட அரசியல் தீர்வுக்கான நிபுணர் குழுவின் பார்வைக்கு வழங்குவது அல்லது தீர்வுத்திட்டம் இல்லை என்ற நிலையில் தீர்வுத்திட்டம் எப்படியாக அமைவது நல்லது என்ற ஆக்கபூர்வமான ஆலோசனைகளை நிபுணத்துவக் குழுவுக்கு வழங்குவதென்பது; தீர்வு என்ற விடயத்தில் தமிழ்த் தரப்புகள் உறுதியாக நிற்பதற்குப் பேருதவியாக அமையும்.

# எந்தவொரு மதக்கோட்பாடும் அடிமைப்படுத்தப்படக்கூடாது

## ஜனாதிபதி வலியுறுத்து

(கொழும்பு)

எந்தவொரு மதக்கோட்பாடும் மற்றுமொரு மதக் கோட்பாட்டினால் அடிமைப் படுத்தப்படக் கூடாதென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நீர்கொழும்பு 16வது பெனடிக் உயர்கல்வி நிலைய திறப்பு விழாவில் நேற்று முன்தினம் பிற்பகல் கலந்து கொண்ட போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவ்வாறு தெரி வித்தார்.

இத்தாலி ஆயர் சம்மேளனத்தின் உதவியின்கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள இவ் உயர்கல்வி நிலையத்தில் சாதாரண தரத்திலும் உயர் தரத்திலும் கல்விகற்ற மாணவர்களுக்கும் ஏற்கெனவே தொழில்புரியும் நபர்களுக்குமான ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம், வெளிநாட்டு மொழிக்கல்வியை வழங்குவதற்கான வசதிகள் காணப்படுகின்றன.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி, நாட்டின மதக்கோட்பாடுகளை பாதுகாப்பதற்கு புதிய அரசு கடமைப்பட்டுள்ளதெனத் தெரிவித்தார்.

வர்த்தக சமூகத்துடன் சீர்கெட்டுள்ள ஒட்டுமொத்த சமூகத்தை குணப்படுத்துவதற்கு மதக்கோட் பாடுகளைப் போன்றதோர் உயரிய கோட்பாடுகள் எதுவும் கிடையாதெனவும் ஜனாதிபதி இங்கு குறிப்பிட்டார்.

தனது அறிவு, ஞானம் மற்றும் அனுபவம் ஆகியவற்றை தனிப்பட்ட வாழ்விற்காகவும் ஒட்டுமொத்த மனித சமூகத்தின் நலனுக்காகவும் பயன்படுத்துதல் அனைவரினதும் பொறுப்பாகுமென ஜனாதிபதி தெரிவித்தார்.

நினைவுப்பேழையை திரைநீக்கம் செய்து 16வது பெனடிக் உயர்கல்வி நிலையத்தை திறந்து வைத்த ஜனாதிபதி அதனை மேற்பார்வை செய்தார்.

ஜனாதிபதியின் வருகையை நினைவு கூர்ந்து உயர் கல்வி நிலைய வளவில் வெண்சந்தன மரக்கன்றினை நடும் நிகழ்வும் இடம் பெற்றது. (இ-7)

## ஆன்மிக அருளுரை

யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்கிரத சைதன்யாவினால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நல்லூர் ஆலய மகேஸ்வரன் மணி மண்டபத்தில் நடத்தப்பட்டு வரும் ஆன்மிக அருளுரை இனிவரும் நாட்களில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 7.30 மணி வரை நடைபெறும். (இ-5)

## மும்மொழி அகராதி விரைவில்

சிங்களம்-தமிழ்-ஆங்கிலம் அடங்கிய மும்மொழி அகராதி 2016ஆம் ஆண்டில் வெளியிடப்படவுள்ளது.

இதில் சிங்களம் -தமிழ்- ஆங்கிலமொழி பெயர்ப்பு உள்ளடக்கப்பட்டுள்ளது. தேசிய நல்லிணக்கத்தின் ஒரு படியாக இது கருதப்படுகிறது.

தேசிய கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் பரிந்துரையின் கீழ் இவ் அகராதி வெளியிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## நிஸங்க சேனாதிபதிக்கு ஆணைக்குழு அழைப்பு

(கொழும்பு)

பாரிய நிதி மோசடிகள் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் எதிரில் முன்னிலையாகுமாறு அவன்கார்ட் நிறுவனத் தலைவர் நிஸங்க சேனாதபதிக்கு மீளவும் அழைப்பு விடுக்கப்படவுள்ளது.

ஆணைக்குழுவின் எதிரில் முன்னிலையாகுமாறு நிஸங்க சேனாதிபதிக்கு இதற்கு முன்னதாக நான்கு தடவைகள் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளன.

பல்வேறு காரணங்களைக் காட்டி நிஸங்க சேனாதிபதி இந்த நான்கு தடவைகளிலும் ஆணைக்குழுவின் எதிரில் முன்னிலையாகவில்லை.

ஐந்தாவது தடவையாக அழைப்பதற்கு ஆணைக்குழு தீர்மானித்துள்ள போதிலும், எப்போது என்ற திகதியை ஆணைக்குழு இன்னமும் நிர்ணயிக்கவில்லை.

பெரும்பாலும் இந்த வாரத்தில் நிஸங்க சேனாதிபதிக்கு அழைப்பு விடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ரக்னா லங்கா நிறுவனம் மற்றும் அவன்கார்ட் நிறுவனம் ஆகியனவற்றில் இடம் பெற்ற மோசடிகள் தொடர்பில் வாக்கு மூலமொன்றை பதிவு செய்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் விசாரணைகளை தொடர்ந்தும் புறக்கணித்தால் அடுத்த கட்ட சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து கவனம் செலுத்த நேரிடும் என ஆணைக் குழுவின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இறுதியாக அழைக்கப்பட்ட போது வெளிநாடு ஒன்றில் சிகிச்சை பெற்று வருவதாகவும், நாடு திரும்பியதும் ஆணைக்குழுவின் எதிரில் முன்னிலையாவதாகவும் நிசாங்க சேனாதிபதி சட்டத்தரணி ஊடாக தெரியப்படுத்தியுள்ளார். (இ-7)

## துவிச்சக்கரவண்டியை விட்டு மோட்டார் சைக்கிள் திருட்டு

(கரணவாய்)

வீட்டின் திறந்தவெளி விறாந்தையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கரவண்டி ஒன்றை திருடிச் சென்ற திருடர்கள் அந்தத் துவிச்சக்கர வண்டியை இன்னொரு வீட்டின் திறந்தவெளி விறாந்தையில் நிறுத்திவிட்டு அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றை திருடிச் சென்ற சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை வடமராட்சிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நெல்லியடி வதிரியில்உள்ள வீடு ஒன்றிலே துவிச்சக்கர வண்டி திருடப்பட்டு கரவெட்டி கிழக்கு கிழவித் தோட்டம் பகுதியில்உள்ள வீடுஒன்றில்மோட்டார் சைக்கிள் திருடப்பட்டது.

இத்திருட்டுச்சம்பவம் தொடர்பாக இரு வீட்டின் உரிமையாளர்களாலும் நெல்லியடி பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அரச உத்தியோகத்தர்களுக்காக மகிந்த ராஜபக்ஷவினால் வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிளே இவ்வாறு திருடப்பட்டுள்ளது.

இதேவேளைநேற்றுமாலை குறித்த மோட்டார் சைக்கிள் வல்லை வெளிப் பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது. (இ-5-60)

## நூல்கள் வெளியீடு இன்று

யாழ்.ஆயருடன் ஊடகவியலாளர் சந்திப்பும் ஊடகவியல் நூல்களின் வெளியீடும் இன்று செவ்வாய்க்கிழமை கத்தோலிக்க அச்சக பாதுகாவலர் மண்டபத்தில் பிற்பகல் 3 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறவுள்ளது.

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாரின் செய்தி நடத்துநர் பணியின் அடிப்படைகள் என்ற 11 ஆவது ஊடகவியல் நூலும் யாழ். ஆயருக்கு அர்ப்பணம் செய்யப்பட்ட நேரலை பத்திரிகையியல் ஓர் அறிமுகம் என்ற 12 ஆவது ஊடகவியல் நூலும் இதன் போது வெளியிடப்படவுள்ளது. (இ-5)

## புதையல் தோண்டியவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப் பகுதியில் கடந்த நவம்பர் மாதம் 20ஆம் திகதி அன்றுதங்கப்புதையல்தோண்டும் முயற்சியில் ஈடுபட்ட ஐவரையும் எதிர்வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற பதில் நீதிபதி திருமதி உருத்திரேஸ்வரன் ஜெயராணி நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றைய தினமே நீதிமன்ற விசாரணைக்கு மீண்டும் அழைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையிலே இச் சந்தேக நபர்களுக்கான விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5-60)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



நாம் நேர்மையாக இருப்போம். நம்மால் இலட்சியத்தைப் பின்பற்ற முடியவில்லையானால் பலவீனத்தை ஒப்புக் கொள்வோம். லட்சியத்தை இழிவுபடுத்த வேண்டாம். அதைக்கீழே இழுக்க வேண்டாம்.

நீங்கள் தலைகீழாக நிற்பதாலோ ஒற்றைக் காலில் நிற்பதாலோ அல்லது மூன்று தலைகளுடன் கூடிய ஐயாயிரம் தெய்வங்களை வழிபடுவதாலோ பரம்பொருளை அறியமுடியுமானால் அப்படியே செய்யுங்கள். உங்களால் முடிந்த எந்த வழியிலாவது அதைச் செய்யுங்கள். அதைப்பற்றி எதுவும் சொல்ல யாருக்கும் உரிமை இல்லை. உங்கள் வழி சிறந்ததாக உயர்ந்ததாக இருக்கலாம். ஆனால் மற்றொருவனுடைய வழி எவ்வளவோ கொடியதென்று நீங்கள் எண்ணினாலும் அது கெட்டதென்று சொல்ல உங்களுக்கு உரிமையில்லை என்று ஸ்ரீ கிருஷ்ணர் (கீதையில்) கூறு கிறார்.


என் மகனே, நான் கடவுளை நம்புகிறேன். மனிதனை நம்புகிறேன். துன்புறுபவர்களுக்கு உதவி செய்வதை நம்புகிறேன். பிறரைக் காப்பாற்றுவதற்காக நரகத்திற்குச் செல்வதும் நல்லதே என்பதை நம்புகிறேன்.

உங்கள் இயல்பிற்கு உண்மையாக இருப்பதுதான் உண்மையான மதம். உங்களிடம் நம்பிக்கை கொள்ளுங்கள். நீங்கள் இல்லாவிட்டால் கடவுள் எப்படி இருக்கமுடியும். அல்லது வேறு யார் தான் எப்படி இருக்கமுடியும். நீங்கள் எங்கிருந்தாலும் சரி எல்லையற்றதை உணர்வது மனம் தான்.

பழைய துணிகளைக் களைவதுபோல் இந்த எனது உடலைவிட்டு நான் வெளியேறலாம். ஆனாலும் என்பணி ஓயாது. தான் இறைவனுடன் ஒன்றுபட்டிருப்பதை உலகம் உணரும்வரை என் பணி தொடரும்.

குப்தில் அதிரடி

# இலங்கை அணியை வீழ்த்தி நியூசிலாந்து அபார வெற்றி



இலங்கை அணிக்கு எதிரான 2 ஆவது ஒருநாள் போட்டியில் நியூசிலாந்து அணி 10 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.

இலங்கை-நியூசிலாந்து அணிகள் மோதிய 2 ஆவது ஒருநாள் போட்டி கிறிஸ்ட்சர்ச்சில் நேற்று நடந்தது. நாணய சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. தொடக்க வீரர்களாக குணதிலகா, டில்ஷான் களமிறங்கினர். குணதிலகா 17 ஓட்டங்களிலும், டில்ஷான் 7 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். இதன் பின் வந்த வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இதனால் 27.4 ஓவர்களில் இலங்கை அணி 117 ஓட்டங்களுக்கு சுருண்டது. குலசேகரா அதிகபட்சமாக 17 ஓட்டங்கள் எடுத்தார். நியூசிலாந்து தரப்பில் பந்துவீச்சில் மிரட்டிய ஹென்றி 4 விக்கெட்டுகளையும், மெக்லன் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதன் பின்னர் 118 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என களமிறங்கிய நியூசிலாந்து அணிக்கு தொடக்க வீரர்களாக குப்தில், லாதம் களமிறங்கினர். குப்தில் அதிரடி ஆட்டத்தை தொடர்ந்தார். அவர் 30 பந்தில் 93 ஓட்டங்கள் (8 சிக்சர், 9 பவுண்டரி) எடுத்தார். லாதம் 17 ஓட்டங்கள் எடுத்தார். இதனால் நியூசிலாந்து அணி 8.2 ஓவர்களிலே 118 ஓட்டங்கள் எடுத்து 10 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. ஆட்ட நாயகனாக குப்தில் தெரிவு செய்யப்பட்டார். இதன் மூலம் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொட ரில் நியூசிலாந்து 2-0 என முன்னிலையில் உள்ளது. முதல்ஒருநாள போட்டியில் இலங்கை அணி 188 ஓட்டங்களில் சுருண்டது. தற்போதுமோசமாக 117 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டையும் இழந்துள்ளது.

ஏற்கனவே டெஸ்ட் தொடரை 2-0 என இழந்துள்ள நிலையில், ஒருநாள் தொடரிலும் இலங்கை மோசமாக விளையாடி வருகிறது. (க)





## ஊக்க மருந்து உட்கொண்டதாக யாசீர் ஷாவிற்கு ஐ.சி.சி. தடை

பாகிஸ்தான் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் யாசீர் ஷா ஊக்கமருந்தை எடுத்துக் கொணடதாக ஐ.சி.சி. அவருக்கு தடை விதித்துள்ளது.

யாசீர் ஷா, தற்போது நியூசிலாந்திற்கு எதிரான ஒருநாள் தொடரின் உத்தேச அணியில் இடம் பெற்றுள்ளார். கடந்த மாதம் 13 ஆம் திகதி அவருக்கு ஊக்கமருந்து சோதனை நடத்தப்பட்டது.


இதில் அவர் உட்கொண்ட பொருளில் ஐ.சி.சியால் தடை செய்யபபட்ட குளோர்டாலிடோன் என்ற பொருள் இருந்துள்ளது. இதனால் ஐ.சி.சி. அவருக்கு தடை விதித்து நடவடிக்கை எடுத்துள்ளது.

ஏற்கனவே குண்டு வெடிப்பு காரணமாக பாகிஸ்தானில் சென்று விளையாட அனைத்து நாடுகளும் மறுப்புத் தெரிவித்து வருகிறது.

இதனையடுத்து மேட்ச் பிக்சிங்கில ஈடுபட்டு மூன்று வீரர்கள் தண் டனை பெற்றனர். இந்தப் பிரச்சினை இப்போது தான் முடிவுக்கு வந்துள்ளது.

இந்த நிலையில் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் யாசீர் ஷாவுக்கு ஊக்கமருந்து எடுத்துக் கொண்டதாக தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன் இலங்கை அணியின் விக்கெட் கீப்பர் குஷால் பெரேரா ஊக்க மருந்து பிரச்சினையில் சிக்கி நியூசிலாந்தில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)



## கண்ணீர் விட்டு மன்னிப்பு கேட்ட முகமது அமீர்



பாகிஸ்தான் கிரிக்கெட் வேகப்பந்து வீரர் முகமது அமீர் ஸ்பாட் பிக்சிங் சூதாட்டத்தில் சிக்கி தடைக்கு உள்ளனார். தடை முடிந்து தற்போது முதல்தர போட்டிகளில் விளையாடி வருகிறார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பயிற்சி முகாமில் அவர் பங்கேற்க அனுமதிக்கப்பட்டுள்ளார். அவர் பங்கேற்க எதிர்ப்பு தெரிவித்த முகமது ஹபீஸ், அசார் அலி ஆகியோர் சமாதானத்திற்கு பின் முகாமில் பங்கேற்றனர். இந்த நிலையில் பயிற்சி முகாமில் சக வீரர்களிடம் முகமது அமீர் சூதாட்டத்தில் ஈடுபட்டதற்காக கண்ணீர் விட்டு மன்னிப்புக்கேட்டார்.

அவரை ஏனைய வீரர்கள் கட்டித்தழுவி ஆறுதல்படுத்தி அவரது மன்னிப்பை ஏற்றுக் கொணடனர். (க)

### பிக் பாஷ் இருபது –20 தொடர்

## மக்ஸ்வெல் அதிரடி ஆட்டத்தில் மெல்பேர்ன் ஸ்டார்ஸ் வெற்றி

அவுஸ்திரேலியாவில் பிக் பாஷ் இருபது -20 லீக் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் நடை பெற்ற லீக் போட்டியில் சிட்னி சிக்சர்ஸ்- மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணிகள் மோதின.

நாணய சுழற்சியில் வென்ற சிட்னி சிக்சர்ஸ் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. அதன்படி லம்ப், ஹாடின் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். லம்ப் 15 ஓட்டங்களிலும், ஹாடின் 2 ஓட்டங்களிலும் அவுட்டாகினர்.

அதன்பின் வந்த ஹென்றிக்யூஸ் 41 ஓட்டங்கள் எடுத்து காயம் காரணமாக வெளியேறினார். அடுத்து வந்த சில்க் 28 பந்தில் 35 ஓட்டங்கள் எடுக்க சிட்னி சிக்சர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 139 ஓட்டங்கள் சேர்த்தது.

பின்னர் 140 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணி களம் இறங் கியது. அந்த அணியின் தொடக்க வீரர்கள் ஸ்டானிஸ் 0, லூக் ரைட் 8 என அடுத்தடுத்து அவுட் ஆனார்கள். ஆனால், அதன்பின் வநத மக்ஸ் வெல், ஹேண்ட்ஸ்காம்ப் சிறப்பாக விளையாடினார்கள். மக்ஸ்வெல் 36 பந்தில் 50 ஓட்டங்களும், ஹேண்ட்ஸ்காம்ப் 40 பந்தில் 52 ஓட்டங்களும் சேர்த்தனர்.

அதன்பின் வந்த டேவிட் ஹசி அவுட்டாகாமல் 15 பந்தில் 24 ஓட்டங்கள் எடுக்க மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணி 18.4 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 143 ஓட்டங்கள் எடுத்து 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (க)



# அழகுசாதன கடையில் திருட்டு 4 பெண்களுக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பகுதியில் உள்ள அழகு சாதன விற்பனை நிலையத்தில் அழகுசாதன பொருட்களை திருடிய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 4 பெண்களையும் எதிர்வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதிபதி எஸ். சதீஸ்தரன் உத்தரவிட்டுள்ளார்.

மானிப்பாயில் உள்ள அழகுசாதன விற்பனை நிலையத்தில் கடந்த 23 ஆம் திகதி பொருட்கள் வாங்குவதற்கென கடைக்குள் சென்ற 4 பெண்கள் பெறுமதி மிக்க பொருட்களை களவாடிச்சென்றுள்ளனர். குறித்த சம்பவம் கடையில் உள்ள சீசீடிவி கமெராவில் பதிவாகியுள்ளது.

அதை பார்வையிட்ட கடை ஊழியர்கள் 4 பேர் குறித்த பெண்களை அடையாளம் கண்டபின்னர் நேற்று முன்தினம் அவர்களின் வீட்டுக்கு சென்று அவர்களை மானிப்பாயில் உள்ள கடைக்கு அழைத்து வந்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

அதில் சாவகச்சேரியை சேர்ந்த 2 பெண்களும் சுன்னாகத்தை சேர்ந்த 2 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இவர்கள் கடத்தப்பட்டுள்ளார்கள் என பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து பொலிஸார் குறித்த இடத்துக்கு வந்து 4 பெண்களையும் அவர்களை விசாரணை செய்த 4 ஆண்களையும் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

இவர்களை நேற்றைய தினம் நீதிமன்றில் முற்படுத்திய போது 4 பெண்களையும் எதிர்வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும், பொலிஸில் முறைப்பாடு செய்யாமல் பெண்களை விசாரணை செய்ததற்காக 4 ஊழியர்களையும் எதிர்வரும் 11 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (எ-9)

# புலிகளின் பிஸ்டல்களுடன் முன்னாள் சிப்பாய் கைது!

விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவின் பிஸ்டல் அணியினர் பயன்படுத்திய இரு கைத்துப்பாக்கிகளுடன் முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

செவனகல பொலிஸார் கடந்த மூன்று மாதங்களாக நடத்திய விசாரணைகளின் பிரகாரமே இவர் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்டவர் இராணுவத்திலிருந்து தப்பிவந்து பின்னர் சட்டபூர்வமாக அதிலிருந்து விலகியவர் (வயது 45 ) என்று பொலிஸார் தெரிவித்தனர்.

செவனகல பொலிஸாருக்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் கிடைத்த இரகசிய தகவலொன்றின் பிரகாரம் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துவந்த நிலையிலேயே சந்தேகநபர் செவனகல, கொவுல்ஹான பகுதியிலுள்ள வீடொன்றில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 13 ரவைகளும் மீட்கப்பட்டுள்ளன. புலிகள் அமைப்பின் பிஸ்டல் அணியினர் பயன்படுத்திய கைத்துப்பாக்கிகளையே இவர் வைத்திருந்தார் எனத் தெரிய வந்துள்ளது.

இவற்றைப் பயன்படுத்தி கொலைகள் செய்யப்பட்டுள்ளனவா என்பது தொடர்பிலும் விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட முன்னாள் இராணுவச் சிப்பாய் நேற்று எம்பிலிப்பிட்டிய நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். (எ-11)

## தமிழ் மக்களின்...

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், தமிழ் மக்களின் நீண்டகால பிரச்சினைகள் என்னவென்பது எமக்கு நன்றாகவே தெரியும். அவர்களின் சொந்த இடங்களை அபகரித்தமை, சட்டவிரோதமாக அல்லது அநாவசியமாக கைது செய்தமை, அவர்களின் உரிமைகளை பெற்றுக்கொள்வதில் உள்ள தடைகள் என்பனவே தமிழ் மக்கள் நீண்டகாலமாக அனுபவித்து வரும் பிரச்சினைகளாகும்.

இந்த விடயங்களை கடந்த காலத்தில் அரசாங்கம் சரியாக செய்து கொடுக்காத காரணத்தினால் தான் சர்வதேச தரப்பின் மீது நம்பிக்கை கொண்டு அவர்கள் செயற்பட்டு வருகின்றனர். இதில் குறைகூறும் வகையில எதுவும் இல்லை. ஆனால் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் தமது பாதையை சரியாக தெரிவுசெயயாமையே பிரச்சினையாக உள்ளது. தமிழ் மக்களின் பிரச்சினைகளை அரசாங்கத்துடன் பேசி அவர்களின் சலுகைகளை வென்றுகொள்ள வேணடும். அதற்கு அரசாங்கம் தயாராகவே உள்ளது. அதேபோல் அடிப்படை பிரச்சினைகளை பூர்த்தி செய்து வடக்கு கிழக்கு பகுதிகளையும் அபிவிருத்தி அடையச் செய்யவேண்டும். அதை விடுத்து போர்க்குற்றம் என்ற ஒன்றை மாத்திரம் பிடித்துக்கொண்டு சர்வதேசத்தின் பின்னால் பயணிப்பதால் எந்த நன்மைகளும் கிடைக்கப் போவதில்லை.

அதையும் தாண்டி போர்க்குற்ற விசாரணைகள் மட்டுமே தமிழ் மக்களின் பிரச்சினை என்றால் அதற்கு தீர்வு விரைவில் கிடைத்து விடும். இறுதிக்கட்ட யுத்தத்தில் இடம்பெற்ற போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பில் உண்மைகளை கண்டறியும் பொறிமுறைகள் அனைத்தையும் நாம் முன்னெடுத்து வருகின்றோம். அதேபோல் காணாமல்போனோர் தொடர்பில் விசாரணைகளும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதையும் தாண்டி உள்ளக விசாரணைகள் மற்றும் சர்வதேச ஒத்துழைப்புடன் கூடிய ஆலோசனைகளை பெற்று அடுத்தகட்ட விசாரணைகளை முன்னெடுக்கவும் அரசாங்கம் தயாராகிக் கொண்டிருக்கின்றது.

அதேபோல் போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பில் நீதிமன்ற சுயாதீன செயற்பாடுகளுக்கென விசேட சட்டமூலம் ஒன்றையும் அடுத்த ஆண்டு நடுப்பகுதிக்குள் கொண்டுவர தீர்மானித்துள்ளோம். ஆகவே போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பில் அரசாங்கம் தெளிவாக தமது நகர்வுகளை முன்னெடுத்து வருகின்றது. அதேபோல் அரசியல் பிரச்சினை மற்றும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் புதிய அரசியல் அமைப்பு அமையும். நீண்டகால பிரச்சினைகளை தீர்க்க வேணடும் என்ற நிலைப்பாட்டில் நாம் உள்ளோம். ஆகவே அடுத்த வருட ஆரம்பம் நாட்டு மக்களுக்கு நன்மையளிக்கும் வகையில் அமையும் என்பது சந்தேகம் இல்லை.

மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் படிப்படியாக ஏனைய பிரச்சினைகளை தீர்க்க முடியும். ஆகவே அதற்கேற்றால் போல் தமிழ் அரசியல் கட்சிகளும் தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும். அதை விடுத்து சர்வதேச தேவைக்காகவும், புலம்பெயர் அமைப்புகளின குறுகிய நோக்கத்தை நடைமுறைப்படுத்தவும எவரும் நாட்டுக்குள் குழப்பத்தை ஏற்படுத்த வேண்டாம். வெறுமனே ஒருசில காரணங்களை முக்கியத்துவப்படுத்தி, தமிழ் மக்களையும் திசைதிருப்பி வென்றெடுத்த ஜனநாயகத்தை குழப்ப வேண்டாம் என குறிப்பிட்டார். (எ-11)

## புதிய கட்சி உரு...

எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அப்படியான அணிகள் இணைந்து வலுவான எதிர்க்கட்சியை உருவாக்குவது அனைவரதும் பொறுப்பாகும் எனவும் அவர் கூறியுள்ளார்.

தற்போதைய சூழ்நிலையை பார்த்தால் புதிய அரசியல் கட்சி உருவாகாது எனக் கூற முடியாது.

கட்சிகளில் இருந்து விரட்டப்பட்டால் அவர்கள் செல்வதற்கும் இடம் ஒன்று தேவை. வலுவான எதிர்க்கட்சியை உருவாக்கும் பொறுப்பு அனைவருக்கும் இருக்கின்றது எனவும் முன்னாள் ஜனாதிபதி கூறியுள்ளார்.

அதேவேளை எதிர்க்கட்சியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைய தயாராக இருப்பது குறித்து தனக்கு தெரியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை காட்டிக் கொடுத்தவர்கள் இன்று அரசியலில் இருந்த போதிலும் கட்சியை காட்டிக்கொடுக்காத ஒரே நபர் நான்.

தற்போதைய அரசாங்கம் எதிர்க்கட்சியுடன் இணைந்து முன்னெடுக்கப்படுகிறது. வலுவான எதிர்க்கட்சி இல்லாமல் போனால், அரசாங்கம் தவறாக செல்லும். இந்த அரசாங்கத்திற்கு சரியான வழியை காட்ட வலுவான எதிர்க்கட்சி அவ்சியம் என்றும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (எ-11)

## சந்தேக நபர்...

நேற்றைய தினம் புங்குடுதீவு வித்தியா படுகொலை வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நதவான் இவ்வாறு உத்தரவிட்டார்.

மேலும் புங்குடுதீவு மாணவியின் படுகொலை வழக்கின் சான்று பொருட்களின் ஆய்வு அறிக்கை மற்றும் மரபணு பரிசோதனை அறிக்கைகள் நேற்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் அந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

இதேவேளை இந்தக் கொலை வழக்குத் தொடர்பில் விசேட நீதிமன்றம் அமைக்கப்பட்டு விசாரணை செய்யப்படும என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் கூறப்பட்ட போதும் இன்னமும் நடைமுறைப் படுத்தப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

குறித்த வழக்கு மீண்டும் எதிர்வரும் பதினோராம் திகதி எடுத்து கொள்ளப்படவுள்ள நிலையில், நீதவான் லெனின்குமார் நேற்றைய வழக்குடன் இடம்மாற்றம் பெற்று செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

## கடலில் படகு...

பிள்ளை ஜெனிபட் (வயது 28) என்பவர் உயிரிழந்ததுடன், எஸ்.ஜோர்ஜ் (வயது 42) என்பவர் காணாமற்போயுள்ளார்.

நேற்று அதிகாலை 4.30 மணிக்கு முனைப் பகுதியிலிருந்து ஒரு படகில் 3 மீனவர்கள் கடலுக்குச் சென்றுள்ளனர். கடற்கொந்தளிப்பால் அவர்களது படகு கடலில் கவிழ்ந்ததில் மூவரும் கடலுக்குள் மூழ்கியுள்ளனர்.

இதில் ஒருவர் நீந்திக் கரை சேர்ந்தார். மற்றைய ஒருவரை பிறிதொரு படகில் கடலுக்குச் சென்ற மீனவர்கள் காப்பாற்றி கரைக்கு கொண்டு வந்து வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் அவர் உயிரிழந்தார். 3 ஆவது மீனவர் காணாமற்போயுள்ளார்.

அவரைத் தேடும் நடவடிக்கையில் மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர். இது தொடர்பான விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார மேற்கொண்டு வருகின்றனர். (எ-60)

## 2020இல் மைத்...

றுக்கு தெரிவித்துள்ளார்.

எனினும் எதிர்காலம் தொடர்பில் தாம் இன்னும் திட்டமிடவில்லை என்று மைத்திரிபால குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி தேர்தலின்போது பொதுவேட்பாளராக தாம் போட்டியிட்ட வேளையிலும் தாம் நீண்ட நாட்களுக்கான திட்டத்தை கொண்டிருக்கவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை 2020ஆம் ஆணடில் ஜனாதிபதி மைத்திரிபால, பிரதமர் பதவிக்கு போட்டியிடுவார் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தரப்புக்கள் தெரிவித்துள்ளன. (எ-11)

## மகிந்த கால...

தாச, சந்திரிகா குமாரதுங்க மற்றும் மகிந்த ராஜபக்ஷ ஆகியோரின் ஆட்சிக்காலப் பகுதி இந்தப் புதிய இணைப்பில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளது.

இது தொடர்பான தகவல் உள்நாட்டு விவகார, வயம்ப அபிவிருத்தி மற்றும் கலாசார அமைச்சினால் நாடாளுமன்றத்தில் சமர்ப் பக்கப்பட்ட அறிக்கை ஒன்றில் குறிப்பிடப் பட்டுள்ளது.

அத்துடன் இலங்கையில் இடம் பெற்ற போர் தொடர்பிலான விரிவான விபரங்களும இந்தப் புதிய இணைப்பில் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## அன்டனோவ் மீது...

ஏற்றிக்கொண்டு பலாலியில் இருந்து கொழும்பு இரத்மலானை விமான நிலையத்தை நோக்கி பயணித்து கொண்டிருந்த அன்டனோவ் விமானம் வில்பத்து வனப் பகுதியில் வைத்து புலிகளின் ஏவுகணை தாக்குதலுக்கு உள்ளாகியது.

இந்த சம்பவத்தில் ரஷ்ய விமானி உட்பட பாதுகாப்பு படையை சேர்ந்த 32 பேர் பலியாகினர்.

இந்த சம்பவம் தொடர்பான வழக்கை எதிர்வரும் ஜனவரி 12-ம் திகதி முதல் தொடர்ந்தும் விசாரணைக்கு எடுக்குமாறு அனுராதபுரம் விசேட மேல் நீதிமன்ற நீதிபதி திருமதி சுவர்ணாதிபதி நேற்று உத்தரவிட்டுள்ளார்.

புலவன் என்ற இராசதுரை ஜெகன், சின்னதிலகன் என்ற நீர்வேலி நல்லதம்பி சிவலிங்கம் ஆகிய புலிகளின் ஏவுகணை படைப்பிரிவின் முன்னாள் உறுப்பினர்களுக்கு எதிராக இந்த வழக்கு விசாரணை நடைபெறுகிறது. இந்த சந்தேக நபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (எ-11)

## 24 எம்.பிக்கள்...

இதனை கூறியுள்ளார்.

பயங்கரவாதத்தை தோற்கடிக்கவும் பிரிவினைவாதத்தை தோற்கடிக்கவும் நாங்கள் பாரிய சண்டையில் ஈடுபட்டோம்.

இந்த வெற்றியை தென் பகுதி மக்களை விட வடபகுதி தமிழ் மக்களே அதிகமாக அனுபவித்து வருகின்றனர்.

கடந்த ஒரு வருடத்தில் நாட்டில் எதுவும் நடைபெறவில்லை. நாங்கள் மேற்கொண்டு வந்த பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளன.

வரவு செலவுத்திட்டம் பற்றி பேசுவதற்கு எதுவுமில்லை. இன்னும் மூன்று மாதங்களில் பொருட்களின் விலைகள் எப்படி உயர போகிறது என்பதை காணமுடியும்.

அரசாங்கம் என்ற வகையில் மற்றவர்கள் மீது குற்றம் சுமத்தாது, மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதை செய்ய வேண்டும் எனவும் மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# முதலமைச்சர் இராணுவத்தை வணங்க வேண்டுமாம்!

## ஹெல உறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் படையினரை நாள் ஒன்றுக்கு மூன்று தடவைகளேனும் வணங்க வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

விக்னேஸ்வரன் குறைந்தபட்சம் நாள் ஒன்றுக்கு மூன்று தடவைகள் படையினரை மண்டியிட்டு வழங்க வேண்டுமெனத் தெரிவித்துள்ளார். விக்னேஸ்வரனின் உயிர் பாதுகாக்கப்பட்டதும் முதமைச்சர் பதவி கிடைத்ததும், படையினர் தமிழீழ விடுதலைப் புலிகளை தோற்கடித்த காரணத்தினாலாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான ஓர் பின்னணியில் எமது பாதுகாப்புப் படையினரைக் கொண்டு வடக்கின் வடிகால்களை சுத்தப்படுத்த வேண்டுமென வட மாகாண முதலமைச்சர் வெளியிட்டுள்ள கருத்து கண்டிக்கப்பட வேண்டியது என அவர் தெரிவித்துள்ளார்.

படையினரை இழிவுபடுத்தும் நோக்கில் இவ்வாறான கருத்து வெளியிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இனவாத அடிப்படையிலேயே வட மாகாண முதலமைச்சர் இவ்வாறான கருத்தை வெளியிட்டுள்ளதாகத் அவர் தெரிவித்துள்ளார்.

ஜாதிப் பிரிவினை கடுமையாக காணப்படும் இந்து சமூகத்தில் தூய்மைப் படுத்தும் தொழில்களில் ஈடுபடுவோர் மிகுந்த இழிந்த அல்லது தாழ்ந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள் எனவும், படையினரை இழிவுபடுத்தும் நோக்கில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## முகமூடிக் கொள்ளையர்களால்...

வதிரியிலுள்ள யோ.சிந்துஜன் என்பவரது வீட்டிற்குள் புகுந்த திருடர்கள் அங்கிருந்தவர்களை அச்சுறுத்தி சுமார் 3 1/2 பவுண் தங்க நகைகளையும், டோச் லைட், மரம் அரியும் வாள் மற்றும் சைக்கிள் என்பவற்றை எடுத்துச் சென்றுள்ளனர்.

அங்கு திருட்டு வேலையை முடித்துக் கொண்ட நால்வர் அடங்கிய அக் கொள்ளையர் குழு பின்னர் இரவு 11.30 மணியளவில் அதே இடத்தைச் சேர்ந்த சி.யசோதினி என்பவரது வீட்டிற்குள் நுழைந்துள்ளது.

அங்கு இருந்தவர்களை ஆயுதம் காட்டி அச்சுறுத்திய முகமூடிக் கொள்ளையர் குழு அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த 125 1/2 பவுண் தங்க நகை மற்றும் 15 ஆயிரம் ரூபாய் ரொக்கப்பணம் என்பவற்றை கொள்ளையிட்டுச் சென்றுள்ளது.

இதே வேளை சிந்துஜன் என்பவரின் வீட்டில் திருடப்பட்ட சைக்கிள் வடமராட்சி கிழவி தோட்டத்தில் உள்ள வீடு ஒன்றில் நிறுத்திவிட்டு அங்கிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றை திருடிச் சென்றுள்ளனர்.

இதேவேளை திருடிய மோட்டார் சைக்கிள் வல்லைப் பகுதியில் இருந்து நேற்று மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இத்திருட்டுச்சம்பவங்கள்தொடர்பாக மோப்பநாய், மற்றும் தடயவியல் நிபுணர்களைக் கொண்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ள நெல்லியடிப் பொலிஸார் சந்தேகத்திற்கு இடமான முறையில் யாரும் நடமாடினால் உடனடியாக 021 - 226 3222 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தெரியப்படுத்துமாறு கோரியுள்ளனர்.

வடமராட்சியில் இடம்பெறும் தொடர் திருட்டுக்களால் அப்பகுதி மக்கள் அச்சத்தில் மூழ்கியுள்ளனர். (எ-11,60)

## இராணுவ தலைமை பதவிக்கு...

போதிலும், படைத்தரப்பின் தலைமை அதிகாரி நியமனங்களின் போது, அவருக்கான வாய்ப்பு இரண்டு தடவைகள் ஏற்கெனவே தவிர்க்கப்பட்டிருந்தது.

இவருக்குப் பதிலாகவே மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க மற்றும மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் ஆகியோர் படைத்தரப்பின் தலைமை அதிகாரிகளாக முன்னர் நியமிக்கப்பட்டிருந்தனர்.

படைத்தரப்பின் தலைமை அதிகாரி பதவிக்கான போட்டியில் காலாற படைப் பிரிவைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் சுமேத பெரேரா மற்றும் பொறியியல் படைப்பிரிவைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் சன்ன குணதிலக ஆகியோர் இருக்கின்றனர். இவர்கள் இருவரும் மைத்துனர்களாவர்.

அதேவேளை, மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸுடன் பணியில் சேர்ந்த மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வா, மேஜர் ஜெனரல் சுமித் மானவடு மற்றும் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன ஆகியோர் 55 வயதை அடையும் நிலையில் ஓய்வு பெறவுள்ளனர். மேஜர் ஜெனரல்களுக்கு 55 வயதுக்குப் பின்னர் சேவை நீடிப்பு வழங்குவதில்லை என்று அரசாங்கம் முடிவு செய்துள்ள நிலையில், 24 மேஜர் ஜெனரல்கள் அடுத்த ஆண்டு ஓய்வு பெறவுள்ளனர்.

அத்துடன், படைத்தளபதி லெப். ஜெனரல் கிரிசாந்த டி சில்வாவும் அடுத்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி ஓய்வு பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)


O/L பரீட்சையில் நல்ல பெறுபேறு எடுத்தும் A/L பரீட்சையில் தேறவில்லையா...

உங்களுடன் படித்து பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்களை முந்திக்கொண்டு பட்டத்துடன் தொழில்வாய்ப்பு பெறுங்கள்!

With O/L 3 மாத Entry Level கற்கைநெறியுடன்
With English, IT, Personal Development & Career Counseling

விரும்பிய துறையில் பட்டதாரி ஆகி, பணம் சம்பாதிக்க...

Certificate (1 Year) | Diploma (2 Years) | Bachelors Degree (3 Years)

in

| Business, Marketing & Finance | Information Technology |
|---|---|
| Hospitality Management | Communication & Media Studies |
| Creative Design (Photography & Graphics) | Creative Multimedia (Videography & Editing) |

கற்கைநெறிக்காலத்தில் பகுதிநேர / கற்கைநெறி நிறைவில் முழுநேர — வேலைவாய்ப்பு உத்தரவாதம்*

வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு — STUDENT VISA WORK VISA — ஏற்பாடு!

University of Sunderland UK | UNIVERSITY OF WOLLONGONG AUSTRALIA | YORK UNIVERSITÉ UNIVERSITY Canada

UK / Australia / New Zealand / Canada / Malaysia / Singapore

JANUARY INTAKE — ஜனவரி 11க்கு முன் பதிவு செய்வோருக்கு 50% கழிவு

இம்முறை O/L பரீட்சைக்கு தோற்றியவர்களும் இணையலாம்

Get Set for Careers & Take Off Your Dreams

SIKARAM Edu Solutions

மேலதிக விபரங்களுக்கு www.sikaram.lk 0777 32 4004

275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)

* Conditions apply (C-3237)



NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
ஆரம்பம் 01.01.2016 வெள்ளி காலை 9.00 மணி
A/L 2018
கலை வர்த்தகம்
கணிதம் உயிரியல்
தொழில் நுட்பம்
Note: NEC கல்வி நிறுவனத்தின் 10 வருட நிறைவினை முன்னிட்டு 27.12.2015 தொடக்கம் 01.01.2016 வரைக்கும் அனுமதி பெறும் அனைத்து மாணவர்களுக்கும் அனுமதிக்கட்டணம் இலவசம்
(C-3235)
புதிய அனுமதிகளை இன்றுமுதல் பெற்றுக்கொள்ளலாம்.


## வடக்கில் பல...

பெய்துள்ளது.

நேற்று முன்தினம் காலை 8.30 மணி தொடக்கம் நேற்றைய தினம் காலை 8.30 மணி வரை 108.1 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இன்றையதினம் வடக்கு கிழக்கு, வடமத்தி மற்றும் ஊவா மாகாணங்களில் ஆங்காங்கே மழை பெய்யும்.

அத்துடன் இன்றையதினம் பிற்பகல் 2 மணிக்கு பின்னர் இடியுடன் கூடிய மழை ஏனைய பிரதேசங்களில் பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வடகிழக்கு பருவ பெயர்ச்சி காற்றானது பலப்படைந்து அதன் வேகம் மணிக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடும். அதனால் வடகிழக்கு கடற்பகுதிகள் சீற்றம் கொண்டு காணப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-9)


உடன் தேவை
★ வீட்டில் தங்கியிருந்து சமையல் செய்து குழந்தையை பராமரிக்கக் கூடிய வீட்டுப் பணிப்பெண் தேவை.
★ வீடு பராமரிப்பவர் (ஆண்)
தொடர்புகளுக்கு : (3001)
0777911219

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான

DMI COMPUTER EDUCATION

புதிய பிரிவு ஆரம்பம்
பிரிவு 1 - 28/12/2015 (Mon) 9:30 a.m.
பிரிவு 2 - 02/01/2016 (Sat) 9:30 a.m.

IT & English Diploma

Dip.in Information Technology
Dip.in Office Automation
Dip.in PC Application
Dip.in Microsoft Office
Dip.in Web Designing
Hardware , Mulitmedia

யாழில் முதன்மை நிலை வகிக்கும் Spoken English Veta Fluency Diploma





☑ அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
☑ Microsoft Online பரீட்சைகளூடாக Microsoft - அமெரிக்காவில் இருந்து தலைமை செயலதிகாரியின் கையொப்பத்துடனான Microsoft Specialist சான்றிதழ்கள்.
☑ இலகு தவணைக்கட்டண வசதிகள். ☑ இங்கிலாந்து, இந்திய பாடநூல்கள்.

அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கல்விக்கு

DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) | M.M.V. வீதி, (மத்திய மகா வித்தியாலயம் முன்பாக) | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் | No.19, A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய மகா வித்தியாலயம் முன்பாக) |
| Tel.: 021-222 4403 | Tel.: 021-226 2470 | Tel.: 021-227 0775 | Tel.: 021-224 1970 | Tel.: 021-228 5655 |

(C-3232)



BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் கற்கை நெறிகள்

Spoken English with Grammar - Quick Learning Course 1½ Months
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும். மாணவர்களின் நலன் கருதி Dictionary, CD/DVD, Tutes போன்றவை இலவசமாக வழங்கப்படும்.

இக் கற்கை நெறிகள் பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.

Diploma In English 2 Months
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி, உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதது. இவை யாவையும் கருத்திலே கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. Spoken English course முடித்த அனைவரும் பயில வேண்டிய பாட நெறி.

★ வகுப்புகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்
★ எமது கற்கை நெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது
★ Excellent Teacher's Panel & Individual Attention
★ கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழுவாக வரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.

(C-3231)

உத்தியோகத்தர்கட்கு, மாணவர்கட்கு சனி, ஞாயிறு வகுப்புக்கள்
02.01.2016 காலை 10.00, மாலை 2.30 ஆரம்பமாகின்றது

Batches Start On
30.12.2015@10.00am | 06.01.2016@9.00am
02.01.2016@9.00am | 04.01.2016@10.00am | 09.01.2016@9.00am

British College of Higher Studies
No.15, Sirambiyady Lane (Off Stanley Road), Above Sathosa SM, Jaffna. Tel :021-2224550
HotLine(S) 0770365728, 0776555677, 0777222422, 0777585913



" ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ "

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

கொண்டவனைக் கடவுளென மதித்துப் போற்றி
குடும்பத்தைக் கோயிலெனப் பூசித்து ஓம்பி
அன்பென்னும் நீர் பொழிய அள்ளிப் பாச்சி
கள்ளமற்ற உள்ளத்தோடு கருத்து வைத்து
பண்பாக மகிமையோடு மக்களெமை வளர்த்து
புண்ணியவதி எனப் பலபேர் ஏற்றிப் போற்ற
ஆண்டிரண்டு கழிந்ததம்மா நற்கதி சேர்ந்து
உன் செயலும் உன் நினைவும்
என்றுமே மாறாதம்மா.





அமரர்
கமலாதேவி சண்முகநாதன்
(அம்மாப்பிள்ளை)
தோற்றம் 13.08.1948
மறைவு 20.12.2013
திதி : அபரபக்க சதுர்த்தி
29.12.2015
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்
அன்புக் கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
"ஞானதீபம்"
22/12, பத்திரகாளி கோவிலடி,
சுழிபுரம்.
(C-3234)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.12.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.